بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

وَرَفَعْنَا لَكَ ذِكْرَكَ

தித்திக்கும் திருமறையில் – (நபியே!) உம்முடைய
கீர்த்தியையும் நாம் உமக்காக உயர்த்தினோம்

# ஞான வழி

அரபி மூலம்
(துஹ்ஃபத்துஸ் ஸாலிகீன் 'ஸூலுக்'
என்னும் ஞானவழி நடப்போருக்கு காணிக்கை)




ஆசிரியர்
திருக்குர்ஆன் விரிவுரையாளர், அல்லாமா
எஸ்.எஸ். முஹம்மது அப்துல் காதிர்
சாஹிப் பாக்கவி
நவ்வரல்லாஹூ மர்க்கதஹூ
அன்னாரின் மண்ணறையை அல்லாஹ் ஒளிமயமாக்குவானாக
உத்தமபாளையம் (மதுரை மாவட்டம்)

பொருளடக்கம்

**ஞானவழி**

பைஅத்து

முரீதுப் புரட்டு

நம்மவரின் கடமை

முரீது வாங்குவதின் நோக்கம்

குருவில்லாத வித்தை பாழ்

**ஆசிரியர்**

ஷெய்குத் தஃலீம்

ஷெய்குத் தர்பியத்து

ஷெய்குத்தரக்கீ

**ஆசிரியரின் தன்மைகள்**

மெய்யான முரீது

**முதலாவது ருக்னு பசித்திருத்தல்**

நோன்பின் பலன்

இரண்டாவது ருக்னு விழித்திருத்தல்

தஹஜ்ஜுதுத் தொழுகை

மூன்றாவது ருக்னு மௌனம்

**நான்காவது ருக்னு தனித்திருத்தல்**

அப்தால்களின்

கல்வத்தின் ஷர்த்துகள்

குருவுடன் சிஷ்யன் நடந்து கொள்ள வேண்டிய ஒழுங்குகள்

தர்க்கவாதம் செய்யும் முரீது பற்றி

ஷெய்கைச் சந்தித்தல்

இதர ஷெய்குகளைச் சந்தித்தல்

மஜ்லிஸுகள்

ஷெய்கிடம் எதிர்பார்க்கக் கூடாத காரியங்கள்

முரீது சகோதரர்களின் உறவு

பிறரிடம் குறைகாணல்

தங்கரியம் செய்யத் தகாத காரியம்

உன்னை உயர்வாக மதிக்காதே

தலைமைப் பதவிக்கு ஆசை கொள்ளாதே

தவிர்த்துக் கொள்ள வேண்டியவை

ஹலாலான உணவு

முரீது நடந்து கொள்ள வேண்டிய ஒழுங்குகள்

தரீக் போதிக்கும் காரியங்கள்

பெண்களும் ஷெய்குகளும்

அவசரப்படலாகாது

எல்லா மதுஹபுகளையும் பேண வேண்டும்

பைஅ்த்தை ரத்துச் செய்தல்

ஷெய்கு தேவைதானா?

காமிலான ஷெய்கு

ஷெய்கின் லட்சணங்கள்

ஃபர்லான காரியங்களின் அவசியம்

அல்இமாமுல் அஃலம்

இவ்வுலகிற்கு மனிதன் வந்ததன் நோக்கம்

ஞான மார்க்கத்திற்கு தலைமை தாங்கத் தகுதியுள்ளவர் எவர்?

கராமத்துகள்

ஸஹாபிகளுக்கு சொற்பமாகவே கராமத்துகள் நிகழ்ந்தன

முஃஜிஸாவுக்கும் கராமத்துக்கும் உள்ள வித்தியாசம்

இக்லாஸும் இஸ்தித்ராஜும்

முத்தக்கீ

ஒலிமார்கள்

ஒலிமார்கள் பதவிக்கு வரும் முறை

ஒலிமார்கள் முத்தன்மைகள்

ஒலிமார்களை பகைக்கலாகாது

ஒலிமார்களைப் பார்க்கச் செல்வோர் நடந்து கொள்ள வேண்டிய ஒழுங்கு

முஹிய்யுத்தீன் அப்துல் காதிரில் ஜீலானி (ரஹ்)
அவர்களின் உயரிய அந்தஸ்து
இப்னுல் ஸக்கா அடைந்த கதி
அபூஸயீத் அப்துல்லாஹ் (ரஹ்) அடைந்த லௌகீக அந்தஸ்து
படிப்பினைகள்

## அஸ்ஸலாத்துந் நாரிய்யா (தமிழ் ஒலி)

**அல்லாஹு ம்ம ஸல்லி ஸலாத்தன் காமிலத்தன் வஸல்லிம் ஸலாமன் தாம்மன் அலா ஸய்யிதினா முயம்மதினில்லதீ தன்ஹல்லு பிஹில் உகது வதன் ஃபரிஜு பிஹில் குறபு வதுக்ளா பிஹில் ஹவாயிஜு வதுனாலு பிஹிர் ரகாயிபு வஹு ஸ்னுல் கவாதிமி வயுஸ்தஸ்கல் கமாமு பீவஜ்ஹிஹில் கரீமி வஅலா ஆலிஹி வஸஹ்பீஹி ஃபி குல்லி லம்ஹதின் வனஃபஸின் பிஅததி குல்லி மஃலூமின் லக்**

### அஸ்ஸலாத்துந் நாரிய்யா மொழியாக்கம்

இறைவா! யாரைக் கொண்டு சிக்கல் எனும் முடிச்சுகள் அவிழ்ந்து, துன்பங்கள் நீங்கி, தேவைகள் நிறைவேற்றப்பட்டு, எவருடைய சங்கைமிகு வதனத்தின் பொருட்டால் **மழை** பெய்யத் தேடப்படுமோ அத்தகைய எங்கள் **தலைவர்** முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் **அவர்களின்** மீதும் அன்னாரின் குடும்பத்தினர் மீதும் ஒவ்வொரு வினாடியும் ஒவ்வொரு மூச்சிலும் நீ அறிந்துள்ள பொருட்களின் எண்ணிக்கையளவும் பரிபூரணமான ஸலவாத்தும், ஸலாமும் அருள்வாயாக !

**நிய்யத் முராது ஹாஸில்**
**நாட்டம் தேட்டம் சித்தி பெறும்**

بسم الله الرحمن الرحيم

الحمد لله الذي نحمده ونستعينه ونستغفره ونؤمن به ونتوكل عليه
ونعوذ بالله من شرور انفسنا ومن سيئات اعمالنا من يهده الله
فلا مضل له ومن يضلل فلا هادى له ونشهد ان لا اله الا الله
وحده لا شريك له ونشهد ان محمدا عبده ورسوله

### பைஅத்

நன்மையாகவோ அல்லது தீயதாகவோ இருக்கிற ஒரு காரியத்தை இனிமேல் நிறைவேற்றுவதாக உறுதி மொழியளிப்பதற்கு **சத்தியம்** செய்தல் என்று பெயர். சன்மார்க்கக் காரியங்களைத் தன்னால் இயன்ற வரையில் தவறாமல் நிறைவேற்றுவதாக குரு அல்லது ஆசானிடம் **சத்தியம்** செய்வதற்கு **அஹ்து** என்று பெயர். சத்தியத்திற்குரிய சொற்களை குரு அல்லது ஆசான் கூறி அதனை மாணவன் அல்லது சிஷ்யன் சொல்லி பிரதிக்ஞை எடுத்துக் கொள்ளச் செய்வதற்கு **தல்கீன்** என்று பெயர். இது முடிந்த பின்னர் மாணவன் அல்லது சிஷ்யன் சன்மார்க்க விஷயத்தில் நடந்து கொள்ள வேண்டிய முறைகளைக் குறித்து உபதேசிப்பதற்கு வஸிய்யத்து என்று பெயர். இம்மூன்று காரியங்களுக்கும் பொதுப் பெயர் **பைஅத்** என்பது. இதனைத்தான் பொது மக்கள் முரீது வாங்குதல் என்று கூறுவர். முரீது கொடுத்தவருக்கு ஷெய்கு (குரு) என்றும், முரீது வாங்கியவருக்கு சிஷ்யர் என்றும் பெயர். சன்மார்க்க விஷயத்தில் இவ்வாறு உறுதி எடுத்துக் கொள்வது அவசியமா? உறுதி எடுத்துக் கொள்ளாவிடில் முஸ்லிமாக இருக்க முடியாதா? என்ற கேள்விகள் இங்கு உண்டாகின்றன. சன்மார்க்கத்தைத்

தழுவுவதே உறுதிதான். இறைவனுக்கு எதையும் இணை வைப்பதில்லை என்றும் வணக்கத்துக்குரியவன் அவன் ஒருவன்தான்: அவனையே வணங்குவேன் என்றும், ஏக தெய்வ வணக்க முறைகளைக் கற்றுக் கொடுத்த திரு நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹுதஆலாவின் தூதராக இருக்கிறார்களென்றும், அவர்களின் கட்டளைக்கு முற்றிலும் கீழ்ப்படிந்து நடக்கிறேன் என்றும் உறுதி கொண்டு, உறுதி மொழி யளிப்பது தான் இஸ்லாமைத் தழுவுதல். ஆகவே, இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவி முஸ்லிமாக இருப்பதே மேற்கண்ட மூன்று காரியங்களுமாகும். ஆதலால், இம்மூன்றையும் நிறைவேற்றாத வரையில் எவரையும் பூரணமான முஸ்லிம் என்று கூற முடியாது. ஆயினும், முஸ்லிமாக இருக்கிற ஒருவர் அதே காரியத்தை வேறு ஒரு முஸ்லிமிடம் கூறி நிறைவேற்ற வேண்டுமா? என்பதுதான் இங்குள்ள முக்கிய பிரச்சனை. முஸ்லிமாக இருக்கிற ஒருவர் வேறு ஒரு முஸ்லிமிடம் அதனை மீண்டும் செய்ய வேண்டும் என்பது அவசியமில்லை. அவ்வாறு செய்து கொள்ளாவிடில், அவர் முஸ்லிம் அல்ல என்பதும் ஏற்படாது. என்றாலும், முன்னர் ஒரு முறை செய்த பிரதிக்ஞையை மீண்டும் ஒருவரிடம் கூறிப் புதுப்பித்துக் கொள்வது தவறான காரியமல்ல. மேலும் அவ்வாறு புதுப்பித்துக் கொள்வது விரும்பத்தக்க காரியமாகவும் இருக்கிறது.

## முரீது புரட்டு

பிறரிடம் அரசியல் அடிமையாக இருந்து சுதந்திரம் பெறுவதற்காக கிளர்ச்சி செய்த காலத்தில், வருடந் தோறும் குறிப்பிட்ட ஒரு தேதியில் குறிப்பிட்ட ஓரிடத்தில் ஒன்று கூடி, நம்முடைய அரசியல் தலைவர்களின் முன்னிலையில் சுதந்திரப் பிரதிக்ஞை செய்து கொண்ட நாம் நம்முடைய மத பிரதிக்ஞையை,



நம்முடைய மதத் தலைவர்களிடம் கூறிப் புதுப்பித்துக் கொள்வதை ஆட்சேபனை செய்ய மாட்டோம் என்பது மட்டுமல்ல. அவ்வாறு புதுப்பிப்பதை வரவேற்போம் என்பது தெரிந்த விஷயம். இதனைத்தான் மதத் தலைவர்கள் முஸ்தஹப்பு (விரும்பத் தக்கது) என்ற வார்த்தையின் மூலம் நமக்கு அறிவுறுத்துகின்றனர்.

சன்மார்க்க பிரதிக்ஞையை எவரிடம் எடுத்துக் கொள்ள வேண்டும்? அவருடைய தன்மை எவ்வாறிருக்க வேண்டும்? என்ற வினாக்கள் இங்கு எழுகின்றன. இக்காலத்தில் முரீது கொடுப்பதாக பலர் கூறிக் கொண்டு நாடெங்கும் பிரயாணஞ் செய்து பொது மக்களில் அநேகரை நேரில் கண்டு பேசி முரீது வாங்கிக் கொள்ளுமாறு தூண்டுகின்றனர். முரீது வாங்குவதற்கு ஒரு விதமான கட்டணத்தை ஏற்படுத்தி அதனை வசூலும் செய்கின்றனர். அப்புறம் வருடந்தோறும் அல்லது இரண்டு மூன்று வருடங்களுக்கொரு முறை முரீது வாங்கியவரிடம் ஏதேனும் ஒரு தொகையை வசூல் செய்கின்றனர். முரீது கொடுத்த அந்த ஷெய்கு முரீது வாங்கிய அந்த சிஷ்யருக்கு உருப்படியான முறையில் வழி காட்டியதாகத் தெரியவில்லை. தொழுது கொண்டிருந்த சிலர் முரீது வாங்கிய பின்னர் தொழுவதை நிறுத்தி விட்டதையும், ரமலான் மாதத்தில் தவறாமல் நோன்பு நோற்றுக் கொண்டிருந்த சிலர் முரீது வாங்கிய பின்னர் நோன்பு நோற்காதிருப்பதையும், உறவினர்களுக்கும் ஏழை எளியாருக்கும் பண உதவியும் தான தர்மங்களையும் செய்து கொண்டிருந்தவர்களிற் பலர் இவற்றை நிறுத்தி விட்டு, தங்களின் சகல தர்மச் செலவுனையும் ஷெய்கு என்னும் குருவிடம் கொடுத்து விடுவதையும் காண்கிறோம். சுருங்கக் கூறின் முரீது வாங்குவதற்கு முன்னர் சன்மார்க்க கிரியைகளைப் பரிபூரணமாக

இல்லாவிடினும் ஓரளவேனும். நிறைவேற்றிக் கொண்டிருந்த பலர் முரீது வாங்கிய பின்னர் சன்மார்க்க கிரியைகளை முற்றிலும் நிறைவேற்றாதவர்களாக மாறி விட்டதைக் காண்கிறோம். மேலும், ஷெய்கு என்றும் ஞானி என்றும், குரு என்றும் கூறிக் கொள்கிற சிலர் காவி உடைகளையோ. பச்சை உடைகளையோ, கருப்பு உடைகளையோ. தூய வெள்ளை உடைகளையோ குறிப்பிட்ட முறையில் அணிந்து கொண்டு வெளியில் வருகின்றனர். அவர்களைப் பார்த்த மாத்திரத்தில் இவர் முரீது கொடுப்பவர், ஞானி, துறவி என்று பிறர் உணருமாறு செய்கின்றனர். சன்மார்க்கக் கிரியைகளில் எதையும் அவர்கள் நிறைவேற்று வதில்லை. அவற்றை நிறைவேற்ற வேண்டியதில்லை என்றே தங்கள் சிஷ்யர்களுக்கும் உபதேசிக்கின்றனர். அல்லாஹு தஆலாவைக் காட்டிக் கொடுப்பதாகக் கூறி என்னென்ன வெல்லாமோ செய்கின்றனர். இவர்களையும் இவர்களின் சிஷ்யர்களையும் இவர்களின் செய்கைகளையும் மற்றவர்கள் பார்க்கையில் இவர்கள் சோம்பேறிக் கூட்டத்தினர் என்றும், சன்மார்க்கப் புரட்டர்கள் என்றும், முரீது கொடுத்தல் என்பது இக்கூட்டத்தார் தங்கள் தொப்பையை நிறப்புவத்றகு ஏற்படுத்திக் கொண்ட தந்திரங்கள் என்றும் கருத வேண்டியதாக இருக்கிறதே என்று சிலர் ஆட்சேபனை செய்கின்றனர்.

## நம்மவர்களின் கடமை

எந்தக் காரியத்திலும், எந்த வர்க்கத்திலும் போலிகளும் வேஷதாரிகளும் மலிந்துள்ள இக்காலத்தில். மஷாயிகுகள் என்னும் சன்மார்க்க ஞான வழி காட்டிகளிலும் போலிகள் தோன்றுவதும், அவர்கள் பொது மக்களைத் தவறான வழிகளில் இட்டுச் சென்று தங்கள் சுய நலத்தை நிறைவேற்றிக் கொள்வதும்



இயற்கையே. ஆயினும் ஒருவரை ஞானாசிரியராகக் கொள்வ தாயின், அவர் எப்படிப்பட்டவராக இருக்க வேண்டும் என்பதையும் அவரது கல்வி. அறிவு, ஞானம். நடத்தை, குணம், ஒழுக்கம் ஆகியவற்றையும் தெரிந்து, சிறந்தவரை ஞானாசிரியராகக் கொள்ளல் சன்மார்க்க நெறியைப் புரிந்து அதன்படி நடக்க வேண்டும் என்ற அவாவுள்ளவர்களின் கடமையாகும்.

## முரீது வாங்குவதின் நோக்கம்

திரு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நற்குண நல்லொழுக்கங்களைத் தெரிந்து அவற்றைப் பின்பற்றுதல்தான் முரீது வாங்குவதன் நோக்கம். சன்மார்க்க விஷயங்களில் அறியாமை, கோபம், பொறாமை, துவேஷம், கஞ்சத்தனம், தற்பெருமை, கர்வம், மமதை, பிறரை மெய்ப்பித்தல், பட்டம் பதவிகளில் ஆசை, அதிகப் பேச்சு, கிண்டல் செய்தல். பரிகசித்தல், வெளிநடப்பு, உறவினர்களைத் துரத்தல், பிறர் குறைகளை ஆராய்தல், பேராசை, துற்குணம் உட்பட நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விலக்கிய யாவும் கெட்ட குணங்களும் நடத்தைகளுமாகும், இவற்றைத் துறந்து, சன்மார்க்கக் கல்வியைப் பயின்று அறியாமை, பொறாமை, அகத் தெளிவு, தயை, காருண்யம், இரக்கம், பணிவு, நன்றி, துறவு, இறை நம்பிக்கை, அன்பு, அபிமானம், வெட்கம், நாணம், ஆராய்ச்சி, சிந்தனை, அல்லாஹு தஆலாவுக்காகவே நேசித்தல், அவனுக்காகவே கோபித்தல், எக்காரியத்திலும் நடுத்தரமாக இருத்தல், எல்லோருக்கும் இதஞ் செய்ய விரும்புதல், துஷ்டர் சகவாசமின்மை, நற்குண நல்லொழுக்கம் உட்பட திரு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஏவிய யாவற்றையும் நிறைவேற்றல் தாம் மெய்யான முரீதின்

லட்சியமாக இருத்தல் வேண்டும். முரீது வாங்கிய ஒருவர் மேலே கூறப்பட்ட துற்குண துர்நடத்தைகளைத் தவிர்த்து நற்குண நல்லொழுக்கங்களை தன்னில் உண்டாக்கிக் கொண்டால் அவரை **'முத்தக்கி'** என்றழைப்பர். இந்நிலையை அடைவதற் காகவே ஆசிரியரை தேர்ந்தெடுத்து அவரிடம் அஹ்து என்னும் தெய்வ விசுவாசப் பிரமாணம் செய்து கொடுத்து, இவ்விஷயங் களில் அவரின் கட்டளைக்கு முற்றிலும் கீழப்படிந்து நடக்க வேண்டும்.

### குருவில்லாத வித்தை பாழ்

முஸ்லிமாக இருக்கிற ஒவ்வொருவரும் வயதில் ஒரு முறை கலிமா சொல்வது ஃபர்லாக (கடமையாக) இருப்பதால் இஸ்லாம் மார்க்கத்தை தழுவுகையில் கலிமாச் சொல்கின்றனர். முஸ்லிமான பெற்றோர்களுக்குப் பிறந்தவர்கள் பருவ (பாலிகான) வயதை அடைந்தவுடன் கலிமாவைச் சொல்கின்றனர். இதுவும் தெய்வ விசுவாசப் பிரமாணம்தான், இதனை நிறைவேற்றியவுடன் மேற்கண்ட துற்குண துர் நடத்தைகளைத் துறந்து நற்குண நல்லொழுக்கங்களை கடைப்பிடிப்பதே போதுமானது. என்றாலும், குருவில்லாத வித்தை பாழ் என்றவாறு நற்குண நல்லொழுக்கங்கள் யாவை? துற்குண துர் நடத்தைகள் யாவை என்பதைப் புரிந்து கொள்ள ஒரு ஆசிரியரை தேர்ந்தெடுத்து அவர் மூலமாகப் புரிந்து கொள்வதும், பயிற்சி பெறுவதும்தான் இவ்வுலகில் தொன்று தொட்டு இருந்துவரும் பழக்கமாக இருக்கிறது. ஒருவர் புத்தகத்தைப் பார்த்து வித்தைகளைப் புரிந்து கொள்ளலாம். என்றாலும், அவற்றை அனுபவத்தில் செய்து பழகாத வரையில் அவ்வித்தைகளில் நிபுணத்துவம் பெற முடியாது. அதினும், ஏட்டுப் படிப்புடன் ஒரு நிபுணனுடன் சேர்ந்து



பாடங் கேட்டுக் கொள்ளாத வரையில் அவ்வேட்டுப் படிப்பும் சிறந்த முறையில் அமைவதில்லை. மனிதன் தன்னுடைய அறிவைப் பெருக்கிக் கொள்ள கட்புலமை(பார்வை)யையும் செவிப் புலனையும் இறைவன் அளித்துள்ளான். ஆதலால், பிறர் கூறும் உபதேசங்களைச் செவியேற்றும், பிறர் செய்வதைப் பார்த்தும்தான் மனிதன் வித்தைகளைப் பயில வேண்டியது இருக்கிறது. இதுபோல சன்மார்க்க விஷயத்தில் திருக்குர் ஆனையும், ஹதீஸ்களையும் பெரியார்கள் இயற்றிய நூல்களையும் படித்து திரு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஏவியவை யாவை? என்பதைப் புரிந்து கொள்ள முடியும். ஆயினும், ஒரு ஆசிரியரிடம் முறைப்படி பயிற்சி பெறாதவரையில், அவற்றைப் பூரணமாக உணர்ந்து கொள்ளவோ, அவற்றில் நிபுணத்துவம் அடையவோ, தன்னுடைய மனைவி மக்களுக்கு வழி காட்டவோ இயலாது. எனவேதான் முஸ்லிமாக இருக்கிற ஒருவர் ஏற்கனவே தெய்வ விசுவாசப் பிரமாணம் செய்தவராக இருந்த போதினும் தக்க பெரியார்களில் ஒருவரைத் தன்னுடைய வழி காட்டியாகவும் குருவாகவும் ஏற்று விசுவாசப் பிரமாணத்தை அவரிடம் புதுப்பித்துப் பயிற்சி பெறுவது முஸ்தஹப்பு (விரும்பத்தக்க காரியம்) என்றேற்படுத்தப்பட்டிருக்கிறது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் இஸ்லாமிய சன்மார்க்கத்தைத் தழுவ முன் வந்தவர்களுக்கு கலிமாச் சொல்லிக் கொடுத்து முஸ்லிம்களில் குறிப்பிட்ட சிலரிடம் மீண்டும் விஷேசமாக விசுவாசப் பிரமாணம் செய்வித்திருக் கிறார்கள். இவ்விசேஷப் பிரமாணத்தை ஒருவரிடம் மட்டுமல்ல, பலரிடமும் பல சமயங்களிலும் செய்வித்திருக்கிறார்கள். ஆதலால், முஸ்லிமாக இருக்கிற ஒருவர் தக்க ஆசிரியரிடம் தன்னுடைய விசுவாசப் பிரமாணத்தைப் புதுப்பித்துக் கொள்வது

சட்ட விரோதமல்ல என்பது மட்டுமில்லாமல், திரு நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் செய்ததைப் பின்பற்றிய செய்கையாகவும் இருக்கிறது.

ஒரு முஸ்லிம் தன்னுடைய விசுவாசப் பிரமாணத்தைப் புதுப்பித்துக் கொள்ள விரும்பினால், அவர் எவரிடத்தில் அதனைப் புதுப்பித்துக் கொள்ளலாம்? எவரை தனக்கு வழிகாட்டும் குருவாக ஏற்றுக் கொள்ளலாம்? அவருடைய தன்மை எவ்வாறு இருக்க வேண்டும்? என்ற பிரச்சனைகள் இங்கு உண்டாகின்றன.

¶kuç ÂØÂu¤B¬ ÃÂD¦¢ò\V®:-

**ஆசிரியர்**

ஆசிரியர்கள் மூன்று வகையினராக இருக்கிறார்கள். முதலாவது **ஷெய்குத் தஃலீம்** அதாவது கல்வி கற்றுக் கொடுக்கும் ஆசிரியர். இரண்டாவது **ஷெய்குத் தர்பியத்து** அதாவது பயிற்சியளிக்கும் ஆசிரியர். மூன்றாவது **ஷெய்குத் தறக்கி** அதாவது முன்னேற்றும் ஆசிரியர். இம்மூவகை ஆசிரியர்களிடமும் இருக்க வேண்டிய தன்மைகள் வருமாறு.

1. **"ஷெய்குத் தஃலீம்"** மக்களுக்கு நேர் வழியைக் காட்டத்தக்க அறிவும், கல்வியும் உள்ளவராக இருக்க வேண்டும். அவர் கசடறக் கற்ற மேதையாக இல்லாவிடினும், குறைந்தபட்சம் தன்னுடைய மாணவர்களுக்கு ஏற்படுகிற சந்தேகங்களையும் ஐயங்களையும் அகற்றத்தக்க அளவிலேனும் கல்வித் திறமை பெற்றிருக்க வேண்டும்.

2. **"ஷெய்குத் தர்பியத்து"** தன்னுடைய மாணவன் ஆத்மார்த்த விஷயங்களில் முன்னேறுவதற்கான முறைகளையும், அவன் வீழ்ச்சியடையும் காரணங்களையும் தெரிந்தவராக இருக்க வேண்டும். குறைந்தபட்சம் மனிதனின் ஆத்மார்த்த முன்னேற்றங்களுக்குத் தேவையான புற அமல்களையும் அக அமல்களையும் அவர் நன்கு அறிந்திருக்க வேண்டும். ஆத்மார்த்த விஷயங்களில் மனிதன் வீழ்ச்சியடைவதற்கான காரணங்கள் யாவை? என்பன போன்றவற்றிலும் நிபுணத்துவம் பெற்றிருக்க வேண்டும்.



3. **"ஷெய்குத் தறக்கி"** மனதில் ஏற்படக் கூடிய மாசுகளை அகற்றத் தக்க தெளிவும், பிறருடன் பழக வேண்டிய ஒழுங்கு முறையும், பிறரின் உதவியை எதிர்பார்க்காத அளவுக்கு கினாஅத்தும் (இருப்பதைக் கொண்டு போதுமாக்கிக் கொள்ளும் தன்மையும்) பாவங்களைத் தவிர்த்துக் கொள்ளத்தக்க இறையச்சமும், நன்மையான காரியங்களில் தீவிரமாக ஈடுபடத் தக்க இறைபக்தியும், மடமையை அகற்றத் தக்க நன்னடத்தையும், பிறரின் அபிமானத்தை அடையத்தக்க அன்பும் பெற்றிருக்க வேண்டும். இவ்வுலகச் செல்வங்களில் பேராசையின்மைத தர்ம சிந்தை, தயை, இரக்கம், கருணை, மலர்ந்த முகத்துடன் பழகுதல், பொறுமை, சகிப்புத் தன்மை, பேணுதல், பணிவு, அற்ப விஷயங்களில் ஈடுபடாமை, மீசையை வெட்டிக் கொள்ளல், தாடி வளர்த்தல், நகத்தை வெட்டுதல், கம்முகட்டு மயிர், மூக்கு உரோமம், அடிவயிற்றுக்குக் கீழுள்ள உரோமம் ஆகியவற்றை அகற்றல், துர்வாடையை அகற்றல், மிருதுவான உடைகளை அணியாமை போன்ற சுன்னத்தான காரியங்களை நிறைவேற்றல். பித்அத்து என்று சொல்லப்படுகிற காரியங்களில் முபாஹான (ஆகுமான) தாக இருப்பவற்றைக் கூடச் செய்யாமல் இருத்தல், கர்வங் கொள்ளாமை, அகங்கார மின்மை, பிறரை துச்சமாக மதியாமை, தற்பெருமையின்மை, யாவரிடத்திலும்

நல்லதையே காணல் முதலிய தன்மைகள் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

### ஆசிரியரின் தன்மைகள்

தன்னுடைய சிஷ்யர்களான மாணவர்களை அவரவர் தரத்துக்கும் அந்தஸ்துக்கும் தக்கவாறு நடத்த வேண்டும். தன்னுடைய மாணவர்களுக்கு நன்மை செய்வதில் அந்தரங்க சுத்தி இருக்க வேண்டும். அவர்களுக்கு சன்மார்க்க நெறியைக் காட்டி அவர்களைத் திருத்தும் விஷயத்தில் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். தன்னுடன் இருப்பவர்களுக்கு உபதேசம் செய்து கொண்டே இருக்க வேண்டும். அவர்களிடத்தில் இருக்கிற பொருளிலோ செல்வத்திலோ ஆசை கொள்ளலாகாது. அதிலிருந்து தனக்கு எதையாவது அவர்கள் கொடுக்கவேண்டும் என எதிர்பார்க்கலாகாது. அவர்களுடைய சக்திக்கு மீறிய அளவில் அவர்களுக்குச் சிரமங் கொடுக்கலாகாது. தங்களுக்குச் சிரமம் என்று அவர்கள் கருதுகிற அளவுக்கு வணக்கங்களைப் புரியுமாறு அவர்களைக் கட்டாயப் படுத்தக் கூடாது. அவர்களிடத்தில் மிகவும் அந்நியோன்யமாக இருக்கவும் கூடாது. மிகவும் ஒதுங்கி இருக்கவும் கூடாது. அவர்களுக்கு நெருக்கடியை உண்டு பண்ணி அவர்கள் விரண்டோடுமாறு செய்யலாகாது. தன்னுடைய மாணவர்களின் வயதைப் பொறுத்து தன்னிலும் மூத்தவர்களை ஸெய்யிதீ, அம்மீ (தலைவரே, சிறிய தந்தையே) என்றும், சம வயதினரை சகோதரரே தோழரே என்றும், இளையோரை பிள்ளாய், குழந்தாய், மகனே, நண்பரே என்றும் அன்பான வார்த்தைகளால் அழைக்க வேண்டும் அவர்களைத் திட்டவோ தூஷிக்கவோ குத்தல் பேசவோ கூடாது. அவ்வாறு செய்தால், சிஷ்யர்களின் மனம் புண்பட்டு வெறுப்படையும். காரியங்களைச்



செய்யும் போது அவர்களை மட்டும் பணிபுரியச் செய்து தான் மட்டும் ஒதுங்கி இருக்காமல் அவர்கள் ஆற்றும் பணியில் கூட்டுச் சேர்ந்து கொள்ள வேண்டும். தன்னிடம் வருகிற மாணவனை மலர்ந்த முகத்துடன் வரவேற்க வேண்டும். தன் கரத்தை அவர்கள் முத்தமிட்டால் அவர்களின் தலையை முத்தமிட வேண்டும். மாணவர்கள் ஏதேனும் உதவி செய்தால், அவர்களுக்குத் தக்கபடி பிரதிபலன் செய்ய வேண்டும். மாணவன் தன்னிடமிருந்து விடை பெற்றுக் கொள்ள விரும்பினால், அவன் கேட்டுக் கொள்வதற்கு முன்னதாகவே அவனுக்காக துஆச் செய்ய வேண்டும். மாணவன் இருக்குமிடத்திற்கு வந்தால், முழு உடையை அணிந்து வர வேண்டும். உடை சுத்தமாக இருக்க வேண்டும். மணம் பூசிக் கொள்ள வேண்டும். வாகன வசதி இருந்தால், வாகனத்திலேயே வரவேண்டும். அவர்களின் மத்தியில் அமர்ந்தால், மரியாதையாகவும் கௌரவமாகவும் அமர வேண்டும். தலை திறந்திருக்கக் கூடாது. இங்குமங்கும் திரும்பிப் பார்க்கலாகாது. அவர்களின் முன்னிலையில தன் உடையையோ தாடியையோ கோதி விடலாகாது. அவர்களின் முன்னிலையில் தூங்கலாகாது. அவர்கள் பக்கம் காலை நீட்டலாகாது. அவர்களில் எவரையும் உற்றுப் பார்க்கலாகாது. அவர்களுடைய பேச்சுக்கு பதிலளிக்க முனையலாகாது. அவர்கள் அதிகமாகப் பேசினால் மௌனமாக இருந்து கொண்டிருக்க வேண்டும். அல்லது அவர்களைப் பேச விட்டு விட்டு அந்த இடத்தை விட்டு விலகி விட வேண்டும். அங்கு வராத தன் மாணவர்களைக் குறித்து, இன்னாரைக் காணவில்லையே. அவர் ஏன் வரவில்லை? என்று அங்கு வந்திருப்பவர்களிடம் விசாரிக்க வேண்டும்.நோயுற் றிருப்பதாகத் தெரிந்தால், அவரிடம் சென்று நோய் விசாரிக்க வேண்டும். அலுவலாக இருந்தால் அவ்வலுவலில் உதவி செய்ய

முடியுமாயின், உதவி புரிய வேண்டும் அல்லது துஆச் செய்ய (பிரார்த்தனை புரிய) வேண்டும். அவர் மீது மற்றவர்களுக்குக் கெட்ட எண்ணம் வர விடலாகாது. திக்ரு, ஹல்கா போன்ற வாராந்திர மாதாந்திர, வருடாந்திர வஜீபாக்களில் சிஷ்யர்களுடன் கலந்து கொண்டால், அவர்களுக்கு உற்சாகம் ஏற்படக் கூடிய முறையில் சந்தோஷமாகவும் மலர்ந்த முகத்துடனும் கலந்து கொள்ள வேண்டும். திருக்குர்ஆன் ஹதீஸ் முதலியவற்றிலிருந்து அவர்களுக்கு உபதேசம் புரிய வேண்டும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவர்களில் எவரையும் அப்புறப்படுத்தக் கூடாது.

இவ்வாறான தன்மைகளுள்ள ஷெய்கு என்னும் ஆசிரியரானவர் திரு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வரையில் சேரக் கூடிய குரு பரம்பரையைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். இவர் ஒலியாகவோ, குத்பு ஆகவோ இல்லாதிருந்தாலும் குற்றமில்லை. ஏனெனில், அவர் ஆசிரியர் பரம்பரையிலுள்ளவராக இருப்பதால் அவரது ஆசிரியர் களிலுள்ள இதர ஒலிமார்கள் இம்மாணவனான சிஷ்யனுக்கு அந்தரங்கத்தில் ஆத்மார்த்தமாக உதவி செய்து, அவனுக்கு அகத் தூய்மை யுண்டாகவும் ஆத்ம பரிபக்குவம் ஏற்படவும் வழி செய்வர்.

ஆசிரியர் பரம்பரையிற் சேராமல் தன்னுடைய சுய கல்வியாலும், ஏட்டுப் படிப்பாலும் மேற்கண்ட தன்மைகளைத் தன்னில் அமைத்துக் கொண்டு ஆசிரிய பீடத்தில் அமர்ந்தவர், தானாக முளைத்து வளர்ந்த மரத்துக் கொப்பானவர். காலா காலத்தில் பக்குவப்படுத்தப்பட்ட விதை, பக்குவப்படுத்தப்பட்ட இடத்தில் பருவ காலத்தில் விதைக்கப்பட்டு சமயத்துக் கேற்றவாறு தண்ணீர் பாய்ச்சி கவாத்துச் செய்து. உரம் போட்டு வளர்க்கப் படும் மரம் இறுதி வரையில் நன்றாக வளர்ந்து குறித்த காலத்தில்



எதிர்பார்க்கும் பலனைத் தருவது யாவருக்கும் தெரிந்த விஷயம். தரையில் விழுந்த விதை தானாக முளைத்தால், பெரும்பாலும் பட்டுப் போவதுதான் வழக்கம். கடைசி வரை வளர்ந்து பெரிய மரமாகுவது அபூர்வம். அவ்வாறு வளர்ந்து மரமாக ஆனாலும், காய்க்க வேண்டிய அளவுக்குக் காய்க்காது. அவ்வாறு காய்த்தாலும் அதற்கு இருக்க வேண்டிய சுவை இருக்காது. எங்கேயே ஒன்று அரிதினும் அரிதாக வளர்ந்து காய்க்க வேண்டிய அளவுக்குக் காய்ப்பதும் தேவையான அளவிற்கு சுவை இருப்பதும் உண்டு. இதுபோல ஆசிரிய பரம்பரையில் சேராத ஆசிரியரை அண்டினால் அவரிலிருந்து எதிர்பார்க்கும் பலனை அரிதினும் அரிதாகவே அடையலாம். அவ்வாறு அடைவதும் பகீரதப் பிரயத்தனத்துக்கும் சொல்லொணாத் துன்பங்களுக்கும் பிறகே கிடைக்கும். ஆசிரிய பரம்பரையில் சேர்ந்தவர்களை அண்டினால் அதி துரிதமாகவும், சுலபமாகவும் எளிதில் வெற்றியடையலாம். ஆதலால், ஆசிரிய பரம்பரையுள்ள ஷெய்கை அணுகுவது தான் நல்லது.

இவ்வாறான தன்மைகள் யாவும் ஒருங்கே அமைந்த ஞான ஆசிரியர் அமைவது அரிதினும் அரிது. அத்தகைய ஆசிரியர்கள் செங் கெந்தகத்தைப் போல் அபூர்வமாகவே இருக்கிறார்கள். இவர்களை அடையும் பாக்கியம் பெற்ற மாணவன் அவரது சமூகத்திலிருந்து அவர் கூறும் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து பணியாற்ற தன்னைப் பூரணமாக ஒப்புவித்து விடல் நலம். உயிரற்ற உடலுக்கு குளிப்பாட்டுபவரிடம் அச்சவம் எவ்விதமாக அவர் நினைத்தபடி யெல்லாம் திருப்பவும் புரட்டவும் இடங் கொடுத்துக் கொண்டிருக்கிறதோ, அந்த மாதிரியாக இவ்வாசிரியரிடம் மாணவன் தன்னை ஒப்புவித்து விட்டு

உயிரற்ற சவம்போல் இருந்து விட்டால், அச்சவத்தை அவர் குளிப்பாட்டி சுத்தப் படுத்துவது போல, அந்தக் குருவானவர் சுத்தப்படுத்தி திரு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அகத்திலும் புறத்திலும் பின்பற்றும் புண்ணிய சீலராக மாற்றி விடுவார். இந்நிலையை அடைவதுதான் இப்புற உலகில் மனிதன் அடையும் பெரும் பேறு.

## மெய்யான முரீது

சன்மார்க்க ஞான வழியைக் கடைப்பிடிக்க விரும்புகிற மெய்யான முரீது (மாணவன்) முதலாவதாக அல்லாஹு தஆலாவை அறிந்து கொள்வது அவசியமாகும். அவனுடைய தன்மைகள் யாவை? அவற்றில் அவனுக்கு இருக்க வேண்டிய வாஜிபான (கடமையான) தன்மைகள் (ஸிஃபத்துகள்) யாவை? ஜாயிஸான ஸிஃபத்துகள் (ஆகுமான தன்மைகள்) யாவை? என்பனவற்றை அறிய வேண்டும். பின்னர், ரசூலாகிய திருத் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அறிய வேண்டும். பின்னர், சுத்தம், தொழுகை, நோன்பு, தயம்மும் போன்ற வணக்க சம்பந்தமான சட்டங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். பின்னர் திருக்குர்ஆனிலிருந்து தன்னுடைய தொழுகை களில் ஓத வேண்டிய அளவுக்குத் தேவையான குறைந்த பட்ச சூரத்துகளையேனும் மனனஞ் செய்து கொள்ள வேண்டும்.

பின்னர், தன்னுடைய பாவச் செய்கைகளை விட்டு விலகிக் கொண்டு, இனிமேல் அதனைச் செய்வதில்லை என்று உறுதி மொழி எடுத்து, தவ்பாச் செய்ய வேண்டும். கர்வம் தற்பெருமை ஆணவம் கெட்ட எண்ணங் கொள்ளல் போன்ற வற்றை விட்டு மனதைச் சுத்தப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.



தனக்குச் சம்பவிக்கிற தரித்திரம், நோய், பிறரால் ஏற்படும் நோவினை போன்றவற்றில் அல்லாஹு தஆலாவின் பால் திருப்தி யடைதல், தன்னையே அவன்பால் ஒப்புவித்து யாவும் அவனாலேயே நிகழுகின்றன என்று நம்பிக்கை வைத்தல் அதாவது புறத்தில் நிகழுகின்ற காரண காரியங்களை நம்பி அவற்றின் பால் கவனத்தைச் செலுத்தாதிருத்தல். சொல்லாலும் செயலாலும் திரு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சுன்னத்தை (வழிமுறையை)க் கடைப் பிடித்தல். லுஹா தொழுகை, மகுரிபுக்கும் இஷாவுக்கும் இடையிலுள்ள அவ்வாபீன் தொழுகை, தஹஜ்ஜுதுத் தொழுகை. வித்ருத் தொழுகை. சுன்னத்துர் ராத்திபத்து தொழுகை முதலியவற்றை அனாவசியமாக விட்டு விடலாகாது. அதிகமாக உணவு உட்கொள்ளாமை, இரவிலோ பகலிலோ ஒலுவில்லாமல் ஒரு நாழிகை நேரங் கூட இருக்காமலிருத்தல், வெளியிற் செல்கையில் இங்குமங்கும் திரும்பாமல் தன்னுடைய அலுவலின் பால் செல்லல், யாவருக்கும் ஸலாமை முந்திச் சொல்லல், தனக்குத் தீங்கு செய்தவரை வெறுத்துத் தள்ளாதிருத்தல், பிறர் மரியாதையைக் குறித்து குத்தல் பேசாதிருத்தல், தேவை யுள்ளோருக்கு இயன்றவரை உதவி செய்தல், பிறர் சந்தேகிக்கக் கூடிய விதமாக நடந்து கொள்ளாதிருத்தல், இமாம் ஜமாஅத்தைப் பேணுதல், நபீமார்களும் ஒலிமார்களும் சகித்துக் கொண்டது போல பிறர் செய்யும் கெடுதல்களைச் சகித்துக் கொள்ளல், பிறருக்குக் கெடுதல் வரவேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்காதிருத்தல், எவராவது நோவினை செய்தாலும் அதனை இறைவன்பால் சாட்டி விட்டு ஒதுங்கிவிடல், சன்மார்க் கத்துக்கு முரண் இல்லாத முறையில் ஹலாலான சம்பாத்திய மிருத்தல், அதிலேயே தன்னுடையவும் தன் குடும்பத்தாருடையவும்

செலவுகளைச் சரிக்கட்டிக் கொள்ளல், சன்மார்க்கத்தில் அனுமதிக் கப்பட்டதா? அல்லவா? என்று சந்தேகமானவற்றைச் செய்யாமல் விலகி இருத்தல், ஆத்மார்த்த விஷயங்களில் பரிபூரணத்துவத்தை அடைவதற்கு முன்னதாகவே தன்னுடைய வணக்கம் முதலிய வற்றை மக்கள் உணர்ந்து தன்னை வந்து தரிசிக்கத் தொடங்கினால், அவர்களை விட்டு விலகிச் செல்லல், தன் நலத்தைப் பார்க்கினும் பொது நலத்திற்கு முன்னுரிமை அளித்தல் முதலியவற்றையும், பேணுதலையும், பய பக்தியையும் ஆரம்ப முதற் கடைப்பிடிக்க வேண்டும்.

இவற்றிற்குப் பின்னர், சன்மார்க்க ஞான வழியிற் செல்லும் மெய்யான மாணவன் கடைப்பிடிக்க வேண்டிய அடிப்படையான காரியங்கள் வேறு பலவுமுள.

முரீது என்பது மூன்றுவகை. முதலாவது **முரீதுல் ஆம்** (பொது மக்களின் முரீது). மேலே கூறப்பட்டவற்றைக் கடைப் பிடிப்பது இந்த வகையைச் சேர்ந்தது.

இரண்டாவது **முரீதுல் காஸ்** (விசேஷமானவர்களின் முரீது) இந்த வகையில் முரீது பெறுபவர் விசேஷமாக கடைப் பிடிக்க வேண்டியவை வருமாறு.

தரீக் (சன்மார்க்க வழி) என்பதற்கு நான்கு ருக்னுகள் இருக்கின்றன. 1. பசித்திருத்தல், 2. விழித்திருத்தல், 3. மௌனமாக இருத்தல், 4. தனித்திருத்தல் ஆகியவைகளாகும், இவற்றை யன்றி தரீக்கை அடைய முடியாது. இவைகள் தவிர 1. எந்நேரமும் திக்ரு செய்து கொண்டிருத்தல், 2. எந்நேரமும் இறைவனுடைய சிந்தனை யிலிருத்தல், 3. எந்நேரமும் ஒளுவுடனிருத்தல், 4. முரீதானவன் தன்னுடைய ஆசிரியரிடத்தில்



தன் மனதைப் பிணைத்திருத்தல் ஆகிய நான்கு காரியங் களையும் சேர்த்து எட்டுத் தூண் (ருக்னு)கள் என்று சிலர் கூறி இருக்கின்றனர்.

**முதலாவது ருக்னு பசித்திருத்தல்**

"ஹஜ்ஜு என்பது அறஃபாவில் தங்குதல். பசித்திருத்தல் சகல நற்செயல்களுக்கு அடிப்படை" என்று திரு நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

"ஆதமுடைய மகனில் இரத்தம் செல்கிற இடத்தில் எல்லாம் ஷைத்தான் செல்வான். ஆதலின் அவன் செல்லு மிடத்தை பசித்திருப்பதன் மூலமும் தாகித்திருப்பதன் மூலமும் இடைஞ்ச லுள்ளதாக ஆக்குங்கள். இதிலிருக்கிற நற்கூலி சன்மார்க்க யுத்த வீரனுடைய நற்கூலியைப் போலிருக்கிறது" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

"அல்லாஹு தஆலாவிடத்தில் அந்தஸ்தால் உங்களிற் சிறந்தவர், பசியாலும் இறைவனுடைய சிந்தனையாலும் உங்களில் மூழ்கி இருப்பவர்தான். அளவுக்கதிகமாக உண்பவரும், அதிகமாகத் தூங்குபவரும் அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாவார்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறியுள்ளார்கள்.

"அமல்களுக்கு நாயகமாயுள்ளது பசி, மனதைத் தாழ்த்துவது கம்பளி உடை" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

"அதிகமான உணவினாலும் பானத்தினாலும் இருதயங்களை சாகடிக்காதீர்கள். இருதயம் என்பது பயிரைப் போன்றது. தண்ணீர் அதிகமாகி விட்டால் பயிர் செத்துப் போகும் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். பசித்திருந்து சுகமாக இருங்கள் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள். மறுமையில் ஊணைப் பார்க்கினும் அதிகத் தீங்குள்ளது எதுவுமில்லை. பசியைப் பார்க்கினும் அதிக நன்மையுள்ளது எதுவுமில்லை. ஆசைக்கு மாறு செய்ய ஹலாலானதை (அனுமதிக்கப்பட்டதை). யுங் கூட விட்டு விடுவதில் சிறந்தது எதுவுமில்லை. ஹலாலானதில் விவாக ரத்துச் செய்தல். வயிறு நிறம்ப உண்ணல் ஆகிய இரண்டிலும் அல்லாஹு தஆலா கோபமடைகிறான் என்று அல்குஷைரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறியுள்ளார்.

எவருடைய நஃப்ஸு (ஸ்தூலம்) பசித்திருக்கிறதோ அவரை விட்டு வஸ்வாஸ் (குதர்க்க எண்ணம்) அறுந்து விடுகிறது என்று ஒரு பெரியார் கூறியுள்ளார். பசியும் தாகமும் இருதயத் தெளிவை உண்டாக்கி, ஆசையை மரணிக்கச் செய்து, நுட்பமான கல்வியை அளிக்கின்றன என்று புஷைறுல் ஹாரித் ரஹ்மத் துல்லாஹி அலைஹி கூறியுள்ளார். இவ்வுலகத்தின் திறவுகோல் வயிறு நிறம்ப உண்ணல் மறுமையின் திறவு கோல் பசித்திருத்தல் என்று ஸுலைமானுத் தாறானீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறியுள்ளார். இரைப்பை நிறம்பி விட்டால் சிந்தனை சிதைந்து விடும்; விவேகம் என்ற நா ஊமையாகி விடும்; அங்கங்கள் வணக்கத்துக்கு உதவாமல் விழுந்து விடும் என்று லுக்மானுல் ஹக்கீம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி தம்முடைய புதல்வருக்கு உபதேசஞ் செய்துள்ளார்.



## முதலாவது ருக்னு

முன்னூறு ஒலிமார்களை நான் சந்தித்திருக்கிறேன். அவர்களில் ஒவ்வொருவரும் எனக்கு நான்கு காரியங்களைக் குறித்து உபதேசஞ் செய்திருக்கிறார்கள்.

1. எவர் உணவை அதிகப்படுத்துகிறாரோ, அவர் இறை வணக்கத்தில் இன்பத்தைக் காண மாட்டார்.

2. எவர் தூக்கத்தை அதிகப்படுத்திக் கொள்கிறாரோ, அவர் தன் வாழ்நாளில் பரக்கத்தைக் காணமாட்டார்.

3. மக்களுடன் சேர்ந்து கூடி இருப்பதை எவர் அதிகப் படுத்திக் கொள்கிறாரோ அவர் அல்லாஹு தஆலாவிடத்தில் தனக்கு ஆதாரத்தைத் தேடிக் கொள்ள மாட்டார்.

4. பிறர் உடமைகளில் தலையிடுவதை எவர் அதிகமாக்கிக் கொள்கிறாரோ, அவர் இவ்வுலகை விட்டு ஈமானுடன் வெளியேற மாட்டார்.

ஆதமுடைய மகனின் நஃப்ஸில் (மனதில்) தீமையின் எண்ணங்கள் ஆயிரம் இருக்கின்றன. அவை யாவும் ஷைத்தானின் கரத்தில் இருக்கின்றன. மனிதன் தன்னுடைய வயிற்றைப் பசித்திருக்கச் செய்து, தன்னுடைய பாது காப்பைத் தேடிக் கொண்டு தன் நஃப்ஸை செழிக்கச் செய்வானாயின், ஷைத்தானின் கரத்தில் இருக்கிற பணர்கள் அத்தனையும் காய்ந்து விடுகின்றன. பசி என்ற நெருப்பால் எரிந்து விடுகின்றன. அவனை விட்டு ஷைத்தான் ஓடி விடுகின்றான் என்று யஹ்யப்னு மஆத் ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறியுள்ளார்.

ஒருவர் இப்னு புஷைர் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களிடத்தில் வந்து தனக்கு ஒரு வணக்கத்தைக் கற்றுக் கொடுக்குமாறு கேட்டுக் கொண்டார். அதற்கவர் "நீர் சாப்பிடுவதில்லையா?" என்று வினவினார். "ஆம் சாப்பிடுகிறேன்". எனறு பதிலளித்தார். எவ்வாறு சாப்பிடுகிறீர் என்று மீண்டும் வினவினார். போதுமான வரையில் வயிறு நிரம்பப் புசிக்கிறேன் என்று அவர் பதிலளித்தார். உடனே, அவர் "இது மிருகங்களின் புசிப்பு, அறிவை மழுங்கச் செய்வது, என்னை விட்டுச் செல். முதலில் உண்பதைக் கற்றுக் கொள். அப்புறம் வணக்கத்தைக் கற்றுக் கொள்வாய்" என்று கூறி அனுப்பி விட்டார்.

எனவே, ஸாலிக் அதாவது சன்மார்க்க வழியில் செல்வோரால் பசித்திருப்பது ஃபர்லான காரியங்களில் ஒன்றைப் போலிருக்கிறது.

பசி என்பது கடைத் தெருவில் விலைக்கு விற்கக் கூடிய பொருளாக இருக்குமாயின், முரீதாக இருப்பவர் பசியைத் தவிர்த்து வேறு எதையும் விலைக்கு வாங்கக் கூடாது என்பதாக ஒரு பெரியார் கூறியுள்ளார்.

திருகுர்ஆனில் வயித்தியத்தைக் குறித்து சொல்லப் பட்டிருக்கிறதா? என்று வினவப்பட்டது. ஆம், வயித்தியம் முழுவதையும் அல்லாஹு சுப்ஹானஹு வதஆலா ஒரே ஒரு ஆயத்தில் அடக்கி விட்டான்.

**உண்ணுங்கள் பருகுங்கள். ஆனால், விரயம் செய்யாதீர்கள். விரயஞ் செய்பவர்களை அவன் நேசிக்க மாட்டான்** சூரத்துல் அஃராஃப் 31 என்ற ஆயத்துதான் அது என்று பதிலளிக்கப்பட்டது. தேவைக்கு மேல் அதிகமாக உணவை



அருந்துவதும் விரயம் தான். இதனால் நோய்களும் வலிகளும் பிணிகளும் உண்டாகின்றன.

அதிகமாக உண்பதால் ஆறு தீமைகள் ஏற்படுகின்றன.

1.இறையச்சம் இருதயத்தை விட்டு அகன்று விடும்.

2. பிறர்பால் பரிவு ஏற்படாது.

3. வணக்கம் புரிவது பளுவாகத் தோன்றும்.

4. விவேகமான பேச்சுகளைச் செவியேற்றால் இருதயம் இளகாது.

5. உபதேசம் செய்தால், மக்களுக்கு அவ்வுபதேசம் பயன்படாது.

6. வியாதிகளை யுண்டு பண்ணும் என்று ஒரு பெரியார் கூறியுள்ளார்.

பசித்திருப்பதால் பதின் மூன்று வகை நன்மைகள் இருக்கின்றன என்றும், ஐம்பது வகை நன்மைகள் இருக்கின்றன என்றும் பெரியோர்கள் கூறியுள்ளனர்.

இவர்கள் யாவருடைய நோக்கமும் உணவு விஷயத்தில் நடுத்தரமாக இருக்க வேண்டும் என்பதும் அளவுக்கதிகமாக உணவருந்தி துன்பங்களை வரவழைத்துக்கொள்ளவுங் கூடாது. அளவுக்கு மீறி பசித்திருப்பதன் மூலம் உடல் வலிமை குன்றுமாறு செய்யவும் கூடாது என்பதுமேயாகும்.

## நோன்பின் பலன்

எனவேதான். உணவைக் குறைக்குமாறு கூறினார்கள். உணவருந்தக் கடாது என்று அவர்கள் கூறவில்லை. பசித்திருத்தல் என்ற இக்காரியம் சன்மார்க்கச் சட்டப்படி நோன்பு என்ற முறையில் நிறைவேற்றப் படல் வேண்டும். ஏனெனில், நோன்பு வணக்கத்திற்குப் பிரகாசங் கொடுக்கக் கூடியது. வழிபாடுகளுக்குத் திறவு கோலாக இருக்கிறது. ரமலான் மாத நோன்புகளை நோற்பதுடன் மட்டும் மனிதன் நின்று விடவும் கூடாது. நஃபிலான வணக்கங்களைப் புரிவதற்காக வியாபாரத்தை நிறுத்தி விடவும் கூடாது. அவ்வாறு செய்தால் ஆத்மார்த்த முன்னேற்றத்தில் உன்னதமான பதவிகளை அடையவோ ஃபிர்தௌஸ் என்ற சுவர்க்கத்தின் படித்தரங்களைப் பெறேவா இயலாது. நோன்பாளிகளின் பதவிகளைக் காணும்போது மற்றவர் கைசேதமடைய நேரிடும். இல்லியீன் என்ற சுவர்க்கத்தின் உச்சத்தில் நட்சத்திரங்களைப் போல் அவர்கள் இருப்பார்கள். ஆதலின், இயன்ற வரையில் அதிகமாக நோன்பு நோற்க வேண்டும். நோன்பைத் தவிர்த்து ஒவ்வொறு நன்மைக்கும் எழுநூறு வரையில் கூலி உண்டு. அது எனக்காக நோற்கப்படுகிறது. அதற்கு நானே கூலி அளிப்பேன் என்று அல்லாஹு தஆலா கூறியதாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள் என்று ஹுஜ்ஜத்துல் இஸ்லாம் இமாம் கஸ்ஸாலீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி தங்களுடைய **"பிதாயத்துல் ஹிதாயா"** என்ற நூலில் எழுதி இருக்கிறார்கள்.

இறுதி நாளில் நோன்பும் திருக்குர்ஆனும் அடியானுக்கு ஷஃபாஅத்துச் செய்கின்றன. "நாயனே! அவனுக்கு உணவையும் இச்சையையும் விலக்கினேன். அவனுக்காக என்னுடைய ஷஃபாஅத்தை ஏற்றுக் கொள் என்று நோன்பு கூறும். நாயனே,



அவனுக்கு இரவில் தூக்கத்தை விலக்கினேன். என்னுடைய ஷஃபாஅத்தை ஏற்றுக் கொள்" என திருக்குர்ஆன் கூறும் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அப்துல்லாஹிப்னு அம்ரிப்னில் ஆஸ் ரலியல்லாஹுதஆலா அன்ஹு ரிவாயத்துச் செய்ததாக **தப்றானி** என்ற நூலில் எழுதப்பட்டிருக்கிறது.

"நோன்புகள் நரகை விட்டுத் தடுக்கும் கேடயங் களாகவும், பலமான அரணாகவும் இருக்கின்றன" என்று ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது.

"சன்மார்க்க யுத்தம் செய்து கொள்ளை கொள்ளுங்கள்; நோன்பு நோற்று ஆரோக்கியமாக இருங்கள், பிரயாணம் செய்து செல்வமாக இருங்கள்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் ரிவாயத்துச் செய்திருக்கிறார். **(தப்றானி).**

"ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு ஜக்காத்து இருக்கிறது. உடலுக்குரிய ஜக்காத்து நோன்பு. நோன்புகள் பொறுமையில் பாதி" என்று திரு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள். **(இப்னுமாஜா).**

"அல்லாஹ்வின் தூதரே, ஒரு நற்செயல் செய்ய எனக்குக் கட்டளை யிடுங்கள் என்று நான் கேட்டுக் கொண்டேன். நோன்பு நோற்பதைப் பற்றிப் பிடித்துக் கொள். அதற்கு நிகர் இல்லை என்று பதிலளித்தார்கள்" என்பதாக அபூ உமாமத்தல் பாஹிலி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அறிவித்துள்ளார்.

"எனக்கு ஒரு நற்செயலைக் காண்பியுங்கள். அதனைக் கொண்டு நான் சுவர்க்கத்தில் நுழைய வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். நோன்பைப் பற்றிப் பிடித்துக் கொள். அதற்கு சமமானது இல்லை" என்று பதிலளித்ததாக மற்றொரு ரிவாயத்தில் கூறப்பட்டிருக்கிறது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இவ்வாறு கூறியதற்குப் பின்னர் அபூ உமாமா ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களின் வீட்டில் விருந்தினர் வந்த நாள் தவிர, மற்றைய நாட்களில் பகற் காலத்தில் புகை காணப்படுவதில்லை.

"சுவர்க்கத்தில் ரய்யான் என்னும் ஒரு தலைவாசல் இருக்கிறது. இறுதி நாளில் நோன்பாளிகள் மட்டும் அத்தலை வாசல் வழியாக சுவர்க்கத்தில் நுழைவர்; அவர்களைத் தவிர்த்து வேறு ஒருவரும் அதில் நுழைய மாட்டார்" என்பதாக ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது. "நோன்பாளிக்கு நோன்பு திறக்கும் வேளையில் ஒரு பிரார்த்தனைக்கு உரிமை இருக்கிறது .அப்பிரார்த்தனை ரத்துச் செய்யப்பட மாட்டாது" என்றும் ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது.

"நோன்பாளிக்கு நோன்பு துறக்கும் வரையில், ஆக்கிரமிக்கப் பட்டவர் வெற்றி யடையும் வரையில், பிரயாணி மீண்டும் தன் இடத்தை அடையும் வரையில் ஆகிய மூவருடைய பிரார்த்தனையை ரத்துச் செய்யாமலிருப்பது அல்லாஹ்வின் மீது கடமையாக இருக்கிறது" என்று ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது.

"ரமலான் அல்லாததில் அல்லாஹு தஆலாவுக்காக ஒருவர் நோன்பு நோற்பாராயின், வேகமான குதிரையின் ஓட்டத்தால் நூறு வருட தொலையில் நரகத்தை விட்டு அவர் தூரமாக்கப்படுவார்" என்பதாக ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது.



"காலமெல்லாம் (தினந்தோறும்) நோன்பு நோற்றுக் கொண்டும். ஒவ்வொரு இரவிலும் திருக்குர்ஆனை ஒரு முறை ஓதிக் கொண்டும் இருந்தேன். என்னிடம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அலைஹி வஸல்லம் அவர்கள் (ஆளை) அனுப்பி அழைத்தார்கள். அவர்களிடம் நான் சென்ற போது, நீர் காலமெல்லாம் நோன்பு நோற்கிறீர் என்றும் ஒவ்வொரு இரவிலும் (ஒரு முறை) திருக்குர்ஆனை ஓதுகிறீர் என்றும் நான் கேள்விப் படுகிறேன் என்றார்கள். மெய்தான் யா ரசூலல்லாஹ் இதைக் கொண்டு நல்லதைத் தவிர (வேறு எதையும்) நான் நாடவில்லை என்று பதிலளித்தேன்.

ஒவ்வொரு மாதத்திலும் மூன்று நாள் நோன்பு நோற்பது உமக்குப் போதுமானது என்றார்கள். இதைப் பார்க்கினும் சிறந்ததற்கு என்னால் இயலும் யா ரசூலல்லாஹ் என்றேன். அப்பொழுது, உமது மனைவிக்கு உன் மீது ஒரு கடமை இருக்கிறது. உன்னுடைய நப்ஸுக்கு உன் மீது ஒரு கடமை இருக்கிறது. பாத்தியக்காரருக்கு அவருடைய பாத்தியதையைக் கொடுத்து விடு.

"நோன்பு நோற்கவும் வேண்டும். நோன்பு நோற்காமல் இருக்கவும் வேண்டும். உன் குடும்பத்தாரிடம் நீர் வரவும் வேண்டும் என்றார்கள். பின்னர், அல்லாஹ்வின் நபீயாகிய தாவூதின் நோன்பைப் போல் நோன்பு நோற்கவும். அவர் மக்களில் மிகவும் வணக்கஸ்தராக இருந்தார்" என்றார்கள். நபீயுல் லாஹ்வே, தாவூதுடைய நோன்பு என்பது என்ன? என்று வினவினேன். ஒரு நாள் நோன்பாளியாக இருப்பார், ஒரு நாள நோன்பில்லா திருப்பார்.

"மாதத்துக் கொரு முறை குர்ஆன் ஓதுவீராக என்றார்கள். இதனைப் பார்க்கினும் சிறந்ததற்கு என்னால் இயலும் யா ரசூலுல்லாஹ் என்றேன்.இருபது நாட்களுக்கு ஒரு முறை குர்அன் ஓதுவீராக என்றார்கள். இதைப் பார்க்கினும் சிறந்ததற்கு என்னால் இயலும் யா நபிபுல்லாஹ் என்றேன். வாரத்துக்கொருமுறை குர்ஆனை ஓதுவீராக. இதனைப் பார்க்கினும் அதிகமாக்க வேண்டாம். உன்னுடைய றப்புக்கு உன் மீது ஒரு கடமை இருக்கிறது. உன்னுடைய ஸ்தூலத்துக்கு உன் மீது ஒரு கடமை இருக்கிறது" என்று கூறினார்கள் என்பதாக அப்துல்லாஹிப்னு அம்ரிப்னில் ஆஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு ரிவாயத்துச் செய்துள்ளார்கள்.

"நோன்பாளியின் தூக்கம் வணக்கமாகும். அவருடைய மூச்சு தஸ்பீஹாகும், அவருடைய துஆ (பிரார்த்தனை) அங்கீகரிக்கப்படும். அவருடைய நற்செயல்களுக்கு அதிக பிரதிபலன் அளிக்கப்படும்" என்று கூறப்படுகிறது.

நான் ஒரு தாவளத்துடன் சென்றேன். அதனை ஒரு கூட்டம் வழி மறித்துப் பறித்துக் கொண்டது. வழிப்பறி திருடர்கள் அருகில் நான் சென்றேன். தாவளத்தின் பொருள்களிலிருந்து அவர்கள் தின்று கொண்டிருந்தார்கள். ஆனால், அவர்களின் தலைவர் மட்டும் தின்னாமல் விலகி இருந்தார். இதனைக் குறித்து அவரிடம் வினவினேன். நான் நோன்பு நோற்றிருக்கிறேன் என்றார். அவ்வாறாயின், நோன்பு நோற்றுக் கொண்டு ஏன் வழிப்பறி செய்கிறீர்? என்றேன். எனக்கும் என்னுடைய றப்புக்கு மிடையில் சமாதானம் ஏற்பட ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி வைத்திருக்கிறேன் என்றார். அப்புறம் கொஞ்ச காலத்திற்குப் பின்னர், அவரை நான் திருமக்காவில் தவாஃபு செய்யுமிடத்தில்



அவர் தவாஃபு செய்து கொண்டிருக்கையில் பார்த்து அவர் தானா? என்றேன். அதற்கவர் "ஆம் ஷிப்லியே, எனக்கும் அவனுக்கு மிடையில் நோன்புகள் எவ்வாறு சமாதானம் செய்து வைத்தன என்பதைப் பார்" என்று கூறினார் என்பதாக ஷிப்லீ றஹ்மத்துல்லாஹி அலைஹி கூறியுள்ளார்.

பொய்யுரைத்தல் கோட் சொல்லல், பொய்ச் சத்தியம் செய்தல், பிறர் கௌரவத்தைக் குறை கூறுதல் போன்ற ஹராமான (சன்மார்க்கத்தில் விலக்கப்பட்ட) பேச்சுக்களை விட்டு நோன்பாளி தன் நாவைக் காத்துக் கொள்ள வேண்டும். ஹராமான பார்வைகளை விட்டுத் தன்னைக் காத்துக் கொள்ளவும் வேண்டும். பொய்யுரைத்தல், கோட் சொல்லல், புறங் கூறல், பொய்ச் சத்தியஞ் செய்தல், ஹராமான பார்வை ஆகிய ஐந்தும் நோன்பை முறித்து விடுபவை என்று கபரில் (பெரியோர்களின் செய்தியில்) கூறப்பட்டிருக்கிறது. நோன்பின் பயனை இல்லா தொழித்து விடுகின்றன என்பது இச்செய்தியின் கருத்து. திட்டுவதும் தூஷணை செய்வதும் கூட இந்த இனத்தைச் சேர்ந்தவைகளே.

## ஞான குரு

ரியாளத்து என்பது இறை ஒழுக்கங்களைத் தன்னில் உருவாக்கிக் கொள்வதுதான். இதானாற்றான் "நோன்பு எனக்காவுள்ளது". என்று இறைவன் கூறியுள்ளான். முரீதானவனை அவனுடைய நப்ஸு (ஆணவம்) ஆட்கொண்டி ருப்பதை, அவன் பசித்திருப்பதன் மூலம் விலக்கி, அதனை அவன் ஆட்கொண்டு விடுகிறான். பசியில் போடப்படாத வரையில் நப்ஸு (ஆணவம்) நேர்வழிக்குத் திரும்புவதில்லை. மெய்யான

முரீது பசியில் அதனை வீழ்த்திவிடுவானாயின் தன்னுடைய பழைய வாக்குறுதியையும் உறுதி மொழியையும் அது நினைவுபடுத்தித் திரும்புகிறது. எனவேதான், பசியும் தாகமும் நஃப்ஸை எதிர்த்து செய்யப்படும் போராட்டமாகிய முஜாஹதாவில் மிகப்பிரதானமாக இருக்கின்றன ஆனால், இப்போராட்டத்தில் திடீரென வெற்றி கிடைக்காது. கொஞ்சங் கொஞ்சமாகவே அது ஏற்படும். ஆதலால், நோன்பாளிகள் தங்கள் உணவையும் பானத்தையும் கொஞ்சங் கொஞ்சமாக, சிறுகச் சிறுகக் குறைத்து இறுதியில் ஒரு பேரீத்தம் பழத்தைக் கொண்டு நோன்பு நோற்கப் பழகிவிடவேண்டும்.

## இரண்டாவது ருக்னு விழித்திருத்தல்

இது இரண்டு வகை. ஒன்று இருதய விழிப்பு. இது மறு உலகை மறத்தல். மறு உலக விஷயத்தில் அலட்சியமாக இருத்தல் என்ற தூக்கத்தை விட்டு இருதயம் விழித்திருத்தல். அல்லாஹு தஆலாவின் முஷாஹதா (பார்வை) என்பதின் படித்தரங்களில் நெருங்குவதற்கு இருதய விழிப்பு எனலாம்.

## தஹஜ்ஜுத் தொழுகை

மற்றொன்று கண்விழிப்பு. காலத்தை வீணாக்காமல் பயன்படுத்திக் கொள்வதும் உன்னதமான பதவிகளில் முன்னேறுதலும் இதில் சேர்ந்தவை. கண் துஞ்சுமாயின் இருதயத்தின் அமல் நின்று விடும். எனவே, விழித்திருத்தலின் பலன் இருதயத்தின் அமல்தான். மித மிஞ்சிய உணவு, பானம் ஆகியவற்றை விட்டு வயிறு காலியாக இருப்பதால், இது உண்டாகிறது. இது நஃப்ஸை (ஆன்மாவை) அறிவதை ஊக்குவிக்கும். இந்த விழிப்பை தஹஜ்ஜுதின் மூலம் நிறைவேற்ற



வேண்டும். சிரமப்பட்டு தூக்கத்தை நீக்குதல் என்பது தான் தஹஜ்ஜுது என்பதன் பொருள். இரவில் தூங்கி விட்டுப் பின்னர் எழுந்திருந்து நிறைவேற்றப்படும் நஃபில் தொழுகைக்கு தஹஜ்ஜுது என்று பெயர்.

இரவில் விடியற்கால வேளைகளில் வணக்கம் புரிவதையும், இறைவனின் சந்நிதானத்தில் இருப்பதையும் குறித்து திருக்குர்ஆனிலும் சுன்னத்திலும் அதிகம் கூறப்பட்டிருக்கிறது. **"இரவில் நீர் தஹஜ்ஜுதுச் செய்வீராக, உமக்கு அது நஃபிலாக (கடமையை தவிர்த்து மேல் மிச்சமாக) இருக்கிறது. உம்முடைய றப்பு மக்காமுல் மஹ்மூதில் (புகழப்பட்ட இடத்தில்) உம்மை நியமிக்கக்கூடும்** என்றும். **இரவில் சொற்ப நேரம் வணங்குவீராக"** என்றும். **"தங்களுடைய றப்பைப் பயந்தும் விரும்பியும் திக்ரு செய்பவர்களாக இருக்கிற நிலையில், அவர்களுடைய விலாக்கள் படுக்கைகளை விட்டு ஒதுங்கி இருக்கும்"** என்றும் திருக்குர்ஆனில் விடியற்கால வணக்கத்தைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

இரவு வணக்கத்தை பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். அது உங்களுக்கு முன்னர் இருந்த ஸாலிஹானவர் (சன்மார்க்கத்துக்கு இணக்கமானவர்) களின் பண்பு, அல்லாஹு தஆலாவின்பால் நெருங்குவது பாபத்தை விட்டு விலக்கும்; தீமைகளைப் போக்கும்; உடலை விட்டு நோயை விரட்டும் என்றும், ஆதமுடைய மகன் இரவில் இரண்டு ரக்கஅத்துகளைத் தொழுவது இவ்வுலகையும் இதிலுள்ள யாவற்றையும் பார்க்கினும் மேலானது; என்னுடைய வர்க்கத்துக்கு நான் சிரமங் கொடுக்கலாகாது என்பது இல்லாதிருக்குமாயின் அதனை அவர்கள் மீது நான் கடமையாக ஆக்கி இருப்பேன் என்றும்,

தொழுகையில் சிறந்தது நள்ளிரவுத் தொழுகை; அதனை நிறைவேற்றுபவர் மிகச் சொற்பம் என்றும், என்னிடத்தில் ஜிப்ரயீல் வந்தார், முஹம்மதே நீர் விரும்புகிற மாதிரி வாழலாம். ஆனால் (ஒரு தினத்தில்) நீர் மரணிப்பவர்தான், நீர் விரும்பியதை நேசிக்கலாம், ஆனால், அதனை விட்டு நீர் (ஒரு நாளில்) பிரிகிறவர்தான். நீர் விரும்பியதைச் செய்யலாம் ஆனால், (ஒரு தினத்தில்) அதற்காகப் பிரதியளிக்கப் படுபவர்தான் என்று அறிவித்தார்'' என்றும், அறிந்து கொள்! விசுவாசியின் சிறப்பு இரவில் அவனுடைய வணக்கம் தான். அவனுடைய கௌரவம் மக்களிடம் தேவைப் படாமல் இருப்பதுதான் என்றும், இரவில் எவர் தொழுகிறாரோ அவருடைய முகம் பகலில் அழகாக இருக்கும் என்றும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

தஹஜ்ஜுதுத் தொழுபவர்களின் முகம் மிக அழகாக இருக்கிறதே, இதற்குக் காரணமென்ன வென்று ஹஸன் பஸரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களிடம் வினவப்பட்டது. மனிதர்கள் தூங்கும் போது அல்லாஹு தஆலாவுடன் அவர்கள் தனித்து, அவனிடம் பேசினார்கள். அவர்களுக்கு தன்னுடைய பிரகாசத்திலிருந்து ஒரு பிரகாசத்தை அவன் அணிவித்தான் என்று அவர் பதிலளித்தார்.

இரவில் தொழுபவர்களைக் குறித்து மலக்குகளிடத்தில் அல்லாஹு தஆலா பெருமையடித்து "என்னைத் தவிர வேறு எவரும் தங்களைப் பார்க்க முடியாதவாறு, என்னுடைய அடியார்கள் நள்ளிரவில் வணங்குவதைப் பாருங்கள்; என்னுடைய சங்கைக்குரிய வீட்டை அவர்களுக்கு அனுமதித்தேன் என்பதற்கு நீங்கள் சாட்சியாக இருங்கள்'' என்று கூறுகிறான் என்றும் அறிவிக்கப் பட்டிருக்கிறது.



இரவில் வணங்க என்னால் இயலுவதில்லை, அதற்காக எனக்கொரு மருந்து சொல்லுங்கள் என்று இப்ராஹீமுப்னு அத்ஹம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களை ஒருவர் கேட்டுக் கொண்டார். "பகற் காலத்தில் இறைவனுக்கு நீ பாபம் செய்யாதே. பாபம் செய்யாதிருந்தால் இரவில் தன்னுடைய எதிரில் வணங்குவதற்காக அவன் உனக்குச் சந்தர்ப்பம் வழங்குவான், அவன் முன்னிலையில் வணக்கம் புரிவது மகத்தான சிறப்பு. அச்சிறப்புக்கு பாபிகள் உரியவர்களாக மாட்டார்'' என்பதாக அவர் பதிலளித்தார்.

"மித உணவையும் பானத்தையும் கடைப் பிடியுங்கள். இரவில் வணங்கும் சக்தியைப் பெறுவீர்கள். இரவில் வணங்கும் சிரமம் இறுதி நாளின் பயங்கரங்களிலுள்ள சிரமத்தைப் பார்க்கினும் மிக இலேசானது'' என்பதாக தாபித்துல் புனானி ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறியுள்ளார்.

"வானிலுள்ள நட்சத்திரங்களின் பிரகாசத்தைப் புவியிலுள்ள மனிதர்கள் பார்ப்பது போல, புவியில் தஹஜ்ஜுதுத் தொழுவோரின் வீடுகளை மலக்குகள் பார்த்து. இது தஹஜ்ஜுதுத் தொழுகிற இன்னாரின் வீடு, 'இது இன்னாரின் வீடு' என்று கூறுகின்றனர்'' என்பதாக அறிவிக்கப்படுகிறது.

தஹஜ்ஜுதுத் தொழுவோர் தங்கள் குடும்பத்தாருக்கு ஷஃபாஅத்துச் செய்வர் (பரிந்து பேசுவர்) என்பதாகச் சிலர் கூறி இருக்கிறார்கள்.

இரவு வணக்கம் இல்லாவிடில் இவ்வுலகில் வாழ்வதை நான் விரும்பவில்லை என்று ஜுனைதுல் பகுதாதீ ரஹ்மத் துல்லாஹி அலைஹி கூறியுள்ளார்.

தஹஜ்ஜுதுத் தொழுகைக்குரிய சரியான நேரம் எது? என்பதில் ஏகமனதான அபிப்பிராயம் கூறப்படவில்லை. இரவை ஆறு பாகங்களாக ஏற்படுத்தி நான்காவது ஐந்தாவது பாகத்தில் தொழுவது மேல் என்பதாக இமாம் ஷாஃபிஈ ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறியுள்ளார்கள்.

அல்லாஹு தஆலாவிற்கு மிகப் பிரியமான தொழுகை தாவூதுடைய தொழுகை, பாதி இரவு தூங்கி விட்டு எழுந்து மூன்றிலொரு பங்கு இரவு வணக்கம் புரிந்து அப்புறம் ஆறில் ஒரு பங்கு இரவு தூங்குவார் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

தஹஜ்ஜுதுத் தொழுகை இத்தனை ரக்கஅத்துகள்தான் என்று வரையறுக்கப் படவில்லை. இரவில் எழுந்து வணங்க வேண்டும் என்ற நிய்யத்துடன் ஒருவர் தன் படுக்கைக்கு வந்து, இரவில் எழுந்திருக்காமல் விடியும் வரையில் தூங்கிவிட்டால், அவரின் நிய்யத்துப்படி அல்லாஹு தஆலா அவருக்கு (நன்மையை) எழுதி விடுகிறான். அவருடைய தூக்கம் அவருக்கு ஸதக்காவாக (தர்மமாக) ஆகி விடுகிறது என்று ஹதீஸில் கூறப்பட்டிருப்பதால், ஒவ்வொருவரும் தன் படுக்கைக்குச் செல்கையில் துயிலெழுந்தால் தொழலாம். இல்லையேல் நன்மைப் பயனாவது கிடைக்கட்டும் என்ற நிய்யத்துடன் செல்ல வேண்டும். சன்மார்க்க வழியிற் செல்லும் முரீதானவன் எதிலும் தீவிரமாக முனைந்து மிகவும் கடப்பாகச் செய்யாமல் சிறுகச் சிறுக வணக்கத்தில் ஈடுபட வேண்டும். ஒரு காரியம் அது மிக கொஞ்சமாக இருந்த போதினும், அதனை நிரந்தரமாகச் செய்வதுதான் அல்லாஹு தஆலாவிற்கு அதிகப் பிரியமானது.



## மூன்றாவது ருக்னு மௌனம்

அவசியமின்றிப் பேசாதிருப்பதற்கு மௌனம் என்று பெயர். உடலுக்கு மிக இலேசாகவும் மீஜான் என்னும் தராசில் மிக பளுவாகவும் உள்ள ஒரு அமலை உனக்கு நான் அறிவிக்கட்டுமா? என்று எனக்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். "நல்லது யா ரசூலல்லாஹ்" என்றேன். மௌனம், நற்குணம், அவசியமில்லாததைத் துறந்து விடல் என்று கூறினார்கள்.

"தொழுகை சன்மார்க்கத்துக்குத் தூண், மௌனம் சிறந்தது; நோன்பு நரக நெருப்பை விட்டுக் காப்பாற்றுங் கேடயம்; சன்மார்க்கத்துக்காகப் போரிடுவது சன்மார்க்கத்தின் கொம்பு; மௌனம் சிறந்தது" என்று ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது.

"வணக்கம் பத்து பாகங்கள். அவற்றில் ஒன்பது மௌனம். ஒன்று மனிதரை விட்டு விலகிச் செல்லல்" என்று ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

"பேச்சு அதிகமானால் தவறு அதிகமாகும். அதிகமாகத் தவறியவர் நரகில் வீழ்வார்" என்று ஒரு பெரியார் கூறியுள்ளார்.

வீண் பேச்சுக்களை விட்டு நாவைக் காத்துக் கொள்ள வேண்டும் என்றும், பொருட்களில் எதன் மீதும் எண்ணங்கள் செல்லா வண்ணம் மனதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும், எவருடைய நா மௌனமாக இருக்கிறதோ அவருடைய இருதயம் ஞான இரகசியங்களுக்காகத் திறந்து விடும். அவருக்கு மெய்ஞானங்கள் வெளியாகும் என்று அஸ்ஸெய்யிதுல் பக்ரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறியுள்ளார்.

### நான்காவது ருக்னு தனித்திருத்தல்

பிறருடன் சேர்ந்து உறவாடுவதைத் துறந்து தனிமையிலிருந்து, எஜமானனான அல்லாஹு ஸுப்ஹானஹு வதஆலாவின் நட்பைத் தேர்ந்தெடுத்தல். இதற்கு ஒதுங்குதல் (அஸ்லத்) என்று பெயர். இது நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்திலிருந்த ஸஹாபிகளில் சன்மார்க் கத்தைக் கற்றுக் கொள்ளவும் பிறருக்குக் கற்றுக் கொடுக்கவும் தங்களை ஒதுக்கி வைத்துக் கொண்டவர்களான அஹ்லுஸ் ஸுஃப்பா என்ற வகையினரின் தன்மை, முரீது ஆகிய சிஷ்யன் தன்னுடைய ஆரம்ப காலத்தில் தன் இனத்தாரை விட்டு ஒதுங்கி இருப்பது அவசியமாகும். அவ்வாறு ஒதுங்காமலிருந்தால் வெற்றி அடைய முடியாது.

"ஈடேற்றம் என்பது என்ன? யா ரசூலல்லாஹ் என்று வினவினேன். உமது நாவைக் காத்துக் கொண்டு, உமது வீட்டுக்கு விரைந்து விடுவீராக, இன்னும் உமது தவறுக்காக வருந்தி அழுவீராக" என்று பதிளளித்தார்கள் என்று அபூ உமாமத்தல் பாஹிலீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு கூறியுள்ளார்.

"(மக்களை விட்டு) ஒதுங்கி விடுவதைப் பார்க்கினும் இக்லாஸ் என்னும் அந்தரங்க சுத்தியைத் தூண்டக் கூடிய காரியம் எதையும் நான் பார்க்கவில்லை" என்று துன்னூனில் மிஸ்ரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறியுள்ளார்.

அஸ்லத்து (ஒதுங்குதல்) என்பது அக ஒதுங்கை, புற ஒதுங்குகை ஆக இரண்டு வகைப்படும். அக ஒதுங்குகை என்பது இறைவனிடத்தில் இருதயம் ஒதுங்கி விடல், சிருஷ்டிப் பொருள் களைப் பற்றி கொஞ்சங் கூட லட்சியம் இல்லாமலாகி விடல்;



அப்பொழுது, மக்களை நிழல்களைப் போலவே அவர் காண்பார். முப்பது வருட காலமாக நான் ஹக்குடன் (இறைவனுடன்) பேசிக் கொண்டிருந்தேன். தங்களுடன்தான் நான் பேசிக் கொண்டிருக் கிறேன் என்று என்னைப் பற்றி மக்கள் எண்ணிக் கொண்டி ருந்தனர் என்பதாக அபூயஜீத் புஸ்தாமீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறியுள்ளார். இது அக ஒதுங்குகையைச் சேர்ந்தது. இது இறைவன் சமூகத்தை நெருங்கிய பெரியார்களாகிய முஹக்கிக்குகளின் நிலை.

புற ஒதுங்குகை என்பது மனிதரை விட்டுப் பிரிந்து, கல்வத்து என்னும் தனி வீட்டில் ஒதுங்கி இருத்தல், தனக்குப் பிறராலும், பிறருக்குத் தன்னாலும் தொந்தரவு ஏற்படாமல் விலகி இருந்து இறைவனை இரைஞ்சுதல்

### அப்தால்களின் வழி

அப்தால்களின் தரீக்கில் (வழியில்) செல்ல விழைபவரே, அப்தால்கள் என்ற ஒலிமார்களின் வழி என்பது மௌனமாக இருத்தல், விழித்திருத்தல், பசித்திருத்தல், தனித்து ஒதுங்கி இருத்தல் ஆகியவைகளாகும், தனித்திருக்க நீ நாடுவாயாயின் கல்வத் என்னும் தனி வீட்டினுள் நுழைவதற்கு முன்னர் தனித்திருக்கும் பழக்கத்தை நீ முதலில் கற்றுக் கொள்ள வேண்டும். அதற்காக முதலாவதாக மக்களை விட்டு ஒதுங்கி இருந்து பழக வேண்டும், உணவைக் குறைத்துக் கொள்ள வேண்டும், தூக்கத்தையும் குறைக்க வேண்டும், தன்னுடைய தோழர்களை விட்டுப் பிரிந்திருப்பதால், இறைவன் சமூகத்தை நெருங்குவதற்காக தனித்திருக்கிறேன் என்று நிய்யத்துச் (நிர்ணயம்) செய்து கொள்ள வேண்டும். கெஞ்சிக் கேட்குதல்,

பணிந்து தன் பாவச் செய்கையை விட்டு விலகுதல், தவ்பாச் செய்தல், பொறாமை, துவேஷம், சதி, வஞ்சகம், சூது, பிறரை பொய்ப்பித்தல் முதலியவற்றை விட்டு அகத்தைச் சுத்தப்படுத்த வேண்டும். தன்னுடைய குருவின் தயையுடன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு, அவருக்கு முற்றிலும் கீழ்ப்படிபவராக ஆகிவிடவேண்டும். அவரல்லாத மற்றவர்களிலிருந்து அற்புதங் களைப் பார்த்த போதினும் தன் குருவின் பாலுள்ள தொடர்பு கொஞ்சமும் குறையலாகாது. இவ்வாறு தன் குருவின் வார்த்தையை நம்புவதுதான் ஞான வழியிற் செல்பவரின் முதல் வெற்றி. இதற்கு ஃபத்தஹ் என்று பெயர். இவ்வெற்றி ஏற்பட்டால் அவர் கல்வத்தில் (தனி வீட்டில் தனித்து) இருப்பதற்குத் தகுதியாகி விட்டவராவார்.

தன் ஆசிரியரல்லாத மற்றவரின் மீது தன்னிடம் சம்பந்தம் இருப்பதாகக் கண்டால், கல்வத்தை விட்டு வெளியாகி மீண்டும் அஸ்லத்துக்கு (ஒதுங்கி இருத்தலுக்கு) திரும்பி விட வேண்டும். இப்படி வெளியாகுவதற்கு **ஜல்வத்து** என்று பெயர்.

### கல்வத்தின் ஷரத்துகள்

ஜல்வத்துக்கு வந்தவர் குளித்துச் சுத்தமாகி, நறுமணங் களைப் புகைத்து மீண்டும் கல்வத்துக்குச் செல்ல வேண்டும். கல்வத்தில் இருப்பதற்கு இருபத்து நான்கு ஷர்த்துக்கள் இருக்கின்றன அவை வருமாறு:-

1. விழித்திருத்தல், ஜபித்தல், கொஞ்சமாக உண்ணல் ஆகியவற்றிற்குத் தன்னைப் பழக்கப்படுத்திக் வேண்டும்.



2. குருவின் கீழிலிருந்து பயிற்சி பெற்றுக் கொண்டு இருந்தால், கல்வத்திலிருக்க குருவிடம் அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும்.

3. தன்னுடைய தீங்கை விட்டு மக்களும், மக்களுடைய தீங்கை விட்டுத் தானும் தப்பித்துக் கொள்வதற்காக கல்வத்தில் இருக்கிறேன் என்று நிய்யத்துச் செய்து, அதில் நுழையக் கூடாது.

4. மஸ்ஜிதில் நுழைவது போல அஊது பில்லாஹி மினஷ் ஷைத்தானிர் ரஜீம், பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் என்று ஓதி அல்லாஹு தஆலாவுக்காக அந்தரங்க சுத்தியாக நுழைய வேண்டும்.

5. முதலில் ஆசிரியர் நுழைந்து இரண்டு ரக்கஅத்து நஃபில் தொழு வேண்டும். இதனால் மாணவனுக்கு துரிதமாக வெற்றி கிடைக்க வாய்ப்பு ஏற்படும்.

6. அல்லாஹு தஆலாவுக்கு நிகர் எதுவுமில்லை. அவனைப் போன்ற வஸ்து எதுவுமில்லை. பார்வைகளால் அவனைக் காண முடியாது. மானக் கேடானவைகளைச் செய்யுமாறு அவன் ஏவ மாட்டான் என்பதாக உறுதியாக விசுவாசம் கொள்ள வேண்டும். கல்வத்திலிருக்கையில் நல்ல கிரியைகளைப் புரிவதை, விட்டு விடலாகாது. கல்வத்திலிருக் கையில் அவருக்கு ஏதாவது தோற்றமளித்து, "நான்தான் அல்லாஹ்; நீ என்னுடைய ஒலி, எனக்கு பிரியமானவர். உமக்கு நான் எதையும் செய்ய அனுமதித்திருக்கிறேன். கஷ்டம் சங்கடம் ஆகியவற்றைவிட்டு உன்னை இலேசாக்கிக் கொள். உன்மீது இன்றைக்குப் பின்னர் நான் கோபங் கொள்ள மாட்டேன்" என்று உன்னிடம் கூறப்பட்டால், அது ஆறு திசைகளில் ஏதேனும் ஒரு

திசையிலிருந்துதான் வந்திருக்க வேண்டும். அல்லது திசையின்றி வந்திருக்க வேண்டும். அது ஏதேனும் ஒரு திசையிடமிருந்து வந்திருந்தால், நிச்சயமாக அது ஷைத்தானிலிருந்து உண்டான சப்தம் என்பதாக உணர்ந்து கொள். உடனே, அல்லாஹு தஆலாவிடம் காவல் தேடி, திக்ரு செய்வதை (ஜபிப்பதை) அதிகமாக்கியும் சூரத்துல் இக்லாஸையும் திருக்குர்ஆனையும் ஓதுவது கொண்டும் உன்னை பலப்படுத்திக் கொள்.

திசையின்றி அச்சப்தம் வந்திருந்தால், அது அல்லாஹு தஆலாவிடமிருந்து வந்ததுதான். என்றாலும், அது சோதனைக்காகவும் அவனது சமூகத்தை விட்டுத் துரத்துவதற்காகவும் வந்திருக்கலாம் அல்லது உன்பால் அவன் திருப்தியடைந்திருப்பதை உணர்த்துவதற்காக வந்திருக்கலாம். எதற்காக வந்தாலும் ஃபர்லான காரியங்களையோ இதர வழிபாடு களையோ எதையுமே சன்மார்க்கத்துக்கு முரணான முறையில் நீ விட்டு விடக்கூடாது. ஷைத்தானிலிருந்து அச்சப்தம் வந்திருந்தால் உடல் இச்சை, காலத்துக்கேற்றவாறு திரும்புதல் முதலியவற்றில் உன் மனம் சாடும். அல்லாஹு தஆலாவிடமிருந்து அது வந்திருந்தால், இவற்றில் உன் மனம் சாராமல் அவன் பால் ஒன்றி இருப்பதில் உனக்கு மகிழ்ச்சியும் ஆர்வமும் இருக்கும். இதுதான் அதனைப் புரிந்து கொள்வதற்கான அடையாளம்.

7. கராமத்து என்னும் அற்புத நிகழ்ச்சியின்பால் மனதைச் செலுத்தக் கூடாது. பற்பல விதமான கராமத்துகள் வெளியான போதிலும் அவற்றைக் கவனிக்கலாகாது. அவைகள் இறைவனிடமிருந்து வந்தன. ஆதலால் அவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால், அவற்றிலேயே நின்று விடலாகாது.



8. சுவரில் தன் முதுகைச் சாய்த்து ஒட்டிக் கொள்ளவும் கூடாது; படுக்கையில் சாயவும் கூடாது; தலையைக் கவிழ்த்திக் கொள்ளவும் கூடாது; கண்ணை மூடிக் கொள்ளவும் கூடாது.

9. தன்னுடைய எண்ணங்களையும் ஊசாட்டங்களையும் சிதற விடாமல் மனதைக் கவனித்துக் கொண்டு, இறைவன் சமூகத்தில் இருப்பதாக ஒரே தியானத்துடன் இருக்க வேண்டும்.

10. கல்வத்து இருளாக இருக்க வேண்டும். சூரிய வெளிச்சம் அதில் செல்லக்கூடாது. உன்னுடைய உயரத்துக்கு அந்த அறையின் உயரம் இருக்க வேண்டும். அதன் நீளம் நீ சுஜூது செய்கிற அளவுக்கும், அதன் அகலம் நீ உட்காருகிற அளவுக்கும் இருக்க வேண்டும். அதில் துவாரமும் ஜன்னலும் இருக்கக் கூடாது. அதன் தலைவாயல் கிப்லாவின்பால் இருக்க வேண்டும். மக்களுடைய சப்தம் கேட்காதவாறு கல்வத்து அறை தூரமாக இருக்க வேண்டும். அதன் தலைவாசல் உயரமாக இருக்கலாகாது. அதற்கு, தாள் பூட்டு அடைப்பு திறப்பு இருக்கக் கூடாது. மனிதர் வாழும் இடத்தில் அந்த அறை இருக்க வேண்டும். முடியுமானால் அந்த அறைக்குப் பக்கத்தில் வேறு யாராவது படுத்துத் தூங்குவதற்கு வசதி செய்து கொள்வது நல்லது. ஆனால், அவர் அதிகமாக சந்தடி செய்து உன் கவனத்தை மாற்றக் கூடாது. நீயும் அதிகமாகச் சந்தடி செய்யலாகாது.

11. நோன்பு நோற்க வேண்டும், நோன்பு துறக்கும் போது அதிகமாக உண்ணவோ பானங்களை அதிகமாக அருந்தவோ கூடாது. இவ்வாறு பானங்களைக் குறைப்பதால், வாய்வு தொந்தரவு குறைவாக இருக்கும்.

12. எந்நேரமும் ஒளுவுடனிருக்க வேண்டும்.

13. அல்லாஹு தஆலாவை திக்ருச் செய்தல் அல்லது ஷரீஅத்தின் அவசியமேற்படல் ஆகிய இவ்விரு காரணங் களுக்காக அல்லாமல் அனாவசியமாகப் பேசாதிருக்க வேண்டும். இக்காரணங்களுக்காக அல்லாமல் வீண் பேச்சுகளில் ஈடுபட்டால் நற்செயல்கள் பயனின்றி அழிந்து விடும். இருதய ஒளியைப் போக்கிவிடும்.

14. ஒளுச் செய்வதற்காக கல்வத்தை விட்டு வெளியில் வந்தால், பார்வையை இங்குமங்கும் அனாவசிமாகச் செலுத்தாமல் தலை கவிழ்ந்த வண்ணம் வந்து, ஒளுச் செய்து விட்டு, தாமதமின்றிச் சென்று விட வேண்டும் அங்குமிங்கும் அனாவசிய மாக திரும்பிப் பார்ப்பதால் திக்ரு செய்வதில் தடங்கல்கள் ஏற்படும்.

15. ஜும்ஆவையும் இமாம் ஜமாஅத்தாகத் தொழுவ தையும் தவறவிடக் கூடாது. நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை முற்றிலும் பின்பற்றுவதுதான் கல்வத்தில் இருப்பதின் தலையான நேக்கம். ஆதலால், ஜும்ஆவையோ இமாம் ஜமாஅத்தாகத் தொழுவதையோ விட்டு விடுவதில் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை முற்றிலும் பின்பற்ற வேண்டும் என்ற நோக்கம் சித்தியாவதில் பெரும் தடங்கல் ஏற்படும். இதற்காக இமாம் ஜமாஅத்து நடைபெறுகிற மஸ்ஜிதுக்குச் செல்லல் அல்லது இமாமத்துச் செய்யக் கூடிய ஒருவரை நியமித்துக் கொண்டு கல்வத்தை விட்டு வெளியில் வராமல் வாசலைத் திறந்து வைத்து இமாமைப் பார்த்து தொழல் ஆகியவை கல்வத்துக்கு விரோதமானவைகளல்ல, கவத்தில் இருந்த சிலருடைய அறிவு குழம்பி விட்டதை நாங்கள் பார்த்திருக்கிறோம். இமாம் ஜமாஅத்தை விட்டதால் தான் இந்நிலை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கலாம் என்று ஸுஹ்றவரதீ றஹ்மதுல்லாஹி அலைஹி கூறியுள்ளார். தொழுகை முடிந்தவுடன் மக்களுடன் சேர்ந்து இருக்காமல் கல்வத்துக்கு வந்து சுன்னத்து, முதலியவற்றைத் தொழ வேண்டும். ஃபர்லு, சுன்னத்து, ரவாத்திபு நஃபில், ஒளுவு நஃபில் ஆகிய தொழுகை களுடன் மட்டும் சுருக்கிக் கொள்ளலாகாது; தரீக்குக்கு ஏற்பட்ட விர்துகளையும் ஓத வேண்டும்.



16. அதிகமாகப் பசித்திருக்கவும் கூடாது. அதிகமாக வயிறு நிறம்ப உண்ணவும் கூடாது. உணவு விஷயத்தில் நடுத்தரமாக இருந்து கொள்ள வேண்டும். நோன்பு துறக்கும் வேளை வந்தால் பசியாறிக் கொண்டிருக்காமல் ஒரு பேரீத்தம் பழத்தினாலோ ஒரு முடக்கு தண்ணீராலோ நோன்பைத் துறந்து விட்டு மகுரிபுத் தொழுகையை இமாம் ஜமாஅத்தாக நிறைவேற்று வதில் ஈடுபட்டு விட வேண்டும். தொழுகைகள் முடிந்த பின்னர் உணவை உட்கொள்ள வேண்டும். அரிசிக் கஞ்சி போன்ற வற்றைத் தயார் செய்து கொடுக்கக் கூடிய பணியாளர் இருந்தால், கஞ்சி தயார் செய்வித்து அருந்தலாம், ஆனால் அதில் உப்பிடலாகாது. உடம்பில் ருசி தெரியா வண்ணம் கொஞ்சமாக உப்பிட்டுக் கொள்வது குற்றமல்ல, தொலிக் கோதுமைக் கஞ்சி இல்லையேல் மணிக் கோதுமைக் கஞ்சியை உப்பில்லாமல் அருந்துவதும் நல்லதுதான். இரவு உணவைப் பிற்படுத்துவதால் சிரமமேற்படும் என்றிருந்தால்தான், மேற்கண்ட கஞ்சியை அருந்தலாம். சிரமம் ஏற்படாதென்றிருந்தால் கஞ்சியை அருந்தாமல் உணவுக்குரிய வேளையில் உணவை அருந்த வேண்டும்.

17. தூக்கம் மிகைக்காத வரையில் தூங்கலாகாது. திக்ருச் செய்வதில் தடுமாற்றம் ஏற்படுவதுதான் தூக்கம் மிகைத்து விட்டது என்பதற்கு அடையாளம். உடல் சுகத்தைக் கருதி தூங்கலாகாது. தரையில் படுக்காமல் இருக்க முடியும் என்றிருந்தால், உட்கார்ந்த வண்ணமே தூங்கிக் கொள்வது நல்லது. தூக்கம் சீதளத்தை உண்டாக்கும். சீதளம் வளருவது மண்ணின் அம்சத்துக்குத் தீங்கு செய்யும். இதனால் அகம் தெளிவதில் களங்கமேற்படும். ஆலமுல் மலக்கூத்தில் ஆன்மாவின் முன்னேற்றத்தையும் தடுத்து விடும். இந்நிலை ஏற்பட்டால் கல்வத்தில் இருந்த நற்பயன் இல்லாமற் போய் விடும்.

18. நல்லதோ கெட்டதோ எந்த விதமான ஊசாட்டமும் மனதில் தோன்றாமல் தடுத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில், திக்ருச் (ஜபம்) செய்ததால் ஏற்பட்ட மன ஓர்மைப்பாட்டை அவ்வூசாட்டங்கள் கலைத்து விடும். நல்லது தீயது என்று பாகுபாடு செய்து, தள்ள வேண்டியதைத் தள்ளி, கொள்ள வேண்டியதை ஏற்றுக் கொள்ளும் அந்தஸ்துக்கு வராத ஆரம்ப நிலையிலுள்ளவர்கள் எல்லா விதமான ஊசாட்டங்களையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஆரம்ப நிலையைக் கடந்தவர்களுக்கு இந்த ஷர்த்து இல்லை.

தினந்தோறும் எழுபதாயிரம் எண்ணங்கள் மனித உள்ளத்திலிருந்து தோன்றுகின்றன. இவை யாவற்றையும் ஐந்து வகைகளாகப் பிரிக்கலாம், ஒன்று இறைவனால் தோற்றுவிக்கப் படுவன. இரண்டு மலக்குகளால் தோற்றுவிக்கப்படுவன. மூன்று இருதயத்தால் தோற்று விக்கப்படுவன. நான்கு ஷைத்தானால் தோற்றுவிக்கப்படுவன. ஐந்து ஆணவத்தால் (நஃப்ஸினால்) தோற்றுவிக்கப்படுவன. இறைவனால் தோற்றுவிக்கப்படுவதற்கு



'சித்தாப்' என்றும், மலக்குகளால் தோற்றுவிக்கப்படுவதற்கு 'இல்ஹாம்' என்றும், இருதயத்தால் தோற்றுவிக்கப்படுவதற்கு 'ஹாத்திப்' என்றும், ஷைத்தானால் தோற்று விக்கப்படுவதற்கு 'வஸ்வாஸ்' என்றும், நஃப்ஸால் (ஆணவத்தால்) தோற்று விக்கப்படுவதற்கு 'ஹாஜிஸ்' என்றும் பெயர்.

இறைவன் சமூகத்தை நெருங்கியதற்கு அடையாளமாக வுள்ளவை முதல் இரண்டு வகைகள்தான். அனுசரிக்கவும் தள்ளவும் தகுதியுள்ளவை மூன்றாவதும், நான்காவதும். இந்த நான்கினையும் புரிந்து கொள்வதற்குச் சில அடையாளங் களிருக்கின்றன. இவ்வாறான ஊசாட்டத்தைத் தொடர்ந்து இன்பமும் நன்றியும் சந்தோஷமும் ஏற்பட்டால் அது மலக்கால் தோற்றுவிக்கப்பட்டது என்றும், இவ்வெண்ணங்களைத் தொடர்ந்து அயர்வும், சோர்வும், கால் கைகளில் வலியும் நோவினையும் ஏற்பட்டால், அது ஷைத்தானால் தோற்றுவிக் கப்பட்டது என்றும், இதயத்தில் வலியும் வன்னெஞ்சமும் மனப் போராட்டமும் ஏற்பட்டால் அது நஃப்ஸால் (ஆணவத்தால்) ஏற்பட்டது என்றும் கொள்ள வேண்டும். இந்த வித்தியாசங்களை உணர்ந்து கொள்ள இருதயத் தெளிவும் அகத் தூய்மையும் இருக்க வேண்டும்.

தவிர, அல்லாஹு தஆலாவால் இது உண்டாகி இருந்தால் அடியானுக்கு எச்சரிக்கை செய்வதாகவும் அவனை எழுப்பி விடுவதற்காகவும், மலக்கினால் ஏற்பட்டிருந்தால் வணக்கத்துக்கு உற்சாக மூட்டுவதற்காகவும், இருதயத்தினால் ஏற்பட்டிருந்தால் மலக்குக்கு நேர்படுவதற்காகவும், ஷைத்தானால் ஏற்பட்டிருந்தால் பாபத்தை அழகாக்கி காட்டுவதற்காகவும், நஃப்ஸினால் (ஆணவத்தால்) இருந்தால் அதனை விடாப்

பிடியாகக் கொள்வதற்காகவும் இருக்கும். சில சமயங்களில் வணக்கம் புரியும் விஷயத்திலும், ஒரு திக்ரிலிருந்து இன்னொரு திக்ரின்பால் செல்லும்படியும் ஷைத்தான் தூண்டுவான். இப்படிப் பட்டவைகள் நஃப்ஸினால் (ஆணவத்தால்) ஏற்பட்டதா? மலக்கினால் ஏற்பட்டதா? என்று உணர்ந்து கொள்ள முடியாமல் குழப்பம் ஏற்படலாம். மலக்கினால் ஏற்பட்டதாக இருந்தால், அதற்குப் பின்னர் அமைதியும் சாந்தியும் உண்டாகும். ஷைத்தானால் ஏற்பட்டதாக இருந்தால், அதற்குப் பின்னர் வெறுமையும் எரிச்சலும் உண்டாகும் என்று சிலர் கூறியுள்ளார்கள்.

19. சன்மார்க்க வழியில் இட்டுச் செல்கிற தன்னுடைய ஞான ஆசிரியராகிய ஷெய்குடன் தன் இருதயத்தை எப்பொழுதும் இணைத்து வைத்துக் கொள்ள வேண்டும். இந்த ஷெய்கானவர் உண்மையாகவே ஷரீஅத்தைப் பேணி, திருக்குர்ஆனையும் சுன்னத்தையும் கடைப்பிடிப்பவராக இருக்க வேண்டும். தனக்கு நிகழ்ந்தனவற்றைக் குறித்து அந்த ஷெய்கிடமே கேட்டுப் புரிந்து கொள்ள வேண்டும். இவர்தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அம்மாணவர் அடைவதற்கான தலை வாயலாக இருக்கிறார். ஆதலால், அவரை அகத்திலும் புறத்திலும் பேணி மதிக்க வேண்டும்.

20. தன்னுடைய ஷெய்கைத் தவிர்த்து வேறு எவர் கதவைத் தட்டினாலும் கல்வத்தின் கதவைத் திறக்கக் கூடாது. இயன்றால் தன்னிடம் கேட்கும் கேள்விக்கு திருக்குர்ஆன் ஆயத்தைக் கொண்டு பதிலளிக்க வேண்டும். இல்லையேல் ஒரு வார்த்தை அல்லது இரண்டு வார்த்தைகளைக் கொண்டு பதிலளிக்கலாம். கல்வத்திலிருக்கும் காலத்தில் தன்னுடைய ஷெய்கைத் தவிர்த்து வேறு எவரிடத்திலும் பேசக் கூடாது. மூன்று



நான்கு பேச்சுகளுக்கதிகமாகப் பேசவும் கூடாது, ஏனெனில், அதிகமாகப் பேசுவது மன ஓர்மையைச் சிதறடித்து விடும்.

21. தினசரி நிகழும் சம்பவங்களில் ஏதேனும் ஒன்றைக் கண்டால், அதனைப் பற்றித் திருப்தி யடையக் கூடாது. அதாவது அதனைப் போதுமாக்கிக் கொள்ள லாகாது. அதற்குரிய விளக்கத்தை. தன்னுடைய ஷெய்கு கூற வேண்டும் என்று கோரவுங் கூடாது. விளக்கம் கூறாமல் இருப்பது நல்லது என்று ஷெய்கு எண்ணி விளக்கம் கூறாமலும் இருக்கலாம். ஆதலால், விளக்கத்தை எதிர் பார்க்காமல் நல்லதோ கெட்டதோ எதுவானாலும் ஷெய்கிடத்தில் கூறாமல் மறைக்கக் கூடாது.

22. எந்நேரமும் திக்ருச் செய்து கொண்டே இருக்க வேண்டும். லாஇலாஹ இல்லல்லாஹு என்பதுதான் ஏற்றமான திக்ரு என்பதாக ஜுனைத் பகுதாதி ரஹ்மத்துல்லாஹி அலைஹி கருதுகிறார். அல்லாஹ் என்ற திக்ருதான் ஏற்றமானது என்பதாக பிற்காலத்தவர்களில் ஒரு கூட்டம் கருதுகிறது. கல்வத்தில் இருக்கிற முரீதின் தன்மையைக் கருதி அவருடைய ஷெய்கு எந்த திக்ரைக் கொடுக்கிறாரோ, அந்த திக்ரையே செய்ய வேண்டும் என்று ஷெய்கு தமர்த்தாஷ் ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறியுள்ளார். ஆரம்ப நிலையிலுள்ளவர் லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற திக்ரையும், கடைசி நிலையிலுள்ளவர் அல்லாஹ் என்ற திக்ரையும் கடைப்பிடிக்க வேண்டும் என்று சில பெரியார்கள் கூறியுள்ளார்கள். தவிர, லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற திக்ரில் பலனைக் கண்டால், அதனைக் கடைப்பிடிக்க வேண்டும். அல்லாஹ் என்ற திக்ரில் பலனைக் கண்டால், அதனைப் பற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டும். இது அவரவர் மனநிலையையும் பண்பையும் பொறுத்த விஷயம் என்று பலர் கூறியுள்ளார்கள்.

இதற்கிடையே தரீக்கத்துக்குரிய திக்ரையும் அந்தந்தக் காலத்தில் குறித்த நியதிப்படி விடாமல் செய்து கொள்ள வேண்டும். (திக்ரு சம்பந்தமான இதர விபரங்களை அறிய விரும்புவோர் எம்மால் எழுதப்பட்ட **அகத்தூய்மை** என்ற நூலைப் பார்க்கவும்).

23. அந்தரங்க சுத்திக்கு மாறானவைகளாகிய பிறரை மெய்ப்பிக்கச் செய்வதற்கான எந்த அம்சத்துக்கும். மறைவான ஷிர்க்கிற்கும் இடங் கொடுக்கலாகாது. இது சகல நற்செயல் களையும் அழித்து விடும்.

24. இத்தனை நாட்கள்தான் கல்வத்திலிருக்க வேண்டும் என்று காலத்தை முற்கூட்டியே நிர்ணயித்துக் கொள்ளலாகாது. நாற்பது நாட்கள் முடிந்தவுடன் வெளியேறுமாறு மனம் கூறுவதற்கு இடமேற்படுத்திக் கொள்ளலாகாது. இவ்விதமாக மனம் கூறினால் முதல் நாளிலேயே வெளியேறி விட வேண்டும். இறுதி நாள் வரையில் கல்வத்துதான் உன்னுடைய கப்ரு (மண்ணறை) என்று ஆரம்பத்திலேயே மனதிற்குக் கூறி விட வேண்டும். (கல்வத்து சம்பந்தமான இதர விபரங்களை எம்மால் எழுதப்பட்ட '**அல்அன்வார்**' என்ற நூலில் காண்க.).

இது புற கல்வத்து. இதுதான் அக கல்வத்துக்கு ஆரம்பம். அதாவது புற உருவம் மற்றவர்களுடன் கலந்திருக்கிற அதே சமயத்தில் அதன் அகம் அல்லாஹு தஆலாவினுடன் சேர்ந்திருத்தல். இதனைக் குறித்துத்தான் ஹளரத் ஜுனைத் பகுதாதி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கல்வத்தில் இருக்கையில் உங்களுடைய மருகுதல் அல்லாஹு தஆலாவுடன் இருக்கும் பட்சத்தில். நீங்கள் வனாந்திரங்களிலிருப்பதும் கல்வத்திலிருப்பதும் உங்களுக்கு சமம்தான். ஆனால், கல்வத்திலிருப்பதுதான் உங்களுடைய மருகுதலாக இருப்பின், அதனை விட்டு நீங்கள் வெளியேறினால் உங்கள் மருகுதலும் நீங்கிவிடும்'' என்று கூறியுள்ளார். இந்த இருபத்து நான்கு ஷர்த்துக்களையும் கல்வத்திலிருக்கிற மாணவன் பற்றிப் பிடித்துக் கொள்வது அவசியமாகும்.



ஆசிரியரிடத்தில் மாணவன் நடந்து கொள்ள வேண்டிய ஒழுங்குகள்.

ஷெய்கு (ஆசிரியர்)களின் நட்பில்லாமல், எவரும் உன்னத இடத்தையும் சிறந்த பதவியையும் அடைந்து விடவில்லை, ஷெய்குகளுடன் சேர்ந்திருந்தும், அடியடியும் பிசகாமல் அவர்களைப் பின்பற்றியும், பணிவிடை செய்தும், மரியாதையாக நடந்துமே பலர் உயர் பதவிகளை அடைந்திருக்கின்றனர். அவர்களைக் கௌரவிக்கும் முறை தவறி, அவர்களுடன் இணங்கி இருந்தோர், அவர்களால் பிரயோஜனம் அடையாமற் போய் விட்டனர். ஷெய்குமார்களை கௌரவிப்பதைத் தவிர்த்துக் கொள்வோரை அடியார்களுக்கிடையில் பழிக்கப்பட்டவராக ஆக்குவதன் மூலம் அல்லாஹு தஆலா சோதிப்பான் என்பதாக ஸெய்யிதுத் தாவாயிப் ஜுனைத் பகுதாதீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறி இருக்கிறார்கள்.

முரீதுகள் இறைவனை அடையாமல் நிர்ப்பாக்கியவான் களாகுவதெல்லாம் முரீதுக்குரிய ஒழுங்குகளை (உஸூல்களை) அவர்கள் கைவிட்டதினாலும், தங்கள் மனப்போக்கை பின்பற்றி நடந்ததினாலுமேயாகும். இவ்வாறானவர்களுக்கு ஸுலூக் என்னும் ஞானவழி நீண்டு விடும். பலர் இவ்வழியிற் செல்கையில் இடையிலேயே இறந்து விடுவர். அவர்கள் எவ்விதக் காரியசித்தி யையும் அடையாமலிருந்து விடுவர் என்று சிலர் கூறியுள்

ளார்கள். எனவே, முரீதானவர் (மாணவர்) ஷெய்குக்கு (ஆசிரியருக்கு)ச் செய்ய வேண்டிய ஒழுங்குகள் ஏராளம். அவற்றில் சிலவற்றைக் கீழே குறிப்பிடுவோம்.

ஒளுவில்லாமல் ஷெய்கிடம் செல்லலாகாது. அவர் கல்வத்திலிருந்தால் அவருடைய கில்வாவின் (கல்வத்து அறையின்) வாசலைத் தட்டலாகாது. சப்தமிட்டு திக்ருச் செய்ய வேண்டும். அச்சப்தத்தை ஷெய்கு செவியேற்று, அவரைச் சந்திக்க விரும்பினால், கல்வத்து அறைக்குள் அவர் வரும்படி கட்டளையிடுவார். அப்பொழுது அவரிடம் செல்ல வேண்டும். இல்லையேல் திரும்ப வந்து விட வேண்டும். ஷெய்கு பார்க்கும் விதமாக வீட்டில் அமரக் கூடாது. ஷெய்கு அழைத்தால், உடனே அதற்குச் செவி மடுக்க வேண்டும். ஷெய்கிடத்தில் அமர்ந்தால் தலை குனிந்து அமைதியாக இருக்க வேண்டும். அவர் கேட்கும் கேள்விகளுக்கு விவாத முறையில் மறுமொழியளிக்கக் கூடாது. அதிகமாகப் பேசலாகாது. அவருடன் பேசினால், சப்தமிடாமல் மெதுவாகப் பேச வேண்டும். தன் மனதில் உதயமாகிற நல்லதையோ கெட்டதையோ எதையும் அவரிடத்தில் மறைக்காமல் கூற வேண்டும். என்றாலும், அடிக்கடி தோன்றுவதும் நீண்ட காலமாக இருப்பதுமான எண்ணங்களைத்தான் கூற வேண்டும். பிறருடன் ஷெய்கு இருக்கும் போது அவற்றை ஷெய்கிடத்தில் கூறக்கூடாது. தனக்கு ஷெய்கு கூறுகிற யாவற்றையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆட்சேபணை செய்யக் கூடாது. மனத்தினுட் கூட ஆட்சேபணை செய்யக் கூடாது. ஷெய்கு தன் சிஷ்யனை சோதிப்பதற்காக எதையேனும் செய்வார். அது புறத்தில்தான் அப்படித் தோன்றும்; அந்தரங்கத்தில் அவர் அதனைச் செய்திருக்க மாட்டார்.



ஷெய்யிதீ யூசுஃபுல் அஜமி ரஹ்மத்துல்லாஹி அலைஹி தம்முடைய முரீதுகளில் ஒருவரைச் சோதித்தார். அவருக்கு ஏராளமான நன்மைகளைச் செய்தார். இதனைப் பார்த்த இதர ஃபக்கீர்கள் (மாணவர்கள்) பொறாமை யடைந்தனர். அந்த சிஷ்யரின் அந்தஸ்து இன்னது என்பதை மற்றவர்களுக்குக் காண்பிப்பதற்காக ஒரு வீட்டுக்குச் சென்று, அங்குள்ள ஒரு பெண்ணை அழைத்து வருமாறு அவருக்குக் கட்டளை யிட்டார். குறிப்பிட்ட இடத்திற்கு அந்த மாணவர் சென்று, குறித்த பெண்ணை அழைத்து வந்தார். அந்த பெண் வந்தவுடன் ஷெய்கு அவளை அழைத்துக் கொண்டு அறையினுட் சென்று, தலைவாசற் கதவைத் தாழிட்டுக் கொஞ்ச நேரம் வரை அங்கிருந்தார். இதனைப் பார்த்த ஃபக்கீர் (முரீது)கள் அத்தனைபேரும் மாறி விட்டனர். அந்த ஒரு முரீது மட்டும் மாறவில்லை. வாலிபரான அந்த முரீதை அவர் நோக்கி, உமது எண்ணம் என்ன? வென்று வினவினார். அதற்கவர் "அல்லாஹு தஆலா தலைநாளில் ஏற்பட்ட விதிகளின்படி, தாங்கள் பாபத்தில் நுழையாமல் ஒதுக்கி வைக்கப்பட்ட மஃஸூம் என்று தங்களை நான் கருதவில்லை. நீங்கள் செய்கிற தீங்குகளும் எங்களுக்கு நன்மையானவைகளே. பிரியம் இருக்கிற இடத்தில் தீமை தீது செய்யாது. கோபமுள்ள இடத்தில் நன்மை நலந்தராது. தாங்கள் ஆரிஃபு பில்லாஹ் (அல்லாஹு தஆலாவை அறிந்தவர்) அல்லாஹு தஆலாவைப் பற்றி எனக்கு அறிவித்துக் கொடுப்பீர்கள்; அவனை அடையும் வழியைக் காண்பிப்பீர்கள்; என்னைப் பார்க்கினும் தாங்கள் அவ்வழியை நன்கு அறிந்திருக் கிறீர்கள் என்பதற்காகத்தான் தங்களை நான் அண்டினேன்" என்றார். அப்பொழுது ஸெய்யிதீ யூசுஃப் அஜமி ரஹ்மத் துல்லாஹி அலைஹி "அல்லாஹ் உன்னில் பரக்கத்துச் செய்வானாக" என்று அவ்வாலிப முரீதுக்கு துஆ செய்தார்.

விரண்டோடுவது அல்லாஹு தஆலாவை அறியாததி னாலும் ஆணவத்தினாலுமே யன்றி வேறு எதனாலும் நிகழாது. அல்லாஹு தஆலாவை ஒருவர் உணர்ந்து தன் நஃப்ஸை (ஆணவத்தை) அடக்கி விட்டால், அல்லாஹு தஆலாவின் மீது அவனுடைய செய்கை பற்றி அவருக்கு எவ்வித ஆட்சேபனையும் இருக்காது. முக்கியமாக ஷெய்குமார்களைக் குறித்தும் ஆட்சேபனை இருக்காது. அப்பொழுது ஷெய்குமார் களிடத்தில் அவர்களின் பாதரட்சைகளைப் போலவும், மற்றவர்களிடத்தில் வாழ்விலும் கௌரவத்திலும் விலையில்லா மண்ணைப் போலவும் இருப்பார்கள். மனிதரின் மத்தியில் தனக்கு ஒரு விலை இருப்பதாக ஒருவர் கருதினால், அல்லாஹு தஆலாவின் கண்ணை விட்டு வீழ்ந்திடுவார். ஷெய்கு அவரை அழைக்காத வரையில் அவருடன் சேர்ந்திருந்து உண்ணலாகாது. இரவில் அல்லாமல் ஷெய்கு முன்னால் நடக்கலாகாது. முன்னால் நடக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால், அப்பொழுது நடக்கலாம். தன்னுடைய நிலையில் எதையும் அவருக்கு மறைக்கக் கூடாது. அவர் எழுந்தால் அவருடன் தானும் எழுந்திருக்க வேண்டும்.

ஷெய்கு வந்தால், அவரை எதிர் கொண்டழைத்து வரவேற்க வேண்டும். ஷெய்கிடமிருந்து செல்ல விரும்பினால், அவரிடம் அனுமதி பெற்றுச் செல்ல வேண்டும். அவருக்கு எதிரில் தூங்கக் கூடாது. கொட்டாவி விடக் கூடாது. சாய்ந்து உட்காரக் கூடாது. அவர் பார்க்கும் வண்ணம் இருந்து உண்ணக்கூடாது. அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டும். அவருடைய ஏவல் விலக்கல்களுக்குப் புற அர்த்தங்கள்தான் கொள்ள வேண்டும், தவறான அர்த்தங்கள் செய்யலாகாது. ஷெய்கிடத்தில் அதிகமாகக் கலந்திருக்கக் கூடாது. அப்படி இருப்பது ஷெய்கை



இலேசாக மதிக்குமாறு செய்து விடும். ஷெய்குமார்களின் ஊழியர்களும், மக்களும், மனைவியும் அவரிடம் அதிகம் நெருங்கி இருப்பதால், அவரைக் குறித்த நன்மதிப்பு அவர்களின் இருதயத்தை விட்டு அகன்று விடுவதையும், இதனால் அந்த ஷெய்கிடமிருந்து அவர்கள் பயன் அடையாமல் போய் விடுவதையும் போல, முரீதுகளும் அவரிடமிருந்து அதிகம் பயன் அடையாமலாகி விடுவர்.

ஷெய்குடைய மரியாதையைப் பேணாத வரையில் முரீதானவர் முன்னேற முடியாது. தன்னுடைய ஷெய்கு சம்பந்தமாக விரும்பத் தகாத செய்தியை ஒருவர் சொல்லச் செவியேற்றால். அதனை அவரிடம் சொல்லக்கூடாது. இயன்ற வரை அழகான முறையில் பதிலளிக்க வேண்டும். ஏதேனும் ஒரு காரியத்தைக் குறித்து ஷெய்கு கலந்தாலோசனை செய்து, அவருடைய கருத்துக்கு உன்னுடைய கருத்து மாறுபட்டிருந்தால் "என்னுடைய அபிப்பிராயம் இவ்வாறு இருக்கிறது உங்களுடைய கருத்து இவ்வாறு இருக்கிறது. உங்களுடைய கருத்து நிறப்பமானதாக இருக்கக் கூடும்" என்று கௌரவமான முறையில் உன்னுடைய கருத்தைக் கூற வேண்டும்.

ஒரு சிஷ்யன் தன் ஷெய்கிடமிருந்து பூரணமான நன்மையை அடைய வேண்டுமாயின், ஷெய்கின் மீது அளவற்ற பற்றிருக்க வேண்டும். ஊரிலுள்ளவர்களெல்லோரும் வேறு விதமான எண்ணங் கொண்ட போதினும், ஷெய்கின்பால் உனக்கு இருக்கிற பற்று மாறுபட்ட அந்த எண்ணத்தால் மாறக் கூடாது. சிஷ்யன் ஏதேனும் தவறு செய்து விட்டால், அந்தத் தவறை ஷெய்கானவர் அலட்சியம் செய்யக் கூடாது. அந்தச் சிஷ்யனுக்கு உடனே தண்டனை விதித்து, அத்தவறை பரிசீலிக்க வேண்டும்.

பெற்றெடுத்த தந்தையின் மனம் வெறுக்குமாறு செய்வது இறைவனின் வெறுப்புக்குக் காரணமாக ஏற்பட்டு விடுவதைப் பார்க்கினும், ஷெய்கின் மனம் புண்படும்படி செய்தால் இறைவனின் கோபம் அதிகமாகவே ஏற்படும். ஏனெனில், ஷரீஅத்தில் ஏவப்பட்டதல்லாததை ஷெய்கு ஏவமாட்டார். அவ்வேவலுக்கு மாறு செய்வது புறத்தில் ஷெய்குக்கு மாறு செய்வது போல் தோன்றிடினும், அந்தரங்கத்தில் ஷரீஅத்திற்கு மாறு செய்ததாக ஏற்பட்டு விடுகிறது. இதனால், அந்தத் தவறின் தன்மைக்குத் தக்கவாறு இறைவனின் கோபமேற்படுகிறது. எனவே, தன்பால் ஷெய்கின் மனம் புண்படும் படி நடந்து கொள்வது பெருந் துர்அதிர்ஷ்டமாகும்.

ஷெய்கானவர் ஏதேனும் ஒரு காரியத்தைச் செய்யுமாறு கட்டளையிட்டால், அதனைப் பெரும் பாக்கியமாகக் கருத வேண்டும். ஷெய்க்கிடத்தில் பலரும் வருவார்கள். போவார்கள். அவர்களை உன் சுய யுக்தியால் கணித்துக் கொண்டு, ஷெய்கின் மீது தவறான கருத்துக்களைக் கொள்ளக் கூடாது. இப்படிச் செய்வதால் ஈமான் கூட மாறிவிட வாய்ப்புண்டு. சிஷ்யன் ஏதேனும் ஒரு கனவு கண்டால் அல்லது அவனுக்கு ஏதேனும் ஒரு சம்பவம் நிகழ்ந்தால், அதனை ஷெய்கிடம் கூற வேண்டும். அதற்கு ஷெய்கானவர் விளக்கம் கூறினால், அதனைச் செவிமடுத்துக் கொள்ள வேண்டும். விளக்கம் கூற வேண்டும் என ஷெய்கை வற்புறுத்தக் கூடாது.

தன்னுடைய ஷெய்கு நூல்கள் எழுதி இருந்தால், வேறு நூல்களைப் படிப்பதைப் பார்க்கினும் தன்னுடைய ஷெய்கின் நூல்களையே முதலாவதாகப் படிக்க வேண்டும் இதனைப் பார்க்கினும் விரிவான நூல்கள் வேறு இருந்தால், அவற்றையும் படிக்கலாம். ஆனால், அவற்றைப் படிக்க ஷெய்கிடம் அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும். ஒரு கல்வியை ஷெய்கு அறிந்திருந்தால் அந்தக் கல்வியை அவரிடத்தில்தான் படிக்க வேண்டும். அவருடைய முன் அனுமதியின்றி வேறு எவரிடமும் அதனைப் படிக்கக் கூடாது. உனக்கு விருப்பமானவரிடம் படித்துக் கொள் என்று பொது அனுமதி கொடுத்தால், தனக்கு விருப்பமான நல்ல மனிதரிடம் படித்துக் கொள்ளலாம்.. இல்லையேல் ஷெய்கு குறிப்பிடும் அறிஞரிடமே அக்கல்வியை கற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறாகக் கல்வி பயிலுவது தரீக் என்னும் ஞான மார்க்கத்தில் நுழைந்து பயிற்சி பெற்ற பிறகுதான் நிகழ வேண்டும்.



முன்னோர்களிடம் யாராவது வந்தால் அவருக்கு அவர்கள் முதலாவதாக தரீக்கில்தான் பயிற்சி யளிப்பர். அப்புறம் கல்வி கற்றுக் கொடுப்பர். உன்னுடைய நண்பர்களில் எவரையாவது குறிப்பிட்டு அவருடைய நட்பு உனக்கு வேண்டாம் என்று கூறினால், அந்த நட்பை விட்டு விட வேண்டும். உள்ளூரிலிருக்கையிலோ, பிரயாணத்திலிருக்கையிலோ, திக்ரு மஜ்லிஸில் கலந்து கொள்ள முடியாதவாறு வேறு பணியில் உன்னை ஈடுபடுத்தினால். அதனை மனப்பூர்வமாக நிறைவேற்ற வேண்டும். இதனைப் பற்றி தப்பெண்ணங் கொள்ளலாகாது. யார் யாரை எந்தெந்த அலுவலில் ஈடுபடுத்த வேண்டும் என்பது ஷெய்குக்குத் தெரியும். ஆதலால், அவரவருக்கும் நன்மை பயக்குகிற பணியிலேயே அவரை ஷெய்கு ஈடுபடுத்துவார்.

உன்னுடைய ஷெய்குடன் உனக்கு இருக்கிற இணைப்பு அதாவது ஷெய்கின்பால் உனக்கு அபிமானம் இருந்தால் அவருடைய கட்டளைப்படி நீ சரியாக நடந்து கொண்டிருந்தால்

அதனுடைய பலன் ஏராளமான நல்ல அமல்களையும் திக்ரு களையும் செய்வதால் ஏற்படும் பலன்களைப் பார்க்கினும் அதிக பலம் பொருந்தியதாக இருக்கும். உனக்குக் கிடைத்த சகல நல்லவைகளும் உன்னுடைய ஷெய்கின் பரக்கத்தால் கிடைத்தவை என்றும், உனக்குச் சம்பவிக்கும் தீமைகள் யாவும் உன்னுடைய குறையால் நிகழ்ந்தவை என்றும் கொள்ள வேண்டும்.

ஷெய்கின் கண்டனத்துக்குக் கட்டுப்பட வேண்டும். உன்பால் ஷெய்குக்கு நல்ல எண்ணம் இருந்தால்தான், அவர் உன்னைக் கண்டிப்பார். இல்லையேல், அந்நியர்களைப் போல் உன்னிடம் நடந்து கொள்வார். அவர் உன்னைக் கண்டிப்பது உன் மீது அவருக்கு அபிமானம் இருக்கிறது என்பதற்கு அடையாள மாகும். உன்னிடத்தில் ஷெய்கு இன்பமாகப் பேசினால் உன்னுடைய அந்தஸ்து ஷெய்கிடத்தில் உயர்ந்து விட்டதென்று எண்ணிக் கொள்ள வேண்டாம். ஏனெனில், இறைவன்பால் மக்களை அழைத்துச் செல்லும் பெரியோர்கள் பலஹீனர் களிடத்திலும் தாழ்ந்த நிலையிலுள்ளவர்களிடமும்தான் இனிமையாகப் பேசி, உதவிகளைப் புரிந்து, அதிகமான வேலைகளில் ஈடுபடுத்தாமல் விட்டு வைத்து அவர்களைத் தேற்றுவார்கள். தரீக் என்னும் ஞான வழியில் நிலையான பின்னர் அவர்கள் மீது தங்கள் விருப்பம்போல் ஷெய்குமார்கள் அதிகாரம் செலுத்துவர், கடுமையான வார்த்தைகளால் கண்டிப்பார்கள். சுவையுள்ள உணவையும் தூக்கத்தையும் விலக்கி வைத்துச் சிரமப்படுத்துவார்கள். எந்நேரமும் ஷெய்குடனேயே இருப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

உன்னுடைய அக நிலையைக் குறித்து ஷெய்கு விசாரித்தால், அவரிடம் எதையும் மறைக்காமல் பூர்த்தியாகக் கூற



வேண்டும். தன்னுடைய மாணவனின் ஆத்மார்த்த அந்தஸ்தை அறிய ஷெய்கு விரும்புவது இயற்கை. திக்ருடைய மஜ்லிஸுக்கு முரீது செல்லாதிருப்பது மிகப் பெரிய குற்றமாகும். மஜ்லிஸிற்கு வர முடியாமல் தவறி விட்டதற்காக காரணங் கூறி மன்னிப்புக் கேட்க வேண்டும். திக்ருடைய மஜ்லிஸில் கலந்து கொள்ளத் தவறி விட்டால், அதற்காக உண்மையாகவே வருந்த வேண்டும்.

ஷெய்குடன் பிரயாணம் செய்தால், அவருக்கு பணிவிடை செய்யத் தன்னை முற்றிலும் ஒதுக்கி வைத்துக் கொள்ள வேண்டும். பிரயாணத்தின் போது பசி இருக்கிற அளவுக்கு மட்டும் உணவருந்த வேண்டும். இப்படிச் செய்வதால் மலஜல உபாதைகளுக்கு அடிக்கடி செல்லும் தொல்லையும், காற்றுப் பரியும் சிரமமும் ஏற்படாது. பிரயாணம் செய்யத் தன்னை ஷெய்கு அழைத்தாலும் அல்லது தன்னுடன் வரவேண்டாம் என்று விலக்கி வைத்தாலும் அதற்காக சந்தோஷம்தான் அடைய வேண்டும். வருந்தக் கூடாது. ஷெய்குடைய இரகசியங்களை அம்பலப் படுத்தக் கூடாது. தன்னுடைய ஷெய்கு எவ்வளவு நேரம் தூங்குகிறார்? எத்தனை முறை சாப்பிடுகிறார்? எவ்வளவு சாப்பிடுகிறார்? எத்தனை முறை ஒளுச் செய்கிறார்? குளிக்கிறார்? என்பன போன்ற விஷயங்களைத் துருவி ஆராயக் கூடாது. அவ்வாறு ஆராய்வது சில சமயங்களில் ஷெய்கைக் குறித்துக் குறைவாக நினைக்கும்படி செய்து விடும். காமிலான ஷெய்குமார்களின் நிலை பலவாறாக இருக்கும். அந்நிலைகளைப் பற்றிய விசேஷங்களை, அந்தப் பதவியை அடையாதவர்கள் உணர்ந்து கொள்ள முடியாது ஆகையால், தவறான கருத்து ஏற்பட வாய்ப்பு உண்டு.

ஷெய்குடைய அனுமதியின்றி எந்தப் பிரயாணமும் செய்யலாகாது. ஹஜ்ஜுச் செய்வது வரவேற்கக் கூடிய காரியம்.

இக்காரியத்தை நிறைவேற்றக் கூடாது என்று எவரையும் யாரும் தடுக்க முடியாது. என்றாலும், இக்காரியத்தை நிறைவேற்ற எப்பொழுது புறப்பட வேண்டும் என்பதைக் கூற எவருக்கும் உரிமையுண்டு. இந்த முறையில் ஹஜ்ஜுக்கு புறப்படுகிற சிஷ்யன் தன்னுடைய குருவாகிய ஷெய்கிடத்தில் அனுமதி பெற வேண்டும். ஷெய்கானவர் தன்னுடைய சிஷ்யரான முரீது புறப்பட நிச்சயித்துள்ள புறப்பாட்டை நிறுத்தி வைக்கவும், வேறு ஒரு நாளுக்கு மாற்றி வைக்கவும் உரிமையுண்டு. தன்னுடைய குருவாகிய ஷெய்கு மணந்திருந்த பெண்களை அவர்கள் அவரிடமிருந்து விவாக ரத்துப் பெற்றிருந்தாலும் சரி. அல்லது ஷெய்கின் மரணத்துக்குப் பிறகு விதவையாகி இருந்தாலும் சரி; அவர்களை சிஷ்யனான முரீது திருமணம் செய்து கொள்ளலாகாது.

ஷெய்கானவர் ஏதேனும் ஒரு காரியத்தைச் செய்யுமாறு தன்னுடைய சிஷ்யனுக்குக் கட்டளையிட்டால், அந்தக் காரியம் ஷரீஅத்தில் விலக்கப்படாத காரியம் என்பதற்கு ஆதாரம் கேட்கக் கூடாது. அப்படிக் கேட்டு அந்த ஷெய்கு ஆதாரங் காட்டிய பின்னர் அக்காரியத்தை அவர் செய்வாராயின், அவர் ஷெய்குடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடந்ததாக ஏற்படாது. அந்த ஆதாரத்தை நம்பியே அதனைச் செய்ததாக ஏற்படும். இது போல ஒரு காரியத்தைச் செய்ய வேண்டாம் என்று ஷெய்கு தடை செய்தால், இது ஷரீஅத்தில் விலக்கப்படாத காரியம். ஷரீஅத்தில் விலக்கப்படாத (ஜாயிஸான) கூடுமான இக்காரியத்தைச் செய்யக் கூடாது என்று ஏன் தடை செய்கிறீர்கள்? என்று வினவக் கூடாது. கூடுமான (ஜாயிஸான) காரியத்தைச் செய்வதால் நன்மையுமில்லை, அதனைச் செய்யாததற்காக தீமையுமில்லை. ஆகவே,



நன்மையோ, தீமையோ இல்லாத ஒரு காரியத்தைச் செய்யக் கூடாதென ஷெய்கு தடை செய்தால், அந்த சிஷ்யன் அதனைச் செய்வதற்குத் தகுதி இல்லை என்பதை அவர் உணர்ந்து தடை செய்திருக்கக் கூடும். ஆதலால், இவ்விஷயத்தில் ஷெய்கிடம் ஆட்சேபணை செய்யக் கூடாது.

## தர்க்கம் செய்யும் முரீது பற்றி

தன்னிடத்தில் முரீதானவர் அதிகமாக தர்க்கம் புரிவதையும் விவாதிப்பதையும் குருவாகிய ஷெய்கு உணர்ந்தால் "சகோதரரே, அல்லாஹு தஆலாவின் கிருபையால் தரீக்கில் சேர்ந்தவராகி விட்டீர். கல்வியாளராகவும் ஆகி விட்டீர். என்னைப் பார்க்கினும் அதிகமாகத் தெரிந்தவரிடம் செல்வீராக. அது உமக்கு மிகப் பயனுள்ளதாக இருக்கும்'' என்று நல்ல வார்த்தைகளைக் கூறி தன்னை விட்டு அம்முரீதை அகற்றி விடலாம். இம்மாதிரி பேசுபவர்களையும் விவாதம் செய்பவர்களையும் வைத்திருந்தால் இதர முரீதுகள் தவறிழைத்துவிடக் கூடும், தம்மை விட்டு இவர்களை வெளியேற்றினால்தான் இவர்கள் தங்கள் தவறை உணர்ந்து தவ்பாச் செய்து நேர்வழிக்குத் திரும்புவர். அல்லது இம்மாதிரியான நபர்களை விட்டு இதர முரீதுகள் காக்கப்படுவர்.

குருவிடம் செல்ல விரும்பினால், நல்ல தூய உடையணிந்து, தவ்பாச் செய்து கொள்ள வேண்டும். தன்னுடைய இருப்பிடம் தூரத்திலிருந்தால் குருவை ஜியாரத்துச் செய்ய (குருவை தரிசிக்க)ச் செல்வதாக நிய்யத்துச் செய்ய வேண்டும். இவ்வுலக அரசர்களிடம் செல்பவர் எந்தெந்த ஒழுங்கைக் கடைப் பிடிக்கிறாரோ குறைந்த பட்சம் அந்த ஒழுங்கை குருவிடம் செல்வதற்கும் கடைப்படிக்க வேண்டும். தவிர, இதர ஷெய்குகளில்

மரணித்தவர்களையோ உயிருடன் இருப்பவர்களையோ ஜியாரத்துச் செய்ய விரும்பினால் தன்னுடைய குருவிடம் அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும். அனுமதி இல்லாமல் இதர ஷெய்குகளை ஆரம்ப நிலையிலுள்ள முரீதுகள் சந்திப்பதால், பல தவறுகள் நிகழ வாய்ப்புண்டு. ஏனெனில், முரீதானவரின் மனப்பண்பைக் கவனித்து ஒரு காரியத்தைச் செய்ய வேண்டாம் என்று அவருடைய குரு தடை செய்திருப்பார். இதர குருமார்கள் அக்காரியத்தைச் செய்ய வேண்டாம் என்று தங்கள் சிஷ்யர் களுக்குத் தடை விதித்திருக்க மாட்டார்கள். ஆரம்ப நிலையிலுள்ள முரீதுகள் இதர குருமார்களிடம் சென்றால், தன்னுடைய குருவைக் குறித்து தவறாக எண்ண வேண்டியதிருக்கும், பொறாமையினாலோ போட்டியினாலோ அதிகார ஆசையாலோ குரு தடை செய்ததாக நீ கருதுவதை விட்டு உன்னைக் காத்துக் கொள். இப்படி நினைப்பது தவறான எண்ணமாகும், அத்துடன் குருவிடம் செய்து கொடுத்த (அஹ்து என்னும்) வாக்குறுதியை முறித்து விடுவதாகவும் இருக்கிறது. உன்னுடைய நிலையை உன் குருவுடைய நிலையுடன் ஒப்பிட்டுப் பார்க்காதே. பொறாமை கொள்ளல், துவேஷங் கொள்ளல், போட்டியிடல் போன்ற தன்மைகளுள்ள உன்னுடைய நிலையே உன்னுடைய ஷெய்குக்கும் இருப்பதாயின், அவர் உனக்கு ஷெய்காக இருக்க முடியாது.

## இதர ஷெய்குகளைச் சந்தித்தல்

ஆரம்ப நிலையிலுள்ள முரீதுகள் பலஹீனர்களாகவே இருப்பர். அவர்கள் தங்களுடைய குருவையும் தரீக்கையும் மட்டும் புகழ்வதும், இதர குருக்களையும் தரீக்குகளையும் இகழ்வதும் இயற்கை. சில சமயங்களில் இது விவாதங்களாக



முற்றி, சண்டை சச்சரவுகளிலுங் கூட வந்து சேரும், ஆதலால், பலஹீனர்களாக இருக்கிற முரீதுகள் இதர ஷெய்குகளையும், அவர்களின் முரீதுகளையும் சந்திக்காமல் இருப்பது நல்லது. சந்திக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டால், அஸ்ஸலாமு அலைக்கும் என்ற சொல்லுடன் நிறுத்திக் கொள்ள வேண்டும். தரீக்குகளையோ ஷெய்குகளையோ பற்றி எதையும் பேசக் கூடாது. ஆதலால், முரீது பெற்றவர் தரீக்கு சம்பந்தமான யாவற்றையும் தன்னுடைய ஷெய்கிடத்தில் மட்டும் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். முரீதிடத்திலுள்ள தவறுகளைக் கருதி ஷெய்கானவர் அவரைத் துரத்தினால், அவரை விட்டு அந்த முரீது விலகிச் செல்லக் கூடாது. கொஞ்சம் ஒதுங்கி இருக்க வேண்டும், அல்லது உன்னையும் உன்னுடைய ஷெய்கையும் இணைத்து வைக்கக்கூடியவரிடம் சென்று அவர் மூலமாக உன்னுடைய ஷெய்கையே நீ மீண்டும் அடைந்து கொள்ள வேண்டும்.

மஜ்லிசுல் ஆம் (பொதுச் சபை) மஜ்லிசுல் காஸ் (பிரத்தியேக சபை) மஜ்லிசுல் இத்தாம் (கண்டன சபை) என்று மூன்று விதமான மஜ்லிசுகள் ஒவ்வொரு ஷெய்குக்கும் இருக்க வேண்டும். பொதுச் சபையில் எல்லா முரீதுகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். தொழுகை நோன்பு ஸதக்கா போன்ற நல்ல காரியங்களை முரீதுகள் நிறைவேற்றுவதற்கு உதவக்கூடிய பேச்சுகளையும், இவற்றை நிறைவேற்றுவதால் ஏற்படும் பலன்களையும் பற்றிய விளக்கம் இச்சபையில் பேசப்பட வேண்டும். பெரியோர்களின் நிலைகளையும் கராமத்துகளையும் பற்றிய விவாதங்கள் இச்சபையில் இருக்கக் கூடாது. பொது மக்களுக்கு இவற்றை உள்வாங்கக் கூடிய சக்தி இருக்காது.

திக்ரு செய்வதால் ஈடுபடும் பலன்கள், கல்வத்திலிருத்தல், ரியாளத்து என்னும் பயிற்சி, இறைவன்பால் அடியானை இணைக்கும் தரீக்குகளான ஞான மார்க்கங்கள் முதலியவை பற்றிய பேச்சுகள் பிரத்தியேக சபையில்தான் இருக்க வேண்டும். இவற்றிற்குப் புறம்பான விவாதங்கள் கூடாது. தன் முரீதுகளைத் தனிமையில் சந்தித்து அவர்களுடைய வணக்கங்களிலும் திக்ருகளிலுமுள்ள குறைகளை விசாரித்து அறிவிப்பதுடன் அவற்றைத் திருத்திக் கொள்வதற்கான முறைகளை கண்டன சபையில் கூற வேண்டும்.

### ஷெய்கிடம் எதிர்பார்க்கக் கூடாத காரியங்கள்

தவிர, முரீதானவர் வெளியூர் சென்று திரும்ப வந்திருந்தால் தன்னிடம் ஷெய்கு வந்து தன்னை விசாரிக்க வேண்டும் என்றும், தான் நோய்வாய்ப்பட்டால் தன்னை ஷெய்கு வந்து பார்க்க வேண்டும் என்றும், தன்னைச் சேர்ந்த ஒருவர் மரணித்ததற்காக, தன்னிடம் ஷெய்கு வந்து மவ்த்து விசாரிக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கக் கூடாது. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் முரீதுதான் தன்னுடைய ஷெய்கிடம் சென்று ஸலாம் சொல்லி பரஸ்பரம் விசாரித்துக் கொள்ள வேண்டும். ஷெய்கு தன்னிடத்தில் வரவில்லை என்பதற்காக ஷெய்கின் பாலுள்ள அபிமானத்தில் மாறுதலேற்படுமாயின் (அஹ்து என்னும்) உறுதி மொழியை புதுப்பிப்பது அவசியமாகும்.

புறத்தில் இருப்பது போலவே அகத்திலும் இருந்து கொள்ள வேண்டும். ஷெய்குக்கு எதிரில் நின்று சொல்ல வெட்கப்படும் பேச்சுக்களை அவர் இல்லாத போது அவருக்குப் பின்னால் பேசக் கூடாது. தன்னுடைய வணக்கங்களைப் பார்க்கினும் ஷெய்கின்



வணக்கங்கள் சிறந்தவை என்ற நம்பிக்கை இருக்க வேண்டும். ஆரிஃபுகளின் ரியா (பிறரை மெய்ப்பிக்கச் செய்யும் காரியங்கள்) முரீதுகளின் இக்லாஸை (அந்தரங்க சுத்தியான காரியங்களை)ப் பார்க்கினும் சிறந்தவை என்று அபூ ஸஈதினில் ஜஸ்ஸார் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறியுள்ளார். ஷெய்கிடத்தில் அமர்ந்தால் மௌனமாகத்தான் இருக்க வேண்டும். அவர் முன்னிலையில் இங்கு மங்கும் திரும்பிப் பார்க்கலாகாது. ஷெய்கு பேச அனுமதித்தால் பேசலாம், முரீதுகள் நடந்து கொள்ள வேண்டிய ஒழுங்குகள் ஏராளமாக இருக்கின்றன. விரிவான நூலில் காணலாம்.

ஒரு தந்தைக்குப் பல மக்கள் இருந்தால், அந்த மக்கள் தங்களை உடன் பிறந்த சகோதரர்கள் என்று சொல்லிக் கொள்வார்கள். இவர்கள் பிறப்பால் ஏற்பட்ட சகோதரரர்கள். இது போல ஒரு மார்க்கத்தைத் தழுவிய பலர் வெவ்வேறு பெற்றோர் களுக்குப் பிறந்து பிறப்பால் அந்நியர்களாக இருந்த போதினும், ஒரே நபீக்கு விசுவாசங் கொண்டிருப்பதால் மார்க்கத்தால் சகோதரர் களாகின்றனர். இதே விதமாக ஒரு ஞான குருவிடம் பைஅத் பெற்ற பலர் பைஅத்தால் சகோதரர்களாகின்றனர். இவர்களுக்கு அறபியில் இக்வான் என்று பெயர். உர்தூ, ஃபார்ஸி மொழிகளில் பீர்பாய் என்று பெயர். இவர்களைத்தான் முரீதுச் சகோதரர்கள் என்று இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பிறப்பாலுள்ள சகோதரர்கள் இரத்த சகோதரர்கள். பிறப்பால் ஏற்பட்ட இரண்டு சகோதரர்கள் தாயாதி பாகங்களைப் பகிர்ந்து கொள்ளும் போதும், இதர சந்தர்ப்பங்களிலும் ஒருவரை ஒருவர் கோபித்துக் கொள்வதும் மனத்தாங்கல் கொள்வதும் இயல்பு. ஆயினும், தன்னுடைய சகோதரனுக்கு வேறு ஒரு

அந்நியரால் தொந்தரவு ஏற்படும் போதும், தற்செயலாக விபத்துகள் எற்படும் போதும் இரத்த பாசத்தின் காரணமாக சகோதரர்களுக்கிடையிலுள்ள மனஸ்தாபம் அகன்று ஒருவருக் கொருவர் ஆதரவாக இருப்பது பிரத்தியட்சமான விஷயம். இது போல ஒரே மார்க்கத்தைத் தழுவிய இருவரில் ஒருவரை அந்நிய மதத்திலுள்ள மற்றொருவர் துன்புறுத்தும் போது மத உணர்ச்சி மேலீட்டால் மத சகோதரர்கள் ஒன்று சேர்ந்து ஆதரவளிப் பதையும், இதனால் சமூகச் சண்டைகளும் வகுப்புக் கலவரங் களும் ஏற்படுவதையும் அனுபவத்தில் காண்கிறோம். ஒரே குருவிடம் பைஅத் பெற்ற இருவருக்கிடையிலுள்ள பைஅத் சகோதரத்துவமும் இந்த ரகத்தைச் சேர்ந்தது. ஆதலால் முரீதானவர் தன்னுடைய முரீதுச் சகோதரரை பிறப்பாலுள்ள சகோதரரைப் பார்க்கினும் அதிக அன்பாக நடத்த வேண்டும். ஏனெனில், இரத்த உறவைப் பார்க்கினும் ஆத்மார்த்த சகோதரத்துவம் அதிக உறுதியானது. ஆதலின், முரீதுச் சகோதரர்கள் தங்களுக்குள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றிய விபரம் இங்கு சுருக்கமாக எழுதப்படுகிறது.

ஒரு ஷெய்கிடம் முரீது வாங்கியவர்கள் (குருவிடம் பைஅத் பெற்றவர்கள்) வயதில் முதியோராகவும் இளையோராகவும் இருந்த போதினும், ஒருவருக்கொருவர் அன்பாகவே நடந்து கொள்ள வேண்டும். இந்த அன்பு அல்லாஹு தஆலாவுக்காக ஏற்பட வேண்டும். சுய நலத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கக் கூடாது. தன் சகோதரரிலிருந்து நிகழுகிற தவறு களையும் குறைகளையும் பொருட்படுத்தக் கூடாது. குறை களையும் தவறுகளையும் விட்டு நீங்கிய பரிசுத்தவான் எவருமில்லை. ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொரு விதமான



குறைகளும் தவறுகளும் இருப்பது இயல்பு. தன்னுடைய தவறுகளையும் குறைகளையும் மற்றவர்கள் பொருட் படுத்தக் கூடாது என்று எதிர்பார்க்கிற ஒவ்வொருவரும் பிறருடைய குறைகளையும் தவறுகளையும் பொருட் படுத்தாதிருப்பதே முறை.

தன் சகோதரர்களின் சன்மார்க்க பக்தியின் மீது தனக்கு அபிமானமும் நல்லெண்ணமும் இருக்க வேண்டும். தனக்குப் பிரியப்படுகிற நல்லவைகளே தன் சகோதரர்களுக்கும் இருக்க வேண்டுமெனப் பிரியப்பட வேண்டும். தொழுகைக்கான நேரம் வருவதற்கு முன்னதாகவே ஒளுச் செய்ய வேண்டுமென அவர்களை எச்சரிக்கை செய்ய வேண்டும். தக்பீர் தஹ்ரீமாவுடன் இமாம் ஜமாஅத்தை நிறைவேற்றுதல், தொழுகைக்கு முன்னருள்ள சுன்னத்துகளை நிறைவேற்றல் போன்ற காரியங்களில் தன் சகோதரர்களுக்கு உற்சாக மூட்ட வேண்டும். இமாம் ஜமாஅத்துடன் தொழுவதற்கு, தனிமையில் தொழுவதை பார்க்கினும் இருபத்தேழு மடங்கு அதிக நன்மை இருப்பதாக ஹதீஸில் கூறப்பட்டிருப்பதைத் தழுவி, முன்னோர்களிலுள்ள பெரியார்கள் இமாம் ஜமாஅத்து ஒரு முறை தவறி விட்டால் அந்தத் தொழுகையை இருபத்தேழு முறை திரும்பத் திரும்ப மடக்கித் தொழுதிருக்கிறார்கள். இப்படி மடக்கித் தொழ வேண்டும் என சன்மார்க்கச் சட்டம் இல்லை என்பதை அவர்கள் அறிந்திருந்தும் தங்களுக்கு ஏற்பட்ட சோம்பலுக்குத் தண்டனை என்ற முறையிலேயே இவ்வாறு செய்தார்கள்.

**உன்னை உயர்வாக மதிக்காதே.**

இமாம் ஷாஃபிஈ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் தோழரான அல்இமாமுல் முஜ்னீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி

அவர்கள் இமாம் ஜமாஅத்தைத் தவற விட்டால், இருபத்தைந்து முறை மடக்கித் தொழுவார்கள். ஆதலால், இமாம் ஜமாஅத்தாகத் தொழும் விஷயத்தில் தன் சகோதர முரீதுகளை எச்சரித்துக் கொண்டே இருக்க வேண்டும். விடியற்கால வேளைகளில் அவர்களை எழுப்பி விட வேண்டும். அதுவும் சாந்தமான முறையிலேயே எழுப்ப வேண்டும். அந்நேரங்களில் எழுந்து தொழும் விஷயத்தில் சிலர் தாமதப் படுவதைக் குறித்து அவர்களைத் தாழ்வாகவும், தன்னை உயர்வாகவும் மதித்து இருமாந்து விடலாகாது. தன்னுடைய வணக்கத்தைப் பார்க்கினும் அவர்களுடைய தூக்கம் சிறந்ததென மதிக்க வேண்டும். ஏனெனில், தன் சகோதரர்களைப் பார்க்கினும் தான் சிறந்தவன் என்று ஒரு முரீது கருதினால், அவர் தரீக்கு என்னும் ஞானமார்க்கத்தில் வீழ்ச்சியடைந்து. இப்லீஸ் சபிக்கப்பட்டது போல சபிக்கப்பட்டவராகி விடுவார். ஏனைய முஸ்லிம்களைப் பார்க்கினும் தன்னைத் தாழ்ந்தவராகக் கருதாத வரையில், ஞானவழியில் செல்லும் தர்வேஷானவர் மெய்யான தர்வேஷாக மாட்டார். பிறரைப் பார்க்கினும் தன்னைச் சிறந்தவராக மதிக்கிற ஒருவர் இவ்வகிலத்தால் சபிக்கப்படுவது போல, பிறரைப் பார்க்கினும் தன்னைத் தாழ்ந்தவராக மதிப்பவர் இவ்வகிலம் முழுவதாலும் ஆத்மார்த்த உதவி புரியப்படுவார்.

### தலைமைப் பதவிக்கு ஆசை கொள்ளாதே.

ஸெய்யிதுனா அஹ்மதுல் கபீருர் ரிபாயீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் தங்கள் சிஷ்யர்களுக்குக் கூறிய உபதேசமாகிய வஸிய்யத்தில் "உங்களுக்கு எவர் ஷெய்காக (குருவாக) நியமிக்கப் படுகிறாரோ, அவருக்கு சிஷ்யர்களாக ஆகிக் கொள்ளுங்கள். நீங்கள் முத்தமிட வேண்டும் என்பதற்காக தன்னுடைய கரத்தை அவர் நீட்டினால், அவருடைய இரு கரங்களையும் நீங்கள் முத்த மிடுங்கள். நீங்கள் தலைவராக ஆகாதீர்கள். ஏனெனில், அடி விழுந்தால் முதலாவதாக தலையில்தான் அடி விழும், ஆதலால், தலைவராவதில் அதிகக் கஷ்டங்களைத் தாங்க வேண்டிய சிரமமிருக்கிறது" என்று கூறினார்கள்.



என்னுடைய தலைவரே. எனக்கு உபதேசம் செய்யுங்கள் என்று ஸெய்யிதுனா அஹ்மதுல் கபீருர் ரிபாயீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களை அவருடைய ஊழியரான யாகூப் என்பவர் கேட்டுக் கொண்டார். "உன்னுடைய சகோதர முரீதுகளுக்கு பணிவிடை செய்பவராக நீர் இருந்து கொள்ள வேண்டும். தொண்டு செய்வதற்காக உன்னை அற்பணித்து விட வேண்டும். அவர்கள் கொடுக்கும் சிரமங்களை நீர் சகித்துக் கொள்ள வேண்டும். அத்துடன் அவர்களைப் பார்க்கினும் உயர்ந்தவராக உம்மை நீர் கருதிக் கொள்ளலாகாது. அவ்வாறு கருதினால் படுகுழியில் வீழ்ந்திடுவீர். யாக்கூபே, பேரீத்த மரத்தைப் பாரீர். அது மற்றைய மரங்களைப் பார்க்கினும் நெடு நெடு என்று வளர்ந்து உயர்ந்து விட்டது. அதன் தலையிலேயே அல்லாஹு தஆலா அதனுடைய பளுவை ஏற்றி விட்டதால், அது தானாக யாவற்றையும் சுமக்கிறது. பூசணிக் கொடியைப் பாரீர். அது நீண்டு வளராமல் தரையிலேயே படர்ந்ததால், அதனுடைய சுமையை (காயை) வேறு ஒன்றின் (பூமியின்) மீது வைத்து விட்டது. அது சுமப்பதை வேறு ஒன்று சுமக்கிறது. அதனுடைய பளு அதற்குத் தெரிவதில்லை. இதனாற்றான் அல்லாஹ்விற்காக எவர் தாழ்ந்து கொடுக்கிறாரோ அவரை அவன் உயர்த்துகிறான். எவர் பெருமை கொள்கிறாரோ அவரை அவன் தாழ்த்துகிறான் என்று நபீ

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள். தன்னுடைய அடியார்களுக்குப் பணிய வேண்டும் என அல்லாஹு தஆலாவும் அவனது ரசூலும் கட்டளை யிட்டிருப்பதால் உன்னுடைய பணிவு அவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்ததாக இருக்க வேண்டும் என்று உபதேசம் செய்தார்கள்.

தொழுகையில் தன் சகோதர முரீதுகளுக்கு இமாமத்துச் செய்வதற்கு முந்தாமல் இருக்க வேண்டும். தன்னுடைய மறதிகளையே சமாளித்துக் கொள்ள இயலாமலிருக்கிற மனிதன், தன்னைப் பின்பற்றித் தொழுவோரின் மறதிகளையும் சேர்த்துச் சமாளிப்பது சிரமமான காரியம், தவிர, இம்மாதிரியாக இமாமத்துச் செய்வது நாளடைவில் அவர்களுக்குத் தலைவனாக வர வேண்டும் என்ற ஆசையை உண்டாக்கி விடவும் கூடும்.

**தவிர்த்துக் கொள்ள வேண்டியவை.**

வஜீபாக்கள் மூலம் உலகாதாயத்தைத் தேடுவதிலும் தன்னுடைய ஷெய்கின் கட்டளைகளை நிறைவேற்றாமல் இருப்பதிலும் தன் சகோதர முரீதுகளுக்கு முன்னணியாக இருக்கக் கூடாது. தன் ஷெய்கின் அனுமதியின்றி திருமணம் செய்து கொள்ளல், தனக்கு வசதியைத் தேடிக் கொள்ளல், சுவையுள்ள உணவு புசித்தல் ஆகியவற்றில் மற்றவர்களைப் பார்க்கினும் முதன்மையாக இருக்கவும் கூடாது. மற்றவர்களைத் தடுத்து விட்டு, தனக்கு மட்டும் இவற்றைச் செய்து கொள்ளவும் கூடாது. தன் சகோதர முரீதுகளால் ஏற்படும் சிரமங்களைப் பொருட்படுத்தாதிருப்பதுதான் மறுமை சம்பந்தமான இவ்வர்க் கத்துக்கு மூலதனம் என்பதாகக் கருத வேண்டும். அவர்களுக்கு நிறைவேற்ற வேண்டிய அளவுக்குத் தன் கடமையைப் பூரணமாகச் செய்ய முடியவில்லை என்று அவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டும். தன் சகோதர முரீதுகளுக்கு பணிவிடை செய்வதை, தனக்குக் கிடைத்த பாக்கியம் என்று கருத வேண்டும். தன் சொந்த பாத்தியதையையுங் கூட தியாகஞ் செய்யும் உணர்ச்சியுடன் தன் சகோதர முரீதுகளைத் தயையுடன் நடத்த வேண்டும்.



இவ்வுலக ஆதாயத்தின் பால் கவனம் செல்லலாகாது. தன் சகோதர முரீதுகள் பற்றித் தன்னிடம் சொல்லப்படும் குறைகளை அங்கீகரிக்கக் கூடாது. திக்ருடைய மஜ்லிஸ்களுக்குச் செல்வதில் சோம்பலாக இருக்கும் விஷயத்தில் தன் சகோதர முரீதுகளுக்குத் தடையாய் இருக்கக் கூடாது. இச்சபைகளுக்கு தாமதமாக வந்தாலும் அவர்களுடன் சேர்ந்து கொள்ள வேண்டும். இதற்காக வெட்கப்படக் கூடாது. தாமதமாக வந்ததைக் குறித்து தன் சகோதர முரீதுகளில் எவரேனும் கண்டனங் கூறினால், அவரிடம் தகராறு செய்யாமல், அல்லாஹு தஆலா உனக்கு நற்கூலியைக் கொடுக்கட்டும் என்று கூறி அமைதிப்படுத்தி விட வேண்டும். திக்ரு முடிவதற்கு முன்னதாக சபையை விட்டு வெளியில் செல்வதில் முதன்மையாக இருக்கவும் கூடாது.

தன் சகோதர முரீதுகளுக்குச் சன்மார்க்க நெறிகளையும் ஷரீஅத்தின் சட்ட திட்டங்களையும் கூறி வழிகாட்டிக் கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் தன்னை உயர்ந்தவர் என்று எண்ணிக் கொள்ளலாகாது. ஒருவர் அதிகமாகத் தெரிந்திருப் பதால், அந்தரங்க சுத்தி என்னும் இக்லாஸிலும், இறைவனுக்குச் செய்ய வேண்டிய காரியங்களிலும் சிறந்தவராக இருக்கிறார் என்று ஏற்படாது.

இம்மை மறுமைக்குரிய பணிகளை செயல்படுத்தும் விஷயத்தில் கடுமையான காரியங்களைச் செய்ய முதன்மையாக இருக்க வேண்டும். தான் மட்டும் தூங்கிக் கொண்டு தன் சகோதர முரீதுகளை இரவில் விழித்திருந்து வணங்குமாறு கட்டளையிடக் கூடாது, தான் நோன்பு நோற்காதிருந்து கொண்டு பிறரை நோன்பு நோற்கச் சொல்லக் கூடாது. தன் சகோதர முரீதின் மீது உள்பகை கூடக் கொள்ளக் கூடாது, சகோதர முரீதுகளில் ஒருவர் நோயாளியாகி விட்டால், அவரை நலம் விசாரித்து தேவையான உதவிகள் செய்ய வேண்டும். இரவு நேரங்களில் மற்றவர்கள் தூங்கி விடுவார்கள். ஆதலால், அக்காலங்களை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். இறைவனிடம் துஆ கேட்கும் காலத்தில் சகோதர முரீதுகளுக்கும் துஆச் செய்வதை மறந்து விடக் கூடாது.

மனக் குழப்பமின்றி ஓர்மைப்பாடுள்ள நேரம் உங்களில் எவருக்கு கிடைத்தாலும், தனக்கும் தன் சகோதர முஸ்லிம்களுக்கும் இறைவனிடம் பாப மன்னிப்புத் தேட வேண்டும். இது முஸ்லிம்களுக்குச் செய்யும் கடமைகளில் ஒன்று என்பதாக ஸெய்யிதீ அலிய்யுனில் கவ்வாஸ் ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறியுள்ளார், தன் சகோதர முரீது தன்னிடத்தில் வந்தால் அவரைக் கண்ணியப்படுத்த வேண்டும். இயன்ற வரை தான் மட்டும் எதையும் தன்னந் தனியே உண்ணக் கூடாது. தனக்குக் கோப மேற்பட்ட வேளைகளில் கூட தன் சகோதர முரீதைக் கெடுதலாகக் கூறலாகாது. தன்னுடைய நஃபிலான வணக்கங்களைப் பார்க்கினும் தன் சகோதர முரீதின் தேவையை நிறைவேற்றுவதை முதன்மையாக்கிக் கொள்ள வேண்டும். ஏனெனில், தனக்கு மட்டும் பயன்படும் காரியத்தைப் பார்க்கினும் பிறருக்குப் பயன்படும் காரியத்தைச் செய்வது சிறந்தது.



## ஹலாலான உணவு

தன்னுடைய உணவிலும் பானத்திலும் பேச்சிலும் கேள்வியிலும் பார்வையிலும், கை கால் முதலிய சகல அங்கங்களிலும் பேணுதலுள்ளவராகவும் சந்தேகமாக உள்ளதையும் விலக்கப்பட்டதையும் தவிர்த்துக் கொள்பவராகவும் இருக்க வேண்டும். அடியானின் அமல்களத்தனையும் அவனுடைய உணவு அனுமதிக்கப்பட்டதா விலக்கப்பட்டதா என்பதை பொறுத்துத்தான் அமைகின்றன. ஆதலால், உணவு விஷயத்தில் அதிக கவனமாக இருக்க வேண்டும். சன்மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டதைப் புசிக்கிற ஒருவர் பாபம் செய்ய விரும்புவாராயின், அப்படிச் செய்வது அவருக்கு சிரமமாக இருக்கும். உன்னுடைய உணவு ஹலாலானதாக (சன்மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டதாக) இருக்கிறதா என்பதைத் தேடிக்கொள். அப்புறம் பகற் காலத்தில் நஃபிலான நோன்புகளை நீ நோற்காமல் இருப்பதோ இரவு நேரங்களில் நஃபிலான வணக்கங்களை நீ வணங்காமல் இருப்பதோ உனக்கு தீங்கு செய்யாது.

## முரீது நடந்து கொள்ள வேண்டிய ஒழுங்குகள்.

முரீதாக இருப்பவர் பிறரை மெய்ப்பிக்க வேண்டும் என்பதற்காகவோ, பிறரிடம் நல்ல பெயர் ஏற்பட வேண்டும் என்பதற்காகவோ பேணுதலாக நடந்து கொள்ளக் கூடாது. அப்படிச் செய்வது இறைவன் சமூகத்தில் பழிப்பையும், தொல்லையையும்தான் அதிகப்படுத்தும். முரீதானவருக்கு செல்வம் குறைந்து ஜீவனாம்சம் கஷ்டத்திலாகி, பிறரின் உள்ளம் தன் விஷயத்தில் இரக்கமற்றதாக ஆகி விட்டால், அதனை சகித்துக்

கொள்ள வேண்டும். அதற்காகப் புலம்பலாகாது. முரீதுகள் தரீக்கில் பிரவேசிக்கும் ஆரம்பக் காலத்தில் அநேகருக்கு உலக அதிர்ஷ்டங்கள் மாறுவதுண்டு. இதனைப் பார்த்துச் சிலர் பீதியடைந்து எனக்குத் தரீக்கு தேவையில்லை என்று கூறி பைஅத் வாங்கியதை முறித்துக் கொள்வதும் உண்டு. இப்படிப் பட்டவர்கள் மறு உலகப் பேற்றில் வெற்றியடைய மாட்டார்கள். எனவே, கஷ்டம் வந்தால் தன்னுடைய றப்பு தன்னை ஆட்கொள்ளவும் தன்னுடைய அகக் கண்ணைத் திறந்து விடவும் விரும்புகிறான் என்று கருதிக் கொள்ள வேண்டும். அல்லாஹு தஆலாவின் பாலுள்ள (முஹப்பத் என்னும்) பிரியம், இவ்வுலகத்தின் பாலுள்ள பிரியம் ஓரிடத்தில் ஒன்று சேரா. ஆதலின், மாயையின் பாலுள்ள பற்றை ஒதுக்கித் தள்ளி விட வேண்டும்.

### தரீக்கு போதிக்கும் காரியங்கள்

திருமணமாகாதவர் தரீக்கில் பிரவேசித்தால், ஷெய்கின் அனுமதியின்றி திருமணம் செய்யக் கூடாது. இது போல திருமணமானவர் தன் மனைவியை விவாக ரத்துச் செய்யவும் கூடாது. ஞானவான்களின் வழியாகிய தரீக்கு சந்நியாசத்தையோ, உணவைத் துறப்பதையோ அடிப்படையாகக் கொண்டதல்ல. வீண் விளையாட்டுகளில் ஈடுபடாமலும் வணக்கங்களை விட்டு விலகாமலும் இருப்பதைத்தான் தரீக்கு போதிக்கிறது. முரீதுடைய நடவடிக்கைகளெல்லாம் பரிசுத்த ஷரீஅத்தைத் தழுவியன வாகவே இருக்க வேண்டும். ஷரீஅத்துதான் மறு உலகப் பேற்றுக் குரிய எல்லைக் கோடு. இயன்ற வரை தூக்கத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக விடியற்கால வேளையில் எழுந்திருக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.



அதுதான் பிரார்த்தனைகள் அங்கீகரிக்கப்படுவதற்கும், இறைவனின் அருட்கொடைகள் கிடைப்பதற்கும், அவனுடைய தஜல்லி என்னும் ஞானோதயம் அருளப்படுவதற்கும் உரிய காலமாகும். மிதமிஞ்சிய தூக்கத்தால் இம்மைப் பிரயோஜனமோ, மறுமைப் பேறோ இல்லை. அதனால் நஷ்டம்தான் விளையும். ஆதலின், இரவில் கடைசி மூன்றிலொரு பங்கு நேரத்தை தூக்கத்தில் கழிக்காதே.

இறையருள் என்ற கொள்ளை முதல்களும் பொக்கிஷங்களும் திறக்கப்படுவதும், மறைவான இரகசியங்கள் வெளியாக்கப்படுவதும், கல்வி அறிவுகள் பகிர்ந்தளிக்கப் படுவதுமான விடியற் கால வேளையில் தூங்கும் முரீது தனக்கு தரீக்கில் பிரியம் இருக்கிறது என்று எவ்வாறு சொல்லிக் கொள்ள முடியும்? என்று இப்றாஹீத் தஸ்ஸூக்கி ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறியுள்ளார். முரீதானவர் உணவருந்தினால் வயிறு நிரம்ப உண்ணவோ, பசிக்காமல் உண்ணவோ கூடாது, மிதமிஞ்சி தூங்கி, வயிறு நிறம்ப உண்டு. அதிகப் பேச்சுப் பேசிக் கொண்டிருப்போரைக் கண்டிக்க வேண்டிய அவசியமில்லை. ஆயினும், தரீக்கில் சேர்ந்ததால், அவருக்கு எவ்வித நன்மையும் ஏற்படாது. பொறாமை, துவேஷம், கர்வம், வஞ்சந் தீர்த்தல், முகஸ்துதி போன்ற துற்குணங்கள் யாவற்றையும் விட்டு விட வேண்டும்.

### பெண்களும் ஷெய்குகளும்.

இமாம் ஜமாஅத்தாகத் தொழுதல், பயான் நடைபெறும் இடம், கல்வி அறிவைப் பெருக்கும் கூட்டம் போன்றவற்றைத் தவிர்த்து, இதர வீணான கூட்டங்களிலும் ஆடல் பாடல்களிலும்

சம்பந்தப்படாமல் ஒதுங்கி இருக்க வேண்டும். அந்நிய பெண்களிடம் தோழமை கொள்ளல், அவர்களுடன் சேர்ந்து வாழல் போன்றவைகள் தரீக்கில் சேர்ந்தவர்களுக்கு வழிப்பறி திருடர்களைப் போன்றவைகளாகும் என்று ஸெய்யிதுத் தாயிபா அபுல் காஸிம் ஜுனைதுல் பகுதாதி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறியுள்ளார்கள். சிறுவர்களை தன்னிடம் தனித்து இருக்க இடங் கொடுக்க லாகாது. தனித்திருக்கையிலும் அவர்களை வர விடலாகாது. பெண்களுக்கு பைஅத்துக் கொடுப்பதும், அவர்களுடைய கணவன்மார்களில்லாமல் அவர்கள் ஷெய்கிடம் வந்து, தந்தையே என்று அழைப்பதும், மகளே என்று ஷெய்குமார்கள் அழைப்பதும், தனித்துப் பேசுவதும் கூடா.

இவை யாவும் ஷரீஅத்தின் சட்டத்துக்குப் புறம்பானவை, ஷரீஅத்தின் சட்டத்துக்குப் புறம்பில் செல்பவர் வழிகெட்டுத் தானும் நாசமாகி பிறரையும் நாசமாக்கி விடுவார். பெண்களுக்கு பைஅத்துக் கொடுப்பதும், அவர்களிடம் அஹ்து வாங்குவதும் கூடாது என்றில்லை. ஆனால், பெண்களின் உடம்பில் எதையும் தொடலாகாது. அவர்களுடன் தனிக்கவும் கூடாது. திரைக்கப்பால் அவர்களை இருக்கச் செய்ய வேண்டும்.

**அவசரப்படலாகாது.**

திக்ரை நிரந்தரமாகச் செய்து கொண்டிருக்க வேண்டும். அகத்தூய்மைக்கு இதனைப் பார்க்கினும் அதிக துரிதமான பலனைக் கொடுக்கக் கூடிய வணக்கம் வேறில்லை, (ஃபத்ஹு என்னும்) ஞான வெற்றி அதி துரிதமாகக் கிடைக்க வேண்டும் என்று அவசரப்படக் கூடாது. அகக்கண் திறக்காமல் இருந்தாலும்



சரி, அஞ்ஞானத்திரை அகன்றாலும் சரி, அகலா விடினும் சரி, (இபாதத் என்னும்) வணக்கத்தை விட்டு விடலாகாது. வெற்றிக்கான அடையாளத்தைக் காணவில்லை என்பதற்காக திக்ருகளிலுள்ள முயற்சியைக் கைவிடலாகாது என்று முஹிய்யத் தீனிப்னு அறபி குத்திஸ ஸிர்ருஹூ கூறியுள்ளார்கள். ஏனெனில், வெற்றிக்கு ஒரு குறிப்பிட்ட காலம் நிர்ணயிக்கப்பட்டிருக்கும். அக்காலம் வரும்போது வெற்றியும் தானாக வந்து விடும். ஆதலால், இறைவன் மீது நிராசை கொள்ளலாகாது. உன்னுடைய வணக்கத்திலும் ஜப தபம் போன்ற நடவடிக்கை களிலும் நீ (முக்லிஸாக அதாவது) அந்தரங்க சுத்தியாக இருப்பின், உன் காரியங்களுக்கு நிச்சயமாகப் பலனுண்டு. திக்ரு இபாதத்து ஆகியவற்றிற்கு நன்மைப் பயனும் மறுமைக் கூலியும் நிச்சயமாக உண்டு. ஆயினும், அவற்றை மனதிற் கொண்டு நீ வணக்கங்களிலும் திக்ருகளிலும் ஈடுபடலாகாது. உன்னுடைய றப்புடன் பேசுவதாகவும், இப்பேச்சின் இன்பத்தை நுகர வேண்டும் என்பதாகவும் நீ உறுதி கொள்ள வேண்டும்.

அவசியமின்றி உணவில் கை வைக்கலாகாது. உணவருந்தினாலும், பசி தீரும் அளவுக்குத்தான் உட்கொள்ள வேண்டும். இவ்வுலகை இரு முறையிலும் துறக்க வேண்டும். இவ்வுலக இன்பங்களைத் தள்ளல், இச்சைகளைத் துறத்தல் ஒருமுறை. இவ்வுலக கௌரவம், புகழ், பிரதாபம் (அரும் செயல்கள்) ஆகியவற்றைத் துறத்தல் மற்றொரு முறை, ஆக இவ்விரு முறைகளிலும் இவ்வுலகைத் துறந்தால்தான் மெய்யான முரீதாக முடியும். ஒருவர் உலகத்தைத் துறந்து துறவியாகி விட்டார் என்று தெரிந்தால், அரசர்கள் கூட அவரை கௌரவிப்பார்கள். இவ்வாறான கௌரவங்களையும் கூடத் துறந்து விட வேண்டும்.

### எல்லா மதுஹபுகளையும் பேண வேண்டும்.

மார்க்க விஷயத்தில் மிகவும் பேணுதலாக உள்ளதையே எடுத்துக் கொள்ள வேண்டும். சன்மார்க்க அறிஞர்களான உலமாக்கள் ஒன்றைக் குறித்து கூடுமா? அல்லவா? என்று பிணங்கிக் கொண்டிருப்பதைக் கவனிக்கலாகாது. இயன்ற வரையில் எல்லா மதுஹபுகளின்படியும் தன்னுடைய இபாதத்தும் அமல்களும் ஆகுமானவைகளாக இருக்க முயல வேண்டும். பலஹீனர்களுக்கும் நிர்ப்பந்த நிலையிலுள்ளவர்களுக்கும்தான் ஷரீஅத்து விதி விலக்களித்திருக்கிறது. ஆதலால், ஷரீஅத்தில் இடங்கிடைக்கிறதா? என்று ஆராய்ந்து அதன்படி காரியத்தைச் சாதித்துக் கொள்ள விரும்பலாகாது. தரீக்கில் சேர்ந்தவர்களுக்கு நிர்ப்பந்தங்களோ அவசியங்களோ இதர அலுவல்களோ இல்லை. தவிர, தன்னுடைய அமல்களை மக்கள் உணர வேண்டும் என விரும்புவோர் தரீக்கினால் எவ்வித நன்மையையும் அடையமாட்டார்கள். தன்னுடைய பரிபூரணத்துவத்தை மக்கள் உணர வேண்டும். தன்னுடைய பெருமை விளங்க வேண்டும் என்று விரும்புகிற முரீது ஒழிந்து விடுவான். மக்கள் தன்னைக் கொண்டு பறக்கத்துத் தேட வேண்டும் என்று ஆசைப்படுபவன் அழிந்தே போவான்.

### பைஅத்தை ரத்துச் செய்தல்.

முரீது வாங்கி ஞான மார்க்கத்தில் பிரவேசித்த ஒருவர் மேற்கண்ட ஒழுங்குகளைக் கடைப்பிடிக்காமலும் ஞான குருவாகிய ஷெய்கின் கட்டளைகளைப் பொருட்படுத்தாமல் விவாதங்களில் இறங்கினாலும், தன் ஷெய்கின் அகமியத்தை அறிய பிறருடன் விவாதங்களை நிகழ்த்தினாலும், தரீக் என்னும் ஞான மார்க்க ஒழுங்குகள் தவறியவராக இருந்தாலும், அவருடைய பைஅத்தை ரத்துச் செய்து அவரை ஷெய்கானவர் தம்மை விட்டு அகற்றி விடலாம்.



### ஷெய்கு தேவைதானா?

சன்மார்க்கத்தின் அகமியங்களைப் புரிந்து ஆத்மார்த்த முன்னேற்றங்களைப் பெற்று இறைவனை அடைவதற்கு ஷெய்கு என்னும் ஞான குருக்கள் அவசியம்தானா? சன்மார்க்க சம்பந்தமான நூல்களைப் படிப்பது மட்டும் போதாதா? என்பதைக் குறித்து அறிஞர்கள் ஆராய்ந்ததில், ஒருமுகமான அபிப்பிராயத்துக்கு அவர்கள் வர முடியவில்லை. இதனைக் குறித்து பல இடங்களிலுமுள்ள பேரறிஞர்களுக்கு எழுதிக் கேட்டு அவர்களிடமிருந்து வந்த பதில்களைப் பார்த்ததில் ஷெய்குமார்கள் எனப்படுவோர் மூன்று வகையினராக இருக்கின்றனர். நூல்களைப் பயின்று கல்வி கேள்விகளில் சிறந்த அறிஞர்கள் ஒருவகை. இவர்களிடம் கல்வி பயில வேண்டும். இவர்களுக்கு **ஷெய்குத் தஃலீம்** என்று பெயர். சன்மார்க்க விஷயங்களில் அறிஞர்களாகவும் மக்கள் யாவரும் திருந்தி நல்லோர்களாக வேண்டும் என்ற அக்கறையுள்ளவராகவும் இருக்கிற ஷெய்குகள் மற்றொரு வகை. இவர்களுடன் இருந்து சன்மார்க்கத்தைக் கடைப்பிடிப்பதிலும் ஜப தபங்களிலும் பயிற்சி பெற வேண்டும். இவ்வாறான ஷெய்குகளுக்கு **ஷெய்குத் தர்பியத்து** என்று பெயர். சில பெரியார்கள் ஆத்மார்த்த முன்னேற்றங்களை அடைந்து காமில்களாக இருப்பார்கள். இவர்களைச் சந்திப்பது மட்டுமே போதுமானது. இவர்களின் பார்வை ஒன்றே மனிதனைத் திருத்தி, உன்னத நிலைக்குக் கொண்டு வந்துவிடும். இத்தகையோருக்கு **ஷெய்குத் தரக்கீ** என்று பெயர்.

ஆகவே சிந்தித்து செயல்படுவோருக்கு (விவேகிக்கு) நூல்களே போதுமானது. சிந்தனையற்ற மற்றவர்களுக்கு பயிற்சி யளிக்கும் ஷெய்குத் தர்பியத்து அவசியம். ஒருவருக்கு தக்வா என்னும் பயபக்தி இருந்தால், அவர் திக்ருகளிலும் வணக்கங் களிலும் எது சிறந்ததோ அதனைச் சம்பூரணமான முறையில் நிறைவேற்றி முன்னேறி விட முடியும். என்றாலும், அவ்வப்போது தனக்கு சந்தேகமானவற்றைக் கேட்டுத் தெரிந்து கொள்ள, ஆத்மார்த்தப் படித்தரங்களைக் கடந்து முன்னேறிய காமிலான ஷெய்கு இருக்க வேண்டியது அவசியமாகும். ஆகவே, ஆத்மார்த்தப் பாதையான தரீக்கில் சேர்ந்து, ஷெய்குத் தரக்கீயை அடைவது அவ்வழி செல்ல விரும்பும் ஒவ்வொருவருக்கும் அவசியமாகும்.

தீய குணங்களை விட்டு நீக்கி, நற்குண நல்லொழுக் கத்தில் திருத்தி, ஆத்மார்த்தப் பாதையில் வழி நடத்திச் செல்லும் அஷ்ஷெய்குல் காமிலாகிய ஞானகுரு எனப்படுபவர் எப்படிப் பட்டவராக இருப்பார்? என்பதைப் பற்றி பொது மக்கள் சுருக்கமாக ஓரளவு தெரிந்திருப்பது அவசியமாகும். எத்தனையோ பேர் தங்களை ஷெய்கு என்றும் முர்ஷித் என்றும் கூறிக் கொண்டு, குரு பீடத்துக்கென்ற விசேஷ உடைகளையும் கூடச் சிலர் அணிந்து கொண்டு, ஊர் ஊராகவும் நாடு நாடாகவும் சுற்றித் திரிந்து, பொது மக்களை அடுத்து, முரீது வாங்க வேண்டிய அவசியம் பற்றி தங்கள் மனதில் தோன்றியவாறெல்லாம் கூறி, அவர்களைச் சிக்க வைத்து, ஞானம் என்ற பெயரால் தங்கள் விருப்பம்போல் சில மூடக் கொள்கைகளையும், யோகம் என்ற பெயரால் சில அப்பியாசங்(பாடப் பயிற்சி)களையும் கற்பித்து பொது மக்களை வழி கெடுத்துக் கொண்டிருக்கின்றனர்.



சன்மார்க்க விஷயத்தில் போதியளவு கல்வியறிவில்லாத பொது மக்கள் யோகாப்பியாசங்களுக்குரிய பெயர்களையும், ஞான வழக்குகள் சம்பந்தமான சில தமிழ் அறபி உர்தூ வார்த்தைகளையும் செவியேற்று பெரிய ஞானி என்றும் காமிலான ஷெய்கென்றும் நினைத்து அவரிடம் முரீது என்னும் பைஅத் பெற்று வழி தவறி இம்மை மறுமைப் பேறுகளை இழந்து விடுகின்றனர். ஆதலின், அஷ்ஷெய்குல் காமில் என்னும் பரிபூரணமான ஞானாசியரின் லட்சணங்களைக் குறித்து ஸுஹ்றவர்தீ குத்திஸ ஸிர்ருஹூ (அவருடைய அந்தரங்கம் பரிசுத்தமானதாக இருக்கட்டும்) அவர்கள் தங்களுடைய வஸிய்யத்து என்னும் உபதேசங்களில் கூறி இருப்பது வருமாறு:-

"தீய குணங்களை விட்டு உன்னை நீக்கிப் போஷிக்கத் தக்கவரும், தரீக்குல் ஹக்கை (சத்திய வழியை) உனக்குக் காண்பிக்கத் தக்கவருமான ஷெய்கு என்னும் ஞானகுரு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பிரதிநிதியாக இருக்க வேண்டும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பிரதிநிதியாக இருக்கத் தகுந்தவர், 1. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பரம்பரையைச் சேர்ந்து ஒரு ஞான குருவிடம் பைஅத் பெற்று, அவரிடம் (சுலூக் என்னும்) ஞான மார்க்க நுட்பங்களை அனுபவப் பூர்வமாகத் தெரிந்திருக்க வேண்டும். 2. அவர் சன்மார்க்க விஷயங்களில் தேவையான அளவுக்குப் போதிய கல்வியுள்ளவராக இருக்க வேண்டும். சன்மார்க்க கல்வியில்லாத ஒருவர் தக்க ஆசானிடம் பைஅத் பெற்று உண்மையாகவே ஞானவழி நடப்பவராக இருந்த போதினும், அவர் மற்றவர்களுக்கு பைஅத் கொடுத்து ஞானவழியில் நடத்திச் செல்ல தகுதி பெற்றவரல்லர். 3.

இவ்வுலகாதாயங்களின் மீதும், கௌரவத்தின் மீதும் பற்றற்றவராக இருக்க வேண்டும். 4. கொஞ்சமாக உண்ணல், குறைவாகப் பருகுதல், குறைவாக தூங்குதல், அதிகமாகத் தொழில் செய்தல், தான தர்மம் செய்தல், நோன்பு நோற்குதல் ஆகிய திக்ருகளில் ஈடுபட்டவராகவும் பொறுமை. நன்றி, மத உறுதி, இறை நம்பிக்கை, இருக்கிறதைக் கொண்டு திருப்தியடைதல், பொறுமை, பணிவு, வெட்கம், நாணம் வாக்குறுதியை நிறைவேற்றல், நாணயம், அமைதி போன்ற நல்ல குணங்கள் உள்ளவராக இருக்க வேண்டும். இம்மாதிரியான அம்சங்கள் ஒருங்கே அமைந்த ஷெய்குதான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஆத்மீக பிரகாசங்களில் ஒரு பிரகாசமாக இருக்கிறார். பிறரால் பின்பற்றப்படுவதற்கு இவர் தகுதியானவர். ஆனால், இவ்வாறான அம்சங்கள் ஒருங்கே அமைந்த ஞானகுரு மிக மிக அபூர்வம். இவ்வாறான லட்சணங்கள் ஒருங்கே அமைந்துள்ள ஞான குருவை நீ அடைந்தால், அவரை விட்டுப் பிரிந்து விடாதே. உடலாலும் பொருளாலும் கௌரவத்தாலும் அவருக்குத் தொண்டு செய்பவராக ஆகிவிடு. அந்த ஞானகுருவின் ஞானஇருதயம், அவர் வணங்கும் காலங்கள், அவருடைய ஒழுக்கங்கள் ஆகியவற்றை நுட்பமாகக் கவனித்துப் பேணி எடுத்துக் கொள், "உண்மையாளர்களுடன் இருங்கள்" என்று இறைவன் திருமறையிற் கூறியுள்ளான். "அல்லாஹ்வுடன் இரு; அதற்கியலாவிடில் அல்லாஹ்வுடன் இருந்தவர்களுடனாவது இரு. அவருடன் நீ இருந்தால் உன்னை அவர் அல்லாஹ்வின் பால் (இட்டுச் சென்று) சேர்த்து விடுவார்" என்று ஹதீஸிலும் கூறப்பட்டிருக்கிறது. "ஒரு ஷெய்கு தன்னுடைய கூட்டத்தில் இருப்பது ஒரு நபீ தன்னுடைய உம்மத்தில் இருப்பது போன்ற" என்பதாக வேறு ஒரு ஹதீஸிலும் கூறப்பட்டிருக்கிறது. (அவாரிஃபுல் மஆரிஃப்)



## ஃபர்லான காரியங்களின் அவசியம்

இறைவன் கடமையாக ஏற்படுத்தியுள்ள ஃபர்லான காரியங்களைப் பூரணமாக நிறைவேற்றுவதில் முழு முயற்சியையும் எடுத்துக் கொள்ள வேண்டும். இதற்கடுத்த படியான முக்கியத்துவம் வாஜிபான கடமைகளையும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஏற்படுத்திய சுன்னத்து முஅக்கதாக்களையும் நிறைவேற்ற வேண்டும். மூன்றாவதாகத்தான் நஃபிலான காரியங்களை நிறைவேற்றுவதில் ஈடுபட வேண்டும். ஏராளமான மக்கள் ஃபர்லான காரியங்களை நிறைவேற்றுவதில் அசட்டையாக இருக்கிறார்கள். நஃபிலான காரியங்கைளைச் செய்வதில் முற்றிலும் முனைந்து விடுகிறார்கள். இது மிகவும் தவறான போக்கு என்பதாக **'தப்ஸீர் ரூஹுல் பயான்'** என்னும் நூலில் கூறப்பட்டிருக்கிறது.

சன்மார்க்க வழியை விட்டு விலகி அவா என்னும் மன விருப்பத்தை அடியான் பின்பற்றுகிறான் என்பதற்குரிய அடையாளம் நஃபிலான நல்ல காரியங்களைச் செய்வதில் முனைவதும் ஃபர்லு வாஜிபுகளான கடமைகளை நிறைவேற்றுவதில் சோம்பலாக இருப்பதுமாகும். அல்லாஹு தஆலாவால் இரட்சித்துக் காக்கப்பட்ட சில அடியார்கள் நீங்கலாக பெரும்பாலான வர்களின் நிலை இம்மாதிரியே இருந்து வருகிறது. வழி தவறியவர்களில் ஏராளமானவர்கள் ஏராளமான நஃபிலான காரியங்களைச் செய்வதில் எவ்விதக் குறையும் செய்ய மாட்டார்கள். ஃபர்லான ஒரு காரியத்தை அதை நிறைவேற்ற வேண்டிய முறைப்படி பூரணமாக நிறைவேற்ற மாட்டார்கள் என்பதாக **'ஹிக்கம் அத்தாஇயா'** என்ற நூலில் கூறப்பட்டிருக்கிறது.

### அல் இமாமுல் அஃலம்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் அவர்கள்தான் அல் இமாமுல் அஃலமாக (ஏக போகத் தலைவராக வழிகாட்டியாக) இருந்தார்கள். (தங்களுடைய புற உலக வாழ்வை அவர்கள் பூர்த்தி செய்து மக்களின் கண்ணை விட்டு மறைந்து விட்டாலும்) அவர்களுடைய சுன்னத்து என்னும் வழி முறைகள் இவ்வுலகில் மக்களால் கடைப்பிடிக்கப்படும் வரையில் அவர்கள்தான் இமாமுல் அஃலம் ஆக இருந்து வருகிறார்கள். அவர்களின் சுன்னத்துகள் அனுசரிக்கப்படாமல் விடப்படுவதன் மூலம் அவைகள் அழிக்கப் பட்டாலும், அந்த சுன்னத்துகளுக்கு விரோதமாக நடந்தாலும் நாட்டிலும் சமூகத்திலும் குழப்பங்களையும் கலகங்களையும் கஷ்டங்களையும் தொந்தரவுகளையும் நீங்கள் எதிர்பாருங்கள் என்பதாக **அஷ்ஷிஃபா** என்னும் நூலில் எழுதப்பட்டிருக்கிறது.

" ஒரு அந்நியனைப் போல அல்லது வழிப்போக்கனைப் போல இவ்வுலகில் நீ வாழ்வாயாக சமாதிகளுக்குள் இருப்பவர் களில் ஒருவராக உன்னை நீ கணித்துக் கொள்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருப்பதாக இப்னு உமர் ரலியல்லாஹுதஆலா அன்ஹுமா அவர்கள் ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள். இந்த ஹதீஸை இமாம்கள் அஹ்மது ரஹ்மத்துல்லாஹி அலைஹி. அல்ஹாக்கிம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி ஆகியவர்கள் தங்கள் நூற்களில் எழுதி இருக்கிறார்கள்.

### இவ்வுலகிற்கு மனிதன் வந்ததன் நோக்கம்.

விசுவாசியான மெய்யான மூமின் ஆத்மார்த்த



உலகிலிருந்து இந்த உலகுக்கு இர்ஃபான் என்னும் ஞான வியாபாரம் செய்வதற்காக வந்த வியாபாரியேயாவான். ஆகவே, அல்லாஹுதஆலாவை அறிதல், அவனுடன் இணங்கி இருத்தல், அவனை நெருங்குவதற்கான காரியங்களைச் செய்தல் ஆகிய வற்றிலேயே அவன் ஈடுபட வேண்டும். இவ்வுலக ஆடம்பரங் களிலும் அலங்காரங்களிலும் கவனத்தைச் செலுத்தலாகாது. அவ்வாறு கவனம் செலுத்தினால், ஞான சூரியன் அவனுக்கு மறைந்து விடும். ஞான மார்க்கத்தின் வழியையும் பரிசுத்தனை அடைவதற்கான இணைப்பையும் விட்டுத் துண்டிக்கப்பட்டவனாகி விடுவான். ஆதலின், இந்த ஹதீஸிலுள்ள இரகசியத்தை இறைவிசுவாசமுள்ள ஞானி அதாவது ஆரிஃபாக இருக்கிற மூமின் உணருவாராயின் தன்னுடைய நோக்கத்தை உடனே யடைந்து, எங்கிருந்து வந்தாரோ அந்த இடத்துக்குத் திரும்பச் செல்வதற்காக அந்நிய நாட்டுப் பிரயாணியைப் போலவே இந்த உலகில் வாழ்வார். லாகூத் என்னும் வானலோகத்திலிருந்து இவ்வுலகுக்கு வந்த அந்நிய உலகப் பிரயாணிகளில் ஒருவர் தானே இவர் என்பதாக அஷ்ஷெய்குல் அக்பர் முஹிய்யத் தீனுப்னுல் அறபிய்யி குத்திஸ ஸிர்ருஹு எழுதி இருக்கிறார்கள்.

### ஞான மார்க்கத்திற்குத் தலைமை தாங்க தகுதியுள்ளவர் யார்?

ஷரீஅத்துடைய கல்வியிலும், அது தெளிவாகக் கூறி இருப்பவைகளையும், மறைமுகமாக விளங்கப் படுபவை களையும், அதிலுள்ள பொதுக் கல்வியையும், விசேஷக் கல்வி யையும். முதலில் கூறப்பட்டது எது? பின்னர் இதில் மாற்றப்பட்டது எது? இதனை மாற்றுவது எது? என்ற விபரங்களையும் , நன்கு அறிந்தவராகவும், அறபி இலக்கியத்தில் தேர்ந்த அறிஞராகவும் அதாவது அதன் புறப்பொருள், அகப்பொருள், அப்பதங்களை

உபயோகிக்கும் முறைகள், உபயோகிக்கும் மரபுகள், திரிபுகள் (வேறுபாடுகள்) முதலியவற்றிலும் நிபுணத்துவமிருக்க வேண்டும். இவ்வம்சங்கள் பொருந்தியவர்தான் அல்லாஹு தஆலாவின் தரீக் என்னும் ஞான மார்க்கத்துக்குத் தலைமை தாங்கத் தகுதியுள்ளவர் என்று எல்லா ஞானிகளும் ஏகமனதாகக் கூறியுள்ளார்கள். ஆகவே, ஒவ்வொரு சூஃபியும் ஃபக்கீஹாக (மார்க்கச் சட்ட மேதையாக) இருப்பார். மார்க்கச் சட்ட மேதையான ஒவ்வொரு ஃபக்கீஹும் சூஃபியாக இருக்க முடியாது என்பதாக அஷ்ஷெய்குல் இமாம் அப்துல் வஹ்ஹாபிஷ் ஷஃறானி குத்திஸ ஸிர்ருஹூ கூறியுள்ளார்கள்.

### கராமத்துகள்

கராமத்து என்னும் அற்புதச் செய்கைகளை மறைக்க வேண்டும் என்பதாகவே தரீக்கத்துக்காரர்கள் கூறியுள்ளார்கள். இதில் கருத்து வேறுபாடு இல்லை. கராமத்துகளை வெளியாக்க வேண்டிய அவசியம் ஏற்படாமலும், சன்மார்க்க சம்பந்தமான சரியான நோக்கம் இல்லாமலும் இருக்கையில், அவற்றை வெளியிடுவது ஜாயிஸ் இல்லை (கூடாது). மேலும், "கராமத் என்னும் அற்புதச் செய்கை யுள்ளவர் சிறந்தவர், அதில்லாதவர் தாழ்ந்தவர்" என்ற பாகுபாடு தரீக்கத்தில் இல்லை. இறை பக்தியில் மிகவும் விருப்பமுள்ளவராக இருக்கிறவருக்கும், துறவிக்கும் கூட சில சமயங்களில் கராமத்து வெளியாகும், இவ்விரு வகையின ரையும் பார்க்கினும் ஆரிஃபாக (மெஞ்ஞானியாக) இருப்பவர் சிறந்தவர் என்பது எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட விஷயம். இவ்வாறான ஆரிஃபுகளுக்கு கராமத்து ளெியாகாது.

மகாமாத்து என்னும் ஞானப் படித்தரங்களில் ஆரம்ப நிலையிலுள்ளதுதான் (ஜுஹ்து என்னும்) துறவு நிலை. இந்த



நிலையைக் கடந்ததால் ஏற்படுகிற நிலைக்குத்தான் முஹப்பத்து (பிரியம் – பக்தி) என்று கூறுவர். இந்தப் பாகுபாட்டை உணர்த்தவே அல்இமாம் அபூ யஜீதல் புஸ்தாமீ குத்திஸ ஸிர்ருஹூ அவர்கள் "ஆரிஃபாக (மெஞ்ஞானியாக) இருக்கிறவர் பறப்பவர், ஜாஹிதாக (துறவியாக) இருப்பவர் நடப்பவர்" என்று கூறியுள்ளார். பறக்கிற வரை நடக்கிறவர் தொடர்ந்து செல்வது இயலாத காரியம்.

யக்கீன் என்னும் உறுதியில் தளர்வு உள்ள அடியாருக்குங் கூட சில சமயங்களில் அற்புத நிகழ்ச்சி என்னும் கராமத்து வெளியாகுவதுண்டு. அந்த அடியாரின் உறுதியிலுள்ள தளர்வை நீக்குவதற்காக அவர் மீது இறைவன் கருணை புரிந்து அற்புதத்தை வெளியாக்குவான். இது அவ்வடியாரின் அமல் களுக்கு இவ்வுலகில் அளிக்கிற பிரதிபலன். இதனை அவர் கண்ட பிறகு அவருடைய தளர்வு நீங்கி, பரிபூரணமான உறுதியாளராக மாறி விடுவார். இவ்வாறான நல்லடியார்களுக்கு மேலில் வேறு ஒரு கூட்டத்தினர் இருக்கின்றனர், அவர்களுடைய இருதயங் களை விட்டு அஞ்ஞானம், மாயை என்ற திரைகள் அகன்றிருக் கின்றன. அவர்களுடைய அகங்கள் யக்கீன் என்ற உறுதியின் செழுமையையும் மஃரிபத் என்னும் மெஞ்ஞானத்தையும் அடைந்துள்ளன. இவர்களுக்கு சிருஷ்டிப் பொருள்களின் அதாவது அற்புத நிகழ்ச்சிகள் வெளியாகுவதன் தத்துவத்தைப் பார்த்தல் போன்றவைகள் மூலமும் உதவி பெற வேண்டிய தேவை இல்லாமலாகி விடுகிறது. ஆதலால் இவர்களுக்கு அவைகள் வெளியாகுவதில்லை.

### ஸஹாபீகளுக்கு சொற்பமாகவே கராமத்துகள் நிகழ்ந்தன.

ஸஹாபீகள் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நேரில் தரிசித்து அவர்களுடன் பல முறை பேசி

உறவாடி இருக்கும் வாய்ப்புப் பெற்றவர்கள். அவர்களுக்குக் கிடைத்த இந்த வாய்ப்பின் காரணமாக அவர்கள் வஹீ வருவதையும், மலக்குகளின் தரிசனங்களையும் கண்டார்கள். அவர்களுடைய அகங்கள் பிரகாசமுள்ளவைகளாக மாறி விட்டன. இவ்வுலகிலிருந்து கொண்டே மறு உலகை அவர்கள் பிரத்தியட்சமாகப் பார்க்கிறவர்களாகி விட்டனர். அவர்களுடைய இருதயங்கள் சுத்தமாகி விட்டன; அவர்களுடைய முந்தைய பழக்கங்கள் மாறிவிட்டன. அவர்களுடைய இருதயக் கண்ணாடிகள் பள பளப்பாகி விட்டன. கராமத்து என்னும் அற்புதங்கள் தங்களிலிருந்து வெளியாக வேண்டும் என்ற தேவை இல்லாதவர்களாகி விட்டனர். எனவேதான், அவர்களில் சிலரிடமிருந்து மட்டும் சில கராமத்துகள் வெளியாயின, பெரும்பாலரிடம் வெளியாக வில்லை. அவ்வாறு வெளியான கராமத்துகளும் மிகச் சொற்பந்தான். பிற்காலத்தில் தோன்றிய மஷாயிகுகள் என்னும் ஞான குருக்களிலிருந்து ஏராளமான அற்புதங்கள் வெளியாகி இருகின்றன என்று அஷ்ஷெய்கு ஷஹாபுத்தீனிஸ் ஸுஹ்றவர்தீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறியுள்ளார்.

### முஃஜிஸாவுக்கும் கராமத்துக்கும் உள்ள வித்தியாசம்

தவிர ஒலிமார்களுக்கு கராமத்து என்னும் அற்புதங்கள் வெளியாகுவது உண்மை. அதிற் சந்தேகமே இல்லை. இதனைக் குறித்து திருக்குர்ஆனும் சுன்னத்தும் இஜ்மாஉம் உறுதிப் படுத்திக் கூறி இருக்கின்றன. கராமத்து என்னும் அற்புத நிகழ்ச்சியும், முஃஜிஸா என்னும் அற்புத நிகழ்ச்சியும் வெளித் தோற்றத்தில் கிட்டத்தட்ட ஒன்று போல்தான் தோன்றும். என்றாலும், நபிமார்களால் வெளியாக்கப்படும் அற்புத



நிகழ்ச்சிக்கு **முஃஜிஸா** என்று பெயர். இதனை இறைவனின் நபீ என்று தம்மை விசுவாசிக்க வேண்டும் என்ற சித்தாத்தத்தின் பேரில் மக்களின் கோரிக்கைக்கு இணங்கியோ அல்லது மக்கள் கோராமலிருக்கையில் தாமாகவோ நபீ என்பவருக்கு வெளிப்படுத்துவான். **கராமத்** என்பது இம்மாதிரியான நபித்துவ தாவாவுடன் வெளியாக்கப்படுவதில்லை. ஆனால், தாம் இறைவனின் ஒலி என்ற தாவாவுடன் சில சமயங்களில் இது வெளியாக்கப்படும். இப்படி வெளியாகுவது மிகக் குறைவு. தாம் ஒலி என்ற தாவா இல்லாமல் தானாக வெளியாகும் அற்புதம்தான் மிக அதிகம். தவிர, முஃஜிஸா என்னும் அற்புதத்தை வெளியாக்குவது நபியின் மீது கடமையாக ஏற்பட்டு விடும். ஆனால் கராமத் என்னும் அற்புதத்தை மறைத்து வைப்பது ஒலியின் மீது கடமையாக இருக்கிறது. எனினும், அவசியம் ஏற்படும் போது அவர் மறைக்காமல் வெளியாக்கலாம், சில சமயங்களில் அந்த ஒலியின் சுய விருப்பத்திற்கல்லாமல் அது தானாகவும் வெளியாகும். இதுதான் அதிகம்.

### இர்காஸும் இஸ்தித்ராஜும்

கராமத்து என்னும் அற்புதச் செய்கை அல்லாஹு தஆலாவுக்குச் செய்ய வேண்டிய கடமைகளையும், அடியார் களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளையும் பூரணமாக நிறைவேற்றுகிற நல்லடியாரிலிருந்தும் வெளியாகும். இதற்கு **இர்காஸ்** என்று பெயர். இவ்வாறான நல்லடியாரிலிருந்து அல்லாமல் மற்றவர்களிலிருந்து வெளியாகும் அற்புத நிகழ்ச்சிகளுக்கு **ஸிஹ்ரு** என்றும் **இஸ்தித்ராஜ்** என்னும் பெயர். இதனை ஆலிம்கள் அல்லாது மற்றவர்கள் சுலபமாகப் புரிந்து கொள்ள முடியாது.

## முத்தக்கீ

அல்லாஹு தஆலாவின் சமூகத்தில் நெருங்கியவருக்கு ஒலி என்று பெயர். அவனின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடப்பதுடன் அவன் விலக்கியவற்றைச் செய்யாமல் தவிர்த்துக் கொள்வதன் மூலம்தான் இறைவனின் சமூகத்தை நெருங்க முடியும். தவிர, அவனுடைய (முஹப்பத் என்னும்) பிரியத்தை அடைய வேண்டுமாயின், அவனுடைய தூதராகிய திரு நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை முற்றிலும் பின்பற்ற வேண்டும். இதில்லாமல் இறைவனின் பிரியத்தை அடைய இயலாது. ஆகவே, முத்தக்கீ என்னும் பயபக்தியுள்ள வர்கள்தான் ஒலியாக இருப்பதற்குத் தகுதியானவர். பயபக்தியின் நுட்பத்துக்குத் தக்கவாறு அவர்களின் அந்தஸ்துகளும் வித்தியாசப்பட்டிருக்கும்.

## ஒலிமார்கள்

ஒலிமார்களில் மிகச் சிறந்தவருக்கு கௌது என்று பெயர். இறைவனின் அடியார்களுக்கு இவர் மூலமாகத்தான் இரட்சண்யம் கிடைக்கிறது. இறைவனின் கிருபை இவர் மூலமாகத்தான் சிருஷ்டிகளுக்கு ஏற்படுகிறது.

இவருக்கு அடுத்தபடியாக இருப்பவர்களுக்கு **இமாம்கள்** என்று பெயர். கௌது என்பவருக்கு இவர்கள் அமைச்சர்களைப் போன்றவர்கள். இவர்கள் இருவர்.

இவர்களுக்கு அடுத்தபடியாகவுள்ள மூன்றாம் தரத்தினருக்கு அவ்த்தாது என்று பெயர். இவர்கள் நால்வர். இவ்வுலகின் நான்கு திசைகளுக்கும் இவர்கள் காவலர்கள்.



இவர்களுக்குப் பின் நான்காவதாக இருப்பவர்களுக்கு நுஜபாக்கள் என்று பெயர். இவர்கள் ஏழு பேர். புவியிலுள்ள ஏழு கண்டங்களுக்கும் இவர்கள் காவலர்கள் (கண்டங்கள் என்ற பதத்திற்கு தற்கால விஞ்ஞானிகள் பிரித்திருக்கிற ஆசியா, ஆப்பரிக்கா, ஐரோப்பா, அமெரிக்கா, ஒஷியானியா என்ற ஐந்து கண்டங்கள் என்பது பொருளல்ல) இவ்வுலகிலுள்ள மண் ஏழு வகைகளாக இருக்கின்றன. அவை ஒவ்வொன்றுக்கும் கண்டம் என்று பெயர். இந்த முறையில்தான் இங்கு ஏழு கண்டங்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. இவர்களுக்குப் பின்னர் ஐந்தாவதாக இருப்பவர்களுக்கு நுக்கபா என்று பெயர். இவர்கள் பன்னிருவர், வானின் பன்னிரண்டு பிரிவாகிய ராசிகள் என்னும் பன்னிரண்டு புருஜ்களையும் (நட்சத்திரங்களையும்) இவர்கள் பாதுகாப்பவர்கள்.

இவர்களுக்குப் பின்னர் ஆறாவதாக இருப்பவர்களுக்கு அப்தால்கள் என்று பெயர். இவர்கள் நாற்பது பேர். மனிதர்களின் தேவைகளை நிறைவேற்றி வைக்கும் பணியில் இவர்கள் ஈடுபட்டிருப்பர், இவர்களுக்குப் பின்னர் ஏழாவதாக இருப்பவர் களுக்கு மளாஹிர் என்று பெயர். இவர்கள் தொண்ணூற்று ஒன்பது பேர், இறைவனின் திருநாமங்களாகிய அஸ்மாஉல் ஹுஸ்னாவுக்கு இவர்கள் மள்ஹர்கள், அந்த பெயரின் தத்துவம் வெளியாகும் உதாரண புருஷர்கள். இவர்களுக்குப் பின்னர் கடைசியாக இருக்கிற சாமான்ய ஒலிமார்கள் முன்னூற்று அறுபது பேர், இவர்கள் மூமின்களில் ஸாலிஹான நல்லடியார் களிலிருந்து தேர்ந்து எடுக்கப்படுபவர்கள். இவ்வெட்டு வகைக் கூட்டத்தாரும் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இவ்வுலகுக்கு மீண்டும் திரும்ப வரும் வரையில் எந்தக் காலத்திலும் இருந்து கொண்டே இருப்பார்கள். இவர்கள் யாவரும்

குத்துபு என்பவரின் மேற்பார்வையின் கீழ் அவரின் கட்டளைக்கு உட்பட்டவர்களாகவும், அவரிடமிருந்து உதவி பெறுபவர்களாகவும் இருப்பார்கள்.

இவர்களைத் தவிர வேறு ஒரு கூட்டத்தினர் உண்டு. அவர்களுக்கு அஸ்பியா என்று பெயர். இவர்கள் குத்துபு என்பவரின் பார்வைக்கு அப்பாற்பட்டவர்கள். இவர்களை மற்றவர்கள் புரிந்து கொள்ள முடியாது. ஆதலால், இவர்களுக்கு அக்ஃபியா அதாவது மறைந்தவர்கள் என்றும் கூறுவர். இவர்களை ஞானவான்கள் அப்றாத் என்று அழைப்பர். இவர்கள் பல்லாயிரக்கணக்கில் இருப்பார்கள். இவர்களின் எண்ணிக்கை இத்தனை என்று வரையறுத்துக் கூற இயலாது. ஹளரத் ஷெய்கு அப்துல் காதிர் ஜீலானீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் காலத்தில் பன்னிரண்டாயிரம் பேர் வரையில் இவர்கள் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. இந்த எண்ணிக்கை எல்லாக் காலத்திலும் சமமாகவே இருக்கும் என்று சொல்ல முடியாது. சில சமயங்களில் இவர்கள் அதிகமாகவும் இருப்பார்கள். சில சமயங்களில் குறைவாகவும் இருப்பார்கள். இவர்களுக்கும் இறைவனுக்கும் நேர் முகமான தொடர்பு இருப்பதால், ஏனைய ஒலிமார்களும் கூட இவர்களை அறிய மாட்டார்கள். ஆனால், அவர்களில் எவருக்கு இவர்களை இறைவன் காட்டிக் கொடுக்கிறானோ அவர் மட்டும்தான் இவர்களை உணர்ந்து கொள்ள முடியும்.

**ஒலிமார்கள் பதவிக்கு வரும் முறை**

மேற்கண்ட எட்டு வகையான ஒலிமார்களில் முதலாவது வகையான கௌது என்பவருக்குத்தான் குத்துபு, குத்துபுல்



அக்தாபு, பர்தே காமில், காத்தமுல் அவ்லியா என்று பலவாறான பெயர்கள் கூறப்படுகின்றன. இவர் இறந்து விட்டால் இவருக்கு அடுத்தபடியாக இருக்கிற இரண்டு இமாம்களில் ஒருவர் இப்பதவிக்கு வருவார். இமாமுடைய பதவிக்கு அவருக்கு அடுத்த படியாகவுள்ளவர் வருவார். இவ்வாறாக ஒவ்வொரு படியிலிருந்தும் பதவி உயர்வு பெறுவர். கடைசியிலுள்ள சாமான்ய ஒலிமார்களில் ஏற்படுகிற காலி இடத்துக்கு ஸாலிஹான நல்லடியார்களில் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

இவ்வுலகம் முடிவடையும் இறுதிக் காலம் நெருங்கி விட்டால், இவ்வொலிமார்கள் யாவரும் முதலாவதாக இறந்து விடுவர். அப்புறம்தான் உலகம் முடியவடையும். இவர்களைக் கொண்டுதான் இவ்வுலகுக்கும் அடியார்களுக்கும் வருகிற (புலா என்னும்) பொதுச் சோதனைகளையும் (முஸீபத்து என்னும்) பொதுக் கஷ்டங்களையும் இறைவன் அகற்றுகிறான். வானிலிருந்து மழை வர்ஷிப்பது கூட இவர்களின் பறக்கத்தால்தான், இறைவனின் பிரதிநிதியாக இருந்து இவ்வுலகை ஆத்மார்த்தமாக ஆட்சி புரிகிற குத்துபுல் அக்தாபுக்கு மற்றவர்கள் காரியங்களை ஆற்றும் பணியாளர்களாவார்கள், இது ஆத்மார்த்தமானது. ஆகையால் லோகாதாய வாதிகள் இவர்களை அறிய மாட்டார்கள். ஆனால், இவர்கள் யாவருக்கும் ரிஜாலுல் கைப் என்று பொதுப் பெயருமுண்டு. மறைவாக இருக்கிற மனிதர்கள் என்பது இதன் பொருள். தவிர, அவ்தாதுகளுக்கும், நுஜபாக்களுக்கும் கூட குத்துபு என்று கூறுவதுண்டு.

**ஒலிமார்களின் மூன்று தன்மைகள்**

இந்தப் பதவிகளை இவர்கள் அடைந்ததற்கு அதிகமாக நோன்பு நோற்றதோ அதிகமாகத் தொழுததோ காரணமல்ல.

இவர்களிடம் தயையும், மாசற்ற மனமும், மக்கள் யாவரும் நன்றாக இருக்க வேண்டும் என்ற அந்தரங்க சுத்தியான நல்ல எண்ணமும்தான் இதற்கு முக்கிய காரணம். ஸஹாபீகளும் முற்காலத்துப் பெரியார்களும் இம்மூவகைத் தன்மைகளும் உள்ளவர்களாக இருந்தனர். இக்காலத்திலுள்ளவர்களிடம் இம்மூன்று தன்மைகள் மிகக் குறைவு. ஆனால், தொழுகை நோன்பு முதலியவற்றில் தீவிரமாக ஈடுபடுகின்றனர். எனவே, ஆத்மார்த்த உன்னதங்களை அடைய விரும்புவோர் தொழுகை, நோன்பு, ஹஜ்ஜு, ஜக்காத்து போன்ற வணக்கங்களில் அதிகமாக ஈடுபடுவது மட்டும் போதாது. அவற்றுடன் இறைவன் விலக்கியவற்றைச் செய்யாமல் தவிர்த்துக் கொள்வதுடன் இருதயத்தைக் களங்கப்படுத்துகிற மாயை போன்ற அசூயைகளையும் விட்டுச் சுத்தமாகி மேற்கண்ட மூன்று தன்மைகளையும் அடைய முயல வேண்டும்.

இவற்றை அடைவதற்காகவே ஞானாசிரியர்களை அடுத்து, அவர்கள் கட்டளைக்கு உடலாலும், பொருளாலும், மனத்தாலும் முற்றிலும் பணிந்து மக்களுக்கு தொண்டாற்ற வேண்டும். இக்காரியங்களில் பயிற்றுவிக்கும் ஞானாசிரியர் இப்புத்தகத்தில் விவரிக்கப்பட்ட தன்மையுள்ளவராக இருந்தால் தான் காரிய சித்தியாகும். அவ்வாறில்லாமல் இவ்வுலக மாயையை மனதில் வைத்துக் கொண்டு ஷெய்கு என்றோ, ஞானி என்றோ பெயர் வைத்துக் கொண்டு பிரசாரம் புரிபவர்களை அடுப்பதும், அற்புத நிகழ்ச்சிகள் வெளியாகுவதைப் பார்த்து அவ்லியா என்று சொல்லிக் கொண்டு இருப்பதும் காரிய சித்தியை அடையச் செய்யாது. மெய்ஞான ஞானகுரு என்பதற்கு அற்புத நிகழ்ச்சி அடையாளங்களல்ல. அவருடைய தன்மைகளும் தகுதிகளும் தான் அடையாளங்கள்.



## ஒலிமார்களைப் பகைக்கலாகாது

இவ்வுலகையும், இவ்வுலக மக்களையும் பாதுகாப்பதற்காக இறைவன் ஏற்படுத்தியுள்ள ஆத்மார்த்த அரசாங்க ஊழியர்களான ஒலிமார்களைப் பகைப்பது அந்தரங்கத்தில் இறைவனைப் பகைப்பதாகவே இருக்கிறது. இதனைத்தான் இறைவன் ''எனக்குரிய ஒலியை எவர் பகைக்கிறாரோ அவர் என்னை எதிர்த்துப் போரிட முன்வந்து விட்டார்'' என்று கூறியிருப்பதாக ஹதீஸ் குத்ஸியில் கூறப்பட்டிருக்கிறது. இவ்வுலகத்தைய அரசாங்க ஊழியர் ஒருவர் அதிகாரப் பூர்வமாக தன் கடமையைச் செய்யும் போது அக்கடமையைச் செய்ய விடாமல் தடை செய்தாலும், அவ்வூழியரை துன்புறுத்தினாலும் அவருக்கு உதவியாக அரசாங்கம் அடக்கு முறையை மேற் கொள்வது இக்காலத்தவருக்குத் தெரிந்த விஷயம். இது போல இறைவனின் ஆத்மார்த்த அரசாங்க ஊழியரான ஒலிமார்கள் தங்கள் கடமையைச் செய்கையில் அதனைச் செய்ய விடாமல் தடை செய்வதும், முட்டுக் கட்டையாக இருப்பதும், எதிர்ப்பதும் இறைவனின் திட்டத்தை எதிர்ப்பதாக ஏற்படுவதால், அவனுடைய அடக்கு முறையை அது வரவழைக்கிறது. ஆதலால், ஒலிமார்களை எதிப்பது தனக்குத்தானே கேடு விளைவித்துக் கொள்வதாக இருக்கிறது, இதற்கு உதாரணமாக இங்கு ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுவோம்.

## ஒலிமார்களைப் பார்க்கச் செல்வோர் நடந்து கொள்ள வேண்டிய ஒழுங்கு.

அபூ ஸயீத் அப்துல்லாஹிப்னு அபீ இஸ்றூன் என்பவர் கூறுவதாவது:- கல்வி கற்பதற்காக பகுதாது நகரம் சென்றேன். அங்கு நிஜாமிய்யா கல்லூரியில் இப்னுஸ் ஸக்கா என்பவருடன்

நட்பு கொண்டேன். பகுதாதிலுள்ள பெரிய மனிதர்களைத் தரிசிப்பது எங்கள் வழக்கம். பகுதாதில் ஒரு பெரியார் இருந்தார். அவர் கௌதாக இருக்கிறார் என்று பொது மக்கள் கூறியதுடன் "கௌது" என்றே அவரை அழைத்தனர். அவர் விரும்பினால் மக்கள் முன் தோன்றுவார். இல்லையேல், அவர்களுடைய பார்வையை விட்டு மறைந்திடுவார். அவரை தரிசிக்க வேண்டும் என நாங்கள் விரும்பினோம். எங்களுடன் ஷெய்கு அப்துல் காதிரில் ஜீலானியும் சேர்ந்து கொண்டார். அக்காலத்தில் அவர் வாலிபர். அவரால் பதில் அளிக்க இயலாத ஒரு கேள்வியை நான் அவரிடம் கேட்பேன் என்று இப்னுஸ் ஸக்கா கூறினார். நான் அவரிடம் ஒரு கேள்வியைக் கேட்பேன். அவர் அதற்கு என்ன பதிலளிக்கிறார்? என்பதைக் கவனிப்பேன் என்று நான் கூறினேன். அவரிடத்தில் கேள்வி கேட்பதை விட்டு இறைவனிடம் காவல் தேடுகிறேன். அவர் முன் அமர்ந்து அவருடைய பறக்கத்தை எதிர்பார்ப்பேன் என்று ஷெய்கு அப்துல் காதிரில் ஜீலானி கூறினார்.

இவ்வாறாக நாங்கள் பேசிக் கொண்டு அவருடைய வசிக்குமிடம் சென்றோம். அங்கு அவரை நாங்கள் உடனே பார்க்க முடியவில்லை. கொஞ்ச நேரத்துக்குப் பின்னர் எங்கள் முன் அவர் தோன்றி இப்னுஸ் ஸக்காவை கோபத்துடன் பார்த்தார். "உனக்கென்ன கேடா இப்னுஸ் ஸக்காவே, என்னிடத்தில் நீர் ஒரு கேள்வியைக் கேட்பீர். அதற்கு என்ன விடை? என்பதை நான் அறியாமல் திண்டாடுவேன் என்பது உமது எண்ணம். நீர் என்னிடம் கேட்க நினைத்திருந்த கேள்வி இன்னதுதான். அதற்குரிய பதிலைக் கேட்டுக் கொள்" என்று அவருடைய கேள்வியையும் அதற்குரிய பதிலையும் கூறி விட்டு உன்னுள்



குஃப்ருடைய நெருப்பு கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருப்பதை நான் பார்க்கிறேன் என்றார்.

பின்னர், என்னை நோக்கி, "அப்துல்லாஹ்வே, என்னிடத்தில் நீர் ஒரு கேள்வியைக் கேடடு விட்டு நான் என்ன பதில் அளிக்கிறேன் என்பதைக் கவனிப்பீரோ? நீர் நினைத்த கேள்வி இன்னது. அதற்குரிய பதில் இன்னது என்று நான் நினைத்திருந்த கேள்வியையும் பதிலையும் கூறினார். நீர் பெரியவர்களிடம் நடந்து கொள்ள வேண்டிய ஒழுங்கு முறைப்படி நடக்காததற்கு தண்டனையாக இவ்வுலகச் செல்வம் உம்மிடம் குவியும். உமது காதுச் சோணை வரை அது பொங்கி வருவதை நான் பார்க்கிறேன்" என்று கூறினார்.

## முஹிய்யுத்தீன் அப்துல் காதிர் ஜீலானி ரஹ்மத் துல்லாஹி அலைஹி அவர்களின் உயரிய அந்தஸ்து

பின்னர் ஷெய்கு அப்துல் காதிர் ஜிலானியின்பால் திரும்பி, அவரை தன் அருகில் நெருங்கி வரச் செய்து அவரைக் கண்ணியப் படுத்தி "அப்துல் காதிரே, உம்முடைய அதபின் (மரியாதை ஒழுக்கத்தின்) மூலம் அல்லாஹு தஆலாவையும் அவனுடைய ரசூலையும் சந்தோஷப்படுத்தி விட்டீர். பகுதாதில் உம்முடைய ஆசனம் விண்ணுக்கு உயர்ந்து அங்கிருந்து கொண்டு நீர் பேசுவதை நான் பார்க்கிறேன். என்னுடைய இந்தப் பாதம் ஒவ்வொரு ஒலியின் பிடரியின் மீது இருக்கிறது என்று நீர் கூறுகிறீர். உம்மைக் கண்ணிப்படுத்தி உம் காலத்திலுள்ள ஒலிமார்கள் தங்களுடைய தலையைச் சாய்க்கின்றனர். இவ்விதமாக நான் காண்கிறேன்" என்று கூறி மறைந்து விட்டார். அப்புறம் அவரை நான் பார்க்க முடியவில்லை.

பின்னர் ஷெய்கு அப்துல் காதிரில் ஜீலானிக்கு இறைவன் சமூகத்தில் நெருக்கம் கிடைத்திருக்கிறது என்பதற்குரிய அடையாளங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வெளியாக ஆரம்பித்தன. அவர் இறைவனின் குர்பத்தை (நெருக்கத்தை) அடைந்திருக்கிறார் என்பதை பொது மக்களும் குறிப்பிட்ட பெரியோர்களும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர். ஒவ்வொரு ஒலியின் பிடரி மீதும் என்னுடைய இந்தப் பாதம் இருக்கிறது என்று அவர் அறிவித்தார். அதே சமயத்தில் உலகிலுள்ள ஒலிமார்கள் எல்லோரும் அதற்குப் பணிந்தனர். ஜின்களிலுள்ள ஒலிமார்களும் கூட தங்கள் சிரசுகளைத் தாழ்த்தினர். ஆனால் இஸ்பஹானிலுள்ள ஒருவர் மட்டும் இதற்குப் பணிய வில்லை. உடனே, அவருடைய அந்தஸ்து பறிக்கப்பட்டது.

ஆபுன்னஜீப் அப்துல் காஹிர் சுஹ்றவர்தீ, அஹ்மதுல் கபீர் ரிஃபாஈ, ஆபூமத்யன், ஷெய்கு அப்துர் ரஹீம் கனாவீ ரஹ்மத்துல்லாஹி அலைஹிம் ஆகியவர்களும் தங்கள் தலையைச் சாய்த்தனர்.

## இப்னுஸ் ஸக்கா அடைந்த கதி

இப்னுஸ்ஸக்கா என்பவர் கல்வியில் முனைந்தார். தன் காலத்தவரிற் சிறந்தவராகப் புகழ் பெற்றார், அவருடன் வாதம் செய்வோர் எவரையும் தமது நாவன்மையால் அவர் மடக்கி விடுவார் என்ற புகழ் அவருக்கு ஏற்பட்டது. சிறந்த நாவன்மை மிக்கவராகவும், வாக்கு வாதம் செய்வதில் வல்லவராகவும் அவர் இருந்தார். அவரை கலீஃபா தம்மிடம் தருவித்து உரோமச் சக்கிரவர்த்தியிடம் தம்முடைய தூதுவராக அனுப்பி வைத்தார். உரோமச் சக்கிரவர்த்தி இவருடைய சாமர்த்தியத்தைப் புகழ்ந்து, அங்குள்ள பாதிரியார்களை அவரிடத்தில் ஒன்று கூடி வாக்கு



வாதம் செய்ய ஏற்பாடு செய்தார். அவர்கள் யாவரையும் இப்னுஸ் ஸக்கா தோற்கடித்தார். இதனால் அவருடைய மதிப்பு சக்கிரவர்த்தியிடம் இன்னும் அதிகமாயிற்று.

இவரைச் சோதிக்க சக்கிரவர்த்தி முடிவு செய்து தம்முடைய புதல்வியை அவர் சந்திக்க ஏற்பாடு செய்தார். அவளுடைய மையலில் இபுனுஸ்ஸக்கா மயங்கி அவளை திருமணம் செய்ய வேண்டும் என உறுதி கொண்டார். கிறிஸ்துவ மார்க்கத்தைத் தழுவாத வரையில் அவளை நீர் திருமணம் செய்ய இயலாது என்று அவருக்கு அறிவிக்கப் பட்டது. இறுதியாக பெண் மையலில் சிக்கி, அவர் மதம் மாறி கிறிஸ்தவரானார். (நஊது பில்லாஹி தஆலா) அவளை திருமணமும் செய்தார்.

பின்னர் சில காலங் கழித்து அவருக்கு நோய் ஏற்பட்டது. மிகவும் அருவருப்பான நோயானதால் அவளை விட்டு அவர் பிரிய நேர்ந்தது. ஆதரிப்பாரற்றவரானார், இறுதியாக அவர் கடைத் தெருவில் கிடக்கும்படி யாயிற்று. உணவின்றி யாசகம் வாங்க நேர்ந்தது. இந்நிலையில் அவரை அறிந்த ஒருவர் அங்கு வந்து, இவரை அடையாளம் கண்டு இது என்ன என்று விசாரித்த போது "இது ஒரு சோதனை; எனக்கு ஏற்பட்டு விட்டது. அதனால் நான் இக்கதிக்கு ஆளானேன்" என்றார். திருக்குர்ஆன் மனனமாக இருக்கிறதா? என்று வினவியதற்கு ஒரே ஒரு ஆயத்தைத் தவிர வேறு எதுவும் ஞாபகமில்லை என்றார், கடும் நோயால் கஷ்டப்படுவதைப் பார்த்த அவர், அவரை கிப்லாவின் பக்கம் முகம் இருக்குமாறு திருப்பி வைத்தார். உடனே அவருடைய முகம் கிப்லாவை விட்டு மாறி விட்டது. இந்நிலையிலேயே அவருடைய ஆவி பிரிந்தது. இபனுஸ் ஸக்கா நோய்வாய்ப்பட்டு இருந்த காலத்தில் பகுதாதில் கௌது என்பவர் கூறிய சாபங்களை

நினைவுபடுத்தி அதன் காரணமாகவே இது ஏற்பட்டது என்று அடிக்கடி அவர் கூறிக் கொண்டிருந்தாராம்.

### அபூ ஸயீத் அப்துல்லாஹ் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அடைந்த இவ்வுலக அந்தஸ்து

நான் டமாஸ்கஸ் நகருக்கு வந்தேன். சுல்தான் நூருத்தீனிஷ் ஷஹீது என்னைத் தம்முடைய தர்பாருக்கு வரவழைத்து, வக்ஃபுச் சொத்துக்களை நிர்வகிக்கும் உயர்ந்த பதவியை ஏற்றுக் கொள்ளுமாறு வற்புறுத்தினார். அதனை நான் ஏற்றுக் கொண்டேன். என்னிடத்தில் ஏராளமான உலகச் செல்வங்கள் குவிந்து கிடக்கின்றன. கௌது என்னும் பெரியார் என்னைப் பற்றிக் கூறியதும் பூர்த்தியாகி விட்டது.

இந்தச் சம்பவம் பற்றிய விபரம் ஏராளமான நூல்களில் சுருக்கமாகவும் விரிவாகவும் எழுதப்பட்டிருக்கிறது. அந்தந்த நூல்களை எழுதிய ஆசிரியர் தம்முடைய தேவைக்குத் தகுந்த அளவில் சுருக்கமாகவோ விரிவாகவோ அதனை எழுதியுள்ளார். ஆதலால், இச்சம்பவத்தைப் பற்றிய வாசகம்தான் வித்தியாசப் பட்டிருக்கிறதே யன்றி விஷயம் எல்லா நூல்களிலும் ஒன்று போலவே இருக்கிறது.

### படிப்பினைகள்

இதில் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய விஷயங்கள் பலவுள, கௌது எனப்படுபவர் உண்மையாகவே கௌது என்ற அந்தஸ்தை அடைந்தவராக இருந்தார். ஆதலால், இம்மூவரும் பேசிக் கொண்டதை இல்ஹாம் மூலமாகத் தெரிந்து கொண்டார். இப்னுஸ் ஸக்கா என்பவர் தம்முடைய கல்வித் திறமையால்



அவரை எதிர்த்தார். ஆதலால், அதன் காரணமாகவே அவரை இறைவன் சோதனைக்கு உட்படுத்தி இறுதியில் ஈமான் இல்லாமல் மரணிக்கச் செய்தான். அபூஸயீத் அப்துல்லாஹ் இப்னு அபீ இஸ்ரூன் என்பவர், மேற்கண்ட கௌதைத் தோற்கடிக்க விரும்பவில்லை. அவருக்கு எந்த அளவு கல்வித் திறமை இருக்கிறது என்று சோதிக்க விரும்பினார். இது எதிர்ப்பு அல்ல, ஆனால், பெரியோர்களிடம் நடந்து கொள்ள வேண்டிய மரியாதைக்கு மாறானது. இவருடைய ஒழுக்கக் குறைவுக்காக இவர் மிதமாக தண்டிக்கப்பட்டார். அரசாங்க அலுவல்களில் பண வரவு சிலவுகளைக் கவனிக்க வேண்டிய பதவியை அவர் வகித்தார். இதில் சிறு தவறு ஏற்பட்டாலும் அரசாங்கத்தை மோசடி செய்த குற்றத்துக்கு உட்படுத்தப்பட்டு சிறை தண்டனையுடன் தம்முடைய சொந்த சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட வேண்டிய நிலையிலும் இருந்தார்.

ஸெய்யிதுனா ஷெய்கு அப்துல் காதிரில் ஜீலானி குத்திஸ ஸிர்ருஹூ அவர்கள் இளமையிலிருந்தே பெரியோர்களை கண்ணியப்படுத்தும் பண்பினராக இருந்ததால் அல்லாஹு தஆலாவினுடையவும் ரசூலினுடையவும் சந்தோஷத்துக்கு ஆளாகி கௌதாகவும், குதுபுல் அக்தாபாகவும், பர்தே காமிலாகவும் ஆகி, உலக மக்களால் இறுதி நாள் வரை போற்றப்படும் பெருங் கண்ணியத்தைப் பெற்றுக் கொண்டார்கள்.

இக்காலத்தில் ஒரு சிலர் கல்வியின்மையால் கண்டவர்களை எல்லாம் ஒலி என்று கூறி, அளவுக்கு மீறி மரியாதை செய்து, இறுதியில் ஏமாற்ற மடைகின்றனர். இதற்கு நேர்மாறாக மற்றொரு கூட்டத்தினர் அவ்லியா எதிர்ப்பு இயக்கம் என்று பெயர் வைத்துக் கொண்டு உயிருடன் வாழ்கின்ற

ஒலிமார்களையும் இவ்வுலகைவிட்டு மறைந்த ஒலிமார்களையும் பற்றித் தகாத வார்த்தைகளைக் கூறியும் எழுதியும் வருகின்றனர். இவ்விரு சாராரும் தவறான வழியைக் கடைப்பிடித்து இறைவனின் கோபத்துக்கு ஆளாகின்றனர். ஆதலால், இவ்விரண்டுக்கும் பொதுவான நடு வழியைக் கடைப் பிடிப்பதே சிறந்தது. எனவே, ஒலிமார்களுக்குரிய மரியாதையைக் குறைவின்றிச் செய்ய வேண்டும். ஆனால், ஒலிமார்களைச் சுலபமாக அறிந்து கொள்ள முடியாததால், எவரையும் அவமதிக்காமல் மரியாதையுடன் பேசவும் எழுதவும் வேண்டும். குறிப்பிட்ட ஒருவரை ஒலி என்று ஒப்புக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயமில்லை. ஆதலால், ஒலி என்று பலரால் மதிக்கப்படுகிற ஒருவரை ஒலி என்று நம்ப மனம் இடங் கொடுக்காவிடின், அவரை ஒலி என்று நம்பாமல் இருந்து விடலாம். அதற்காக அவரைக் குறித்துத் தகாத விதமாகப் பேச வேண்டியதில்லை. ஆதலால், நாவையும் பேனாவையும் பேணிக் கொள்ள வேண்டும். எல்லாம் வல்ல இறைவன் யாவருக்கும் நேர் வழி காட்டுவானாக ஆமீன். யாரப்பில் ஆலமீன்.

وَصَلَّى اللهُ تَعَالَى وَسَلَّمَ عَلَى خَيْرِ خَلْقِهِ سَيِّدِنَا وَنَبِيِّنَا وَمَوْلاَنَا مُحَمَّدٍ

وَعَلَى الِهِ وَصَحْبِهِ اَجْمَعِيْنَ وَالْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ

# அஸ்ஸலாத்துன்னாரிய்யாவின் சிறப்பு

திருக்குர்ஆன் விரிவுரையாளர் : அல்லாமா
**எஸ்.எஸ்.முஹம்மது அப்துல் காதிர் பாக்கவி,** உத்தமபாளையம்

முஜர்ரபான அனுபவப் பூர்வமான கைகண்ட பலன் அளிக்கிற ஸலவாத்துகளில் **ஒன்றாகும்.** இதற்கு அஸ்ஸலாத்துத் **"தப்ரீஜிய்யத்துல்" "கர்த்தபிய்யா"** என்று சொல்லப்படும். மொரோக்கோ, டூனிஸ், அல்ஜீரியா போன்ற மேற்கு முஸ்லிம் நாடுகளில் இதற்கு அஸ்ஸலாத்துன்னாரிய்யா என்று பெயர். இந்த ஸலவாத்து ஸ்பெயின் நாட்டு முக்கிய நகரங்களில் ஒன்றாக அக்காலத்தில் இருந்த கர்த்தபா நகரில் வாழ்ந்த ஒரு பெரியார் இதனை எழுதினார். இவரை இஸ்லாமிய நூல் உலகம் அல்இமாமுல்கர்த்தபீ என்ற சிறப்புப் பெயரால் அழைக்கிறது. இந்த ஸலவாத்தைக் குறித்து அவர் கூறியிருப்பது வருமாறு:

"பிரம்மாண்டமாக முக்கிய காரியம் கைகூட வேண்டும் என்றோ நிரந்தரமான தொல்லை விலக வேண்டுமென்றோ விரும்புபவர் இந்த ஸலவாத்துத் தப்ரீஜிரியாவை நான்காயிரத்து நானூற்றி நாற்பத்து நான்கு முறை **(4444)** ஓதி மகத்தான நற்குண சீலரான நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை வஸீலாவாக வைத்து பிரார்த்தித்தால் அவருடைய நிய்யத்துக்கு இணக்கமாக அவர் நாட்டத்தை அல்லாஹ் நிறைவேற்றுவான்"

இந்த எண்ணிக்கைக்கு மகத்தான வசிய சக்தி இருக்கிறது. இதன் காரணமாக நல்ல பலன் கிடைக்கிறது என்று இந்த ஸலவாத்தின் சிறப்பு பற்றி அல் இமாம் இப்னு ஹஜர் அல் அஸ்கலானி (ரஹ்) கூறியிருப்பதாக "அஸ்ராருஸ் ஸலாத்" என்ற நூலில் எழுதப்பட்டிருக்கிறது.

**பலன்கள் :** ஒவ்வொரு தொழுகைக்குப் பிறகும் பதினோரு முறை ஓதி வந்தால் அதாவது இதனை விர்தாக ஏற்படுத்தி ஒவ்வொரு தொழுகைக்குப் பிறகு பதினோரு முறை தவறாமல் தொடர்ந்து ஓதி வருகிறவருக்கு அவருடைய ரிஸ்கு கிடைப்பதில் தடைபடாது. உயர்ந்த அந்தஸ்துகளையும் பெரும் செல்வத்தையும் அடைவார் என்று அல் இமாம் அத்தைனூரி(ரஹ்) கூறியுள்ளார்கள்.

2. தினசரி ஸுப்ஹு தொழுகைக்குப் பிறகு நாற்பத்து ஒரு முறை இந்த ஸலவாத்தை ஓதி வருபவர் தமது நாட்டத்தைப் பெற்றுக் கொள்வார்.

3. ஒவ்வொரு நாளும் இந்த ஸலவாத்தை ஓதி வருபவர் தாம் நினைத்ததற்கு மேல் அதிகமாக தன் நாட்டத்தைப் பெற்றுக் கொள்வார்.

4. முர்ஸலான நபிமார்களின் எண்ணிக்கை அளவு அதாவது முன்னூற்று பதின்மூன்றறு விடுத்தம் தினசரி ஓதிவருபவருக்கு ஞான இரகசியங்கள் வெளியாகும். அவர் நாடுகிற ஒவ்வொன்றையும் கண்டு கொள்வார்.

5. தினந்தோறும் இந்த ஸலவாத்தை ஆயிரம் முறை ஓதி வருபவர் வர்ணிப்பவர் முடிக்க இயலாத அளவிலும், கண்பார்ப்பதற்கு அதிகமான அளவிலும், செவிகள் கேட்டவைகளுக்கும் மேலான அளவிலும் மனிதனுடைய இதயத்தில் உதயமாகிற எண்ணங்களுக்கும் அதிகமான அளவிலும் இரு உலக பாக்கியங்களை அடைவார்.

6. இந்த ஸலவாத் தினசரி பதினோரு முறை ஓதிவருபவருக்கு பத்து வானிலிருந்து இறங்குவது போலும் புவியிலிருந்தும் முளைப்பது போலும் பெருகும் என்று அஷ்ஷெய்கு முஹம்மத் தூனிஸிய்யு(ரஹ்) கூறியுள்ளார்.

மேற்கு முஸ்லிம் நாடுகளான மொரோக்கோ, டூனிஸ், அல்ஜீரியா போன்ற நாடுகளில் ஒரு காரியத்தைக் குறித்து இந்த ஸலவாத்தை ஓத நாடினால் பலர் ஒன்று கூடி சேர்ந்திருந்து 4444 தடவை ஓதுவது வழக்கம். தமிழ்நாட்டிலும் சில இடங்களிலும் இந்த ஸலவாத்து மேற்சொன்னவாறு கூட்டாகச் சேர்ந்து 4444 தடவை தலைசிறந்த வண்ணம் ஓதுகின்றனர். இதன்பலனை அதி விரைவில் அடைகின்றனர். ஒரு முறை இருமுறையல்ல பலமுறை அனுபவ பூர்வமானது முஜர்ரபு.

**ஸல்லல்லாஹு அலா முஹம்மது**
**ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்**

# اَلصَّلَاةُ النَّارِيَّةُ

اَللّٰهُمَّ صَلِّ صَلَاةً كَامِلَةً وَّسَلِّمْ سَلَامًا
تَامًّا عَلٰى سَيِّدِنَا مُحَمَّدِنِ الَّذِيْ تَنْحَلُّ بِهِ
الْعُقَدُ وَتَنْفَرِجُ بِهِ الْكُرَبُ وَتُقْضٰى بِهِ الْحَوَائِجُ،
وَتُنَالُ بِهِ الرَّغَائِبُ، وَحُسْنُ الْخَوَاتِمِ،
وَيُسْتَسْقَى الْغَمَامُ بِوَجْهِهِ الْكَرِيْمِ وَعَلٰى اٰلِهٖ
وَصَحْبِهٖ فِيْ كُلِّ لَمْحَةٍ وَّنَفَسٍ بِعَدَدِ كُلِّ
مَعْلُوْمٍ لَّكَ